

# வந்தது வசந்தம்

"விண்ணாதி பூதமெலாந் தன்னகத்தில் அடக்கிவெறு

வெளியாய் ஞானக்


கண்ணாரக் கண்டவன்பர் கண்ணூடே ஆனந்தக்

கடலாய் வேறொன்று..."

தாயுமானவரின் கடவுள் வாழ்த்து கம்பீரமான குரலில் வீட்டை நிறைத்தது. ஆதவன் ஒரு நிமிடம் மடியிலிருந்த புத்தகத்தை மறந்து அந்த குரலில் லயித்துப் போனான். பிறந்ததிலிருந்து கேட்டுப் பழகிய குரல்தான் என்றாலும் ஒவ்வொரு முறை கேட்கும் போதும் புதிதாய் கேட்பது போல் மனதை சிலிர்க்கச் செய்கிறது.

"பஞ்ச பூதங்களையும் தன்னுள் அடக்கி வெட்டவெளியாய் நிற்கும் சிவனை..." சங்கரன் பாடலுக்கு விளக்கம் சொல்லிக் கொண்டு போக, எதிரில் அமர்ந்திருந்த மாணவர்களும் கட்டுண்டவர்களாய் இருந்தனர். சங்கரனுக்கு புறஉலகமே மறந்து போய் தன்னுடைய வார்த்தைகளில் தானே மூழ்கிப் போனார். அரசுப் பள்ளியில் தமிழ் வாத்தியாரான அவர் வருடாவருடம் இதே பாடத்தை நடத்தினாலும் ஒவ்வொரு முறையும் புதிதாக சொல்வது போல் உணர்ச்சி ததும்ப விவரித்துக் கொண்டு போவது ஆதவனுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தும்.

அரைகாசு உத்தியோகம் என்றாலும் அரசு உத்தியோகம் என்ற திருப்தியிலேயே வாழ்ந்து



– தமிழ் நிவேதா

விட்டவர் சங்கரன். அவர் மனைவி வாசுகி கணவன் தரும் பணத்திலேயே செலவுகளை சுருக்கவும், சேமிக்கவும் கற்றுக் கொண்டவள். இரண்டு பையன்களும் வளர்ந்து பெரியவனான பிறகும் அவள் எதற்கும் முணுமுணுத்து யாரும் கேட்டதில்லை. அவளது விருப்பங்களும், தேவைகளும் மிக எளிமையானவை.

மூத்தமகன் சரவணன் அப்பாவை பின்பற்றி படித்து முடித்தபின் அரசு கல்லூரியில் ஆசிரியரானான். அதில் சங்கரனுக்கு மிகவும் திருப்தி. விடியற்காலையில் சங்கரன் பூஜை செய்கையில் சரவணன் கூட நின்று கந்தபுராணமும், விநாயகர் மாலையும் கணீரென்ற குரலில் பாடுகையில் தன் அக்மார்க் வாரிசு இவன்தான் என்ற பெருமிதம் சங்கரன் முகத்தில் தெரியும். பரிட்சைக்கு படித்துக் கொண்டிக்கும் ஆதவன் இன்றாவது இவன் சத்தமில்லாமல் பூஜை செய்யக் கூடாதா என்ற எரிச்சலுடன் காதை பொத்தியபடி அபிராமி அந்தாதிக்கு போட்டியாக உரத்தக்குரலில் படிக்கத் தொடங்குவான். கண்ணம்மா அத்தைதான் ஆதவனின் கோபம் புரிந்தவளாய் தலைவாசலுக்கும் நடைக்கும் இடையிலிருக்கும் கதவை மூடுவாள்.

"என்ன கண்ணம்மா, காலங்காத்தால இப்படி நடையை சாத்தினா எப்படி உள்ளே போறது?" என்பார் சங்கரன்.

"பின் வழியா போனா போறது அண்ணா. பாவம் குழந்தை உயிரைக் கொடுத்து பரிட்சைக்கு படிக்கிறான்'' என்பாள் கண்ணம்மா அத்தை.

"பாடத்துல கவனம் இருந்தா பக்கத்துல இடி இடிச்சா கூட எதிலும் கவனம் செல்லாது. பூஜை செய்யறது தொந்தரவுன்னு நினைச்சா படிப்பு மேல சிரத்தை இல்லேன்னு அர்த்தம்" என்பார் அப்பா வாத்தியாராய்.

"சின்னவன்தானே! உங்களை மாதிரி பக்குவம் இன்னும் வரல" என்பாள் அத்தை அப்பாவை சமாதானப்படுத்தும் விதமாய்.

சங்கரன் எது செய்தாலும் சரி என்ற மெத்தனத்துடன் அம்மாவும், அண்ணனும் இருக்க, ஆதவன் மட்டும் அந்த வீட்டில் மாறுபட்ட சிந்தனைகளுடன் வளர்ந்தான். ஆதவன் பிளஸ்டூ முடித்ததும் டிகிரி முடித்து விட்டு பி.எட். படிக்கலாம் என்றார் சங்கரன். ஆதவனுக்கு சிறுவயதிலிருந்தே கணிதமும், அறிவியலும் விருப்பப்பாடமாக இருந்தது. பிளஸ்டூவில் பயாலஜியிலும், வேதியியலிலும் அவன் முழு மதிப்பெண்கள் பெற்றிருந்ததால் அவனது ஆசிரியர்கள் அவனை மருத்துவப்படிப்பில் சேர சொன்னார்கள். "அதெல்லாம் நம்மால் முடியுமா?" என்றார் சங்கரன் மலைப்புடன். "ஏன் முடியாது? நான் நல்ல மார்க் வாங்கியிருக்கிறேன். அரசாங்க கல்லூரியிலேயே இடம் கிடைக்கும்" என்றான் ஆதவன் நம்பிக்கையுடன்.

"அரசு கல்லூரியில் என்றாலும் கூட நிறைய செலவாகத்தான் செய்யும். நம்மைப் போன்ற நடுத்தரக் குடும்பம் சென்னையைப் போல ஒரு பெருநகரத்தில் குடும்பம் நடத்துவதென்பது கழைக்கூத்தாடி கம்பிமேல் நடப்பதை போலத்தான். ஏறிக்கொண்டே போகிற விலைவாசிக்கும், எதிர்பாராமல் வந்து சேர்கிற செலவுகளுக்கும் இடையே எப்போதும் போராட்டம்தான். வாழ்க்கையில் ஆசைப்பட்டதை எல்லாம் நாம் அடைய முடியாது. கிடைக்கிற விஷயத்துக்குத்தான் ஆசைப்பட பழகிக் கொள்ள வேண்டும். உனக்கு அறிவியல் நல்லா வருது இல்லையா? அதையே மெயின் சப்ஜெக்டா எடுத்துட்டு பி.எஸ்சி. பிஸிக்ஸோ, பாட்டனியோ படி" என்றார் சங்கரன் முடிவாக.

ஆதவனிடம் பாடத்தில் சந்தேகம் கேட்டு சுமாரான மார்க் வாங்கி பாஸ் செய்த அவனது நண்பர்கள் எல்லாம் டாக்டருக்கும், என்ஜினியருக்கும் பணம் கட்டி படிக்கப் போனார்கள். ஆதவன் அப்பா வாங்கி வந்த பி.எஸ்சி. அப்ளிகேஷனை நிரப்பி கொடுத்து விட்டு நாள் முழுக்க அறைக்குள் அடைபட்டு கிடந்தான். அம்மாவும், அண்ணனும் எத்தனை கெஞ்சியும் இரண்டு நாள் கதவை திறக்க வில்லை. அத்தைதான் அவனை கெஞ்சி கெஞ்சி சமாதானம் செய்தாள். என்றாலும் சமாதானமின்றியே கல்லூரி போய் வந்தான்.

ஒரு மாலை வேளையில் படிப்பில்

கவனமின்றி புத்தகத்தை புரட்டியபடி ஆதவன் அமர்ந்திருந்த போது கண்ணம்மா வந்து அவன் அருகில் அமர்ந்தாள். "எல்லா தோல்விக்கு பிறகும் ஒரு வெற்றியும், வருத்தங்களுக்கு பிறகு ஒரு மகிழ்ச்சியும் இருக்கும் ஆதவா. கடவுள் காரண காரியங்கள் இல்லாமல் எதையும் செய்வதில்லை. இன்னிக்கு பிளஸ்டூ முடிக்கிறவங்களில் பாதிக்கு மேல் டாக்டராகவோ என்ஜினீயராகவோத்தான் போறாங்க. நீயும் அப்படி போயிருந்தால் எல்லாரிலும் ஒருத்தனாகத்தான் இருந்திருப்பாய். நீ சாதிக்கப் பிறந்திருக்கிறாய் ஆதவா. அதனால்தான் நீ டாக்டராகவில்லை."

"போதும் அத்தை. இந்த குடும்பத்தின் இயலாமையை மறைக்க தத்துவம் பேசாதீர்கள்" என்றான் ஆதவன் கோபத்துடன்.

"தத்துவம் இல்ல ஆதவா, உண்மை. பதினேழு வயசில் கல்யாணம் எனக்கு. பத்து வருஷம் உன் மாமாவுடன் சந்தோஷமா குடும்பம் நடத்தினேன். ஆனாலும் ஒரு குழந்தை பிறக்கலேயங்கற குறை மட்டும் இருந்தது. திடீர்னு ஒரு நாள் நெஞ்சுவலின்னு உன் மாமா போனப்புறம் எனக்கு உலகமே இருண்டுபோன மாதிரியாயிடிச்சி. இளம் விதவையா தாய்வீடு திரும்பின சமயம்தான் நீ பிறந்தாய். சரவணன் பிறந்த சமயத்திலேயே உன் அம்மாவுக்கு கருப்பை கோளாறு இருந்தது. நீ பிறந்த சமயம் ரொம்பவும் முடியாமல் போக, உன்னை வளர்க்கும் பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டேன். அண்ணி என்னை பெறாமலே தாயாக்கி விட்டாள். உன் குழந்தை சிரிப்பைப் பார்த்ததும் என் இழப்புகள் எல்லாம் மறைந்தே போயின" அத்தை புடவைத் தலைப்பால் கண்களை துடைத்துக் கொள்ளவும் ஆதவன் நெகிழ்ந்து போனான்.

"இப்ப எதுக்கு இந்த பேச்செல்லாம்?" என்றான் ஆதரவுடன் அத்தையின் தோளை அணைத்து.

மென்மையுடன் மருமகனைப் பார்த்து புன்னகைத்த கண்ணம்மா சொன்னாள். "நீ ரொம்ப புத்திசாலி ஆதவா. நிச்சயமா உனக்கு நல்ல எதிர்காலம் இருக்கு. உங்க மாமா பொண்ணுக்கு கல்யாணம்னு நானும், அண்ணியும் போயிருந்தோம் நினைவிருக்கிறதா உனக்கு? அந்த மாமாவோட தம்பி பையன் ஐ.ஏ.எஸ்.க்கு படிக்கிறானாம். இத்தனைக்கும் அவன் உன் அளவுக்கு படிக்க மாட்டான். நீ ஐ.ஏ.எஸ். எழுதினால் கண்டிப்பாய் பாஸாவாய். இனி அதற்கு முயற்சி செய் ஆதவா."

ஒரு நிமிடம் முகம் மலர்ந்த ஆதவன் மறுபடியும் முகம் மாறினான்.

"ஐ.ஏ.எஸ். படிக்கவும் நிறைய செலவாகும் தெரியுமா?"

"தெரியும்டா. நல்லாவே தெரியும். அதைப் பத்தி நீ கவலைப்படாதே. படிக்கிற வேலையை மட்டும் பார். பணவிஷயத்தை நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றாள் அத்தை.

"திடீர்னு உனக்கு புதையல் ஏதாவது கிடைத்ததா அத்தை?" என்றான் ஆதவன் வியப்புடன்.

அத்தை சிரித்தாள். "நானும், மாமாவும் குடியிருந்த வீட்டை வாடகைக்கு விட்டிருந்தோம் இல்லையா? அதை விற்றுவிட ஏற்பாடு செய்திருக்கிறேன். நீ பிளஸ்டூ முடிக்கும் சமயத்திலேயே சொல்லி வைத்திருந்தேன். ஆனால் உடனே விற்க முடியவில்லை. அங்கே இருக்கும் உன் மாமாவின் உறவினர்கள், வாரிசு இல்லாத சொத்தை ஆளுக்கு கொஞ்சம் அனுபவிக்கலாம் என்ற எண்ணத்தில் சொந்தம் கொண்டாடினார்கள். அவர்களை எல்லாம் சமாளித்து விற்பதற்குள் ரொம்ப சிரமமாக போய்விட்டது. அண்ணா கூட உனக்கு இப்போது என்ன செலவு? எதற்காக விற்கிறாய் என்று கோபித்துக் கொண்டார்."

மாமாவின் பூர்வீக வீடு ஒன்று காஞ்சிபுரத்தில் இருந்தது. அத்தைக்கு மாதாமாதம் அந்த வீட்டு வாடகை வந்து கொண்டிருந்தது. ஆதவன் பள்ளி விடுமுறை நாளில் அத்தை வாடகை வாங்க போகும் போது கூட போயிருக்கிறான். தொட்டிகட்டின பழைய கால காரை வீடு அது. அத்தைக்கு மாமாவுடன் வாழ்ந்த வாழ்க்கையின் ஞாபக சின்னமாகவும், கைச்செலவுக்கு உதவியாகவும் இருந்தது அந்த வீடு. அந்த பணத்தில் அத்தை பூஜைக்கும் கோவிலுக்கும் செலவழித்தது போக வீட்டிற்கும் சாமான்கள் வாங்கிப் போடுவாள். அந்த வீட்டையா விற்கப் போகிறாள்?

"வீட்டை வித்துட்டா செலவுக்கு என்ன செய்வீங்க? உங்களுக்குன்னு இருந்த ஒரே சொத்தாச்சே!" என்றான் ஆதவன் கவலையுடன்.

"எனக்கு என்ன செலவு ஆதவா? சாப்பாடும், துணியும் ஒரு தகப்பனா இருந்து அண்ணன் எனக்கு கொடுத்திடறார். நாளைக்கு ஒரு நோய் நொடின்னு வந்து எனக்கு முடியாம போனா நீயோ, சரவணனோ பார்க்க மாட்டீங்களா என்ன? எனக்கு பிறகு எப்படியும் உங்களுக்கு வரப்போகிற வீடு.. இப்பவே உபயோகப்படட்டுமே!"

"என்ன இருந்தாலும் விற்பதற்கு முன் என்னிடம் ஒரு வார்த்தை சொல்லியிருக்கலாம் அத்தை" என்றான் ஆதவன் சமாதானமாகாமல்.

"நீ படித்து நல்ல பதவியில் அமர்ந்தால் இதை விட நல்ல வீடாக வாங்கலாம் ஆதவா. சரவணனிடம் அவன் பங்கு பணத்தை கொடுத்தபோது அவன் கூட இதைத்தான் சொன்னான். 'எந்த காரியத்திற்காக வீட்டை விற்றீர்களோ அதை முதலில் பாருங்கள் அத்தை. ஆதவன் படிப்பு முடிந்து செட்டில் ஆனபிறகு மீதி பணத்தை என்ன செய்வதென்று யோசிக்கலாம்' என்று சொல்லி விட்டான்.

அதனால் இனி இதைப் பற்றி நாம் பேச வேண்டாம்" என்றாள் அத்தை.

இப்போது நினைக்கையில் அத்தையின் உதவியும், சரவணனின் பெருந்தன்மையும் இல்லை என்றால் தான் என்னவாகியிருப்போம் என்று எண்ணிப் பார்க்கவே முடியவில்லை. உதவிக்கு ஆள் இருக்கும் தெம்பில் ஆதவன் பி.எஸ்சி. நல்ல மதிப்பெண்களுடன் தேறி எம்.எஸ்சி.யில் சேர்ந்தான். அப்பா பி.எட். படி என்றபோது "முதலில் அவன் விருப்பப்படி படித்து முடிக்கட்டுப்பா. வேலையைப் பற்றி பிறகு யோசிக்கலாம்" என சரவணன் சிபாரிசுக்கு வந்தான்.

"உன் அத்தையுடன் சேர்ந்து நீயும் இவனை கெடுக்கத் தொடங்கியிருக்கிறாயா?" என்ற சங்கரன் மேற்கொண்டு எதுவும் பேசவில்லை.

ஆதவன் எம்.எஸ்சி. படிப்புடனேயே ஐ.ஏ.எஸ். படிப்பிற்கு தேவையான புத்தகங்களையும், தகவல்களையும் சேகரித்தான். அவனுக்கு முன்னால் சிவில் சர்வீஸ் தேர்வு எழுதியிருந்தவர்களை சந்தித்து விவரம் கேட்டான். இயல்பாகவே கெட்டிக்கார மாணவன் மேல் பிரியம் வைக்கும் ஆசிரியர்கள், ஆதவன் மேலும் அந்த பிரியத்தை காட்டி உற்சாகப்படுத்தினர்.

"வாசுகி, கதவை தாழ் போட்டுக்கோ... நா கொஞ்சம் நடந்துட்டு வரேன்" என்ற அப்பாவின் குரல் கேட்கவும், ஆதவன் சுயநினைவுக்கு வந்தான். பாடம் முடிந்து மாணவர்கள் கிளம்பிப் போயிருந்தனர். கூடம் வெறிச்சோடியது.

அப்பா வேலையில் இருந்து ஓய்வு பெற்ற பிறகு மாலையில் படிக்க வரும் இந்த மாணவர்களும், அவருடன் வேலை பார்த்து ரிட்டையர்டு ஆன நண்பர் சதாசிவமும், தெருமுனை வாசக சாலையும்தான் பெரிய பொழுதுபோக்குகள். வாசக சாலையில் பேப்பர் படித்து விட்டு அருகிலுள்ள பார்க்கில் அமர்ந்து நாட்டுநடப்பை அலசுவார்கள். தினமும் பார்த்து பழக்கமான வாக்கிங் போகும் நண்பர்கள் சிலரும் அவர்களுடன் வந்து சேர்ந்து கொள்வார்கள். இரவு வீடு திரும்பி சாப்பிட்ட பிறகு டி.வி.யில் செய்திகளை பார்த்துவிட்டு அப்பா படுக்கப் போனார் என்றால் அவருடன் சேர்ந்து வீடும் படுத்துவிடும். உள் அறையில் படிக்கும் ஆதவன் கூடத்திலிருந்து தண்ணீர் மொண்டு குடித்தால் கூட அம்மா கிசுகிசுப்பாக சொல்வாள்.

"அப்பா தூங்கப் போயாச்சு ஆதவா. பாத்திரத்தை உருட்டாமல் சப்தம் எழுப்பாமல் தண்ணீர் குடி."

அம்மாவிற்கென்று தனிப்பட்ட யோசனைகளே இருக்காதா? அல்லது அவற்றை அடக்கி ஆளப் பழகியிருக்கிறார்களா என அம்மாவைப் பார்க்கும்போதெல்லாம் வியப்பு ஏற்படும்.

ஒருமுறை அத்தையிடம் கேட்டபோது அவள் சொன்னாள். "அந்த காலத்து வளர்ப்பு முறை அப்படித்தான் ஆதவா. அதிகம் படிப்பின்றி, வெளியே சென்று வர சுதந்திரமின்றி வளர்க்கப்படும் பெண்களுக்கு சமையலும், கைவேலையும் சொல்லிக் கொடுக்கிற மாதிரி 'கணவன் மனசறிஞ்சு நடந்துக்கோ'ன்னும் சொல்லித் தருவாங்க. பெண்ணாக பிறந்ததே ஒரு ஆணுக்கு சேவை செய்வதற்குத்தான் என்ற மனநிலையிலேயே வளரும் பெண்களுக்கு தன்னைப் பற்றி எண்ணிப் பார்க்கக்கூட தோணாது. தன்னையே உணராதவர்களுக்கு தனித்துவம் எங்கிருந்து வரும்?"

ஆதவன் அமைதியாய் இருக்க, சற்று யோசனைக்கு பிறகு அத்தையே சொன்னாள். "ஒரு வகையில் அதுகூட நல்லதுதான் ஆதவா. சொந்தக் கால்ல நிற்கறோம்னு சொல்லிட்டு இந்த காலத்து பொண்ணுங்க எல்லாம் அதிகப்படி சுமையை தங்கள் முதுகுல ஏத்திகிட்டாங்க. வீட்டு வேலையும் பாத்துட்டு, ஆபீஸ் வேலையும் பாக்கணும். கூட்டுக்குடும்ப முறை உடைஞ்சு போயிட்டதால குழந்தைகளை தானே பராமரித்தாக வேண்டிய கட்டாயம் வேறு. எங்களுக்காவது காலுக்கு மட்டும்தான் விலங்கு போடப்பட்டிருந்தது. இன்னிக்கு பொண்ணுங்க கால் விலங்கை உடைச்சி வெளியே வந்து உடம்பெல்லாம் விலங்கோட நடமாடறாங்க."

ஆதவன் மறுப்புடன் தலையசைத்தான். "நீங்க சொல்றது தப்பு அத்தை. சுயமரியாதையுடன் வாழ்வதும், சொந்தக் காலில் நிற்கிறோம் என்ற திடமும் எல்லாவற்றையும் சமாளிக்கிற தெம்பைக் கொடுக்கும்" என்றவன் வீட்டினுள் ஒரு பார்வை பார்த்துவிட்டு சொன்னான். "அடிப்படை உரிமைகளை நிறைவேற்றிக் கொள்ளக்கூட சுதந்திரம் இல்லாத இடத்தில் மூச்சு முட்டித்தான் போகும். அறுத்துக் கொண்டு வெளியே ஓடத்தான் தோன்றும்"

அவன் முகத்தின் தீவிரத்தையும், குரலின் அழுத்தத்தையும் பார்த்த அத்தை, "இது உன்னுடைய வீடு ஆதவா. இங்கிருப்பவர்கள் உன்னுடைய மனிதர்கள். நேர்மை, எளிமைன்னு சமூக, சம்பிரதாய ஒழுக்கங்களுக்கு கட்டுப்பட்டு வாழ்பவர்கள். நீயாக இந்த வீட்டைப் பற்றி எதுவும் கற்பனை செய்து கொள்ளக் கூடாது" என்றாள்.

ஆதவன் பதில் பேசாமல் தரையை வெறித்தான்.

## 2

"ஆதவா, சாப்பிட வா"

அம்மாவின் குரலுக்கு செருப்புக்குள் காலை

நுழைத்தபடியே ஆதவன் பதில் சொன்னான்.

"எனக்கு இன்னிக்கு சீக்கிரம் போகணும். மதிய சாப்பாடு கையில் இருக்கிறது... போதும்."

"இரு ஆதவா" என அவன் அருகில் வந்த சரவணன், பைக் சாவியை அவனிடம் கொடுத்தான். "என் பைக்கை எடுத்துட்டு போ"

"உனக்கு வேணுமில்லையா?"

"எனக்கு உன்னை மாதிரி விழுந்தடிச்சி ஓடணுமா என்ன? வீடு விட்டா காலேஜ், காலேஜ் விட்டா வீடு. சாயங்காலம் அம்மாவோட இங்கயிருக்க கோவிலுக்கு போவேன். எனக்கெதுக்கு பைக்? நான் முதல்மாசம் சம்பளம் வாங்கியதும் பைக் வாங்கினதே உன்னை மனசில வெச்சிட்டுதான்."

"தேங்க்ஸ்" என்றான் ஆதவன் நன்றியுடன்.

"இப்போ சாப்பிடலாம் இல்லையா? போய் சாப்பிடு" சரவணன் புன்னகைக்கவும், அம்மா எடுத்து வைத்திருந்த இட்லிகளில் இரண்டை விழுங்கி விட்டு ஆதவன் வெளியே விரைந்தான்.

"இந்த பிள்ளைக்கு மட்டும் எப்பவும் அவசரம்தான். சரியா சாப்பிடாம, வேளைக்கு தூங்காம என்ன படிப்போ! சரவணனும்தான் படிச்சான், இப்படி இருக்கலையே" வாசுகி தன் நாத்தனாரிடம் அங்கலாய்த்தாள்.

"பெரிய படிப்பு படிக்கிறான் அண்ணி. இப்பெல்லாம் முன்னமாதிரி இல்லையே. போட்டி அதிகம். ரொம்ப சிரமப்பட்டுத்தான் முன்னேற வேண்டியிருக்கு" என்றாள் கண்ணம்மா அண்ணிக்கு விளக்கும் விதமாக.

"என்னவோ அவன் சொல்றதெல்லாம் உனக்குத்தான் வேதவாக்கு" என்ற வாசுகி அத்துடன் அந்த விஷயத்தை மறந்து போனவளாக "இந்த வெண்டைக்காயை புளிக்கறி பண்ணலாமா பார்" என தன் வழக்கமான வேலையில் ஆழ்ந்தாள்.

ஆதவன் தன் கையிலிருந்த வாட்ச்சைப் பார்த்தான். வகுப்பு தொடங்க இன்னும் பதினைந்து நிமிடங்கள்தான் இருந்தன. தன் முன்னால் நீண்டிருந்த வாகனங்களைப் பார்த்தான். ஸ்டெர்லிங் ரோடு நீளத்திற்கும் வாகனங்கள் நின்றிருந்தன. இன்று அவன் முடித்தாக வேண்டிய அஸைன்மென்ட் பாக்கியிருக்கிறது. காலையில் முடித்துவிட்டு மாலையில் லைப்ரரி போக வசதியாய் இருக்கும் என்றுதான் நேரத்திலேயே கிளம்பினான். சரவணனிடம் பேசியதில் நேரம் வீணானது போக, இந்த டிராபிக் வேறு.

சென்னை வெயிலில் இரு சக்கர வாகனத்தில் ஒவ்வொரு சிக்னலிலும் காத்திருந்து வியர்வையில் உடல் நனைய ஹெல்மெட்டும், கைகளில் நீண்ட க்ளவுஸுமாக பயணிப்பவர்களுக்கு நரகத்தை இறந்த பிறகு தெரிந்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. ஒரு முறை கோயம்பேட்டிலிருந்து பாரிமுனை வரை பயணித்தால் பூமியிலேயே தெரிந்து கொள்ளலாம். காலையில் ப்ரெஷ்ஷாக குளித்து, பாடி ஸ்ப்ரேயும் பர்ப்யூமும் மணக்க கிளம்பியவனின் சலவை உடை உடம்புடன் ஒட்டி கசகசக்க தொடங்கும் சமயம் சிக்னலில் பச்சை விளக்கு எரிந்தது. ஆதவன் அவசரமாக வண்டியை கிளப்பினான். சிக்னலைத் தாண்டி வலதுபுறம் காலேஜ் ரோடு திரும்புகையில் தெருவோரம் சின்ன கும்பல் நின்றிருந்தது.

ஆதவன் தன்னையறியாது வண்டியின் வேகத்தை குறைத்தான். கும்பலுக்கு நடுவேயிருந்து டெனீம் ஜீன்ஸும், வெள்ளை பனியனுமாய் ஒரு பெண் வேகமாக ஓடி வந்தாள். அவள் கைகளிலும் உடையிலும் திட்டுத்திட்டாக ரத்தம் படிந்திருந்தது. அந்த வெளீரென்ற உடலில் தெறித்திருந்த ரத்தம் ஹோலி விளையாடி விட்டு வந்தவளை போலிருக்க, அவள் அவசரமாக கைகளை அசைத்து ஆதவனின் வண்டியை நிறுத்தும்படி சொன்னாள். ஆதவன் வியப்புடன் பைக்கை நிறுத்தினான்.

அந்த பெண் வேகமாக ஓடி கும்பலுக்கு

## ஜெர்மனியில்
## வித்தியாசமான சறுக்கு மரம்!

சிறு வயதில் எல்லோருக்குமே சறுக்கு மரம் விளையாடுவது மிகவும் பிடிக்கும். மேற்படிப்பு, வேலை என்று சென்றுவிட்டால் இந்த விளையாட்டை நாம் மறந்து விடுவோம். இருந்தாலும் மனதுக்குள் ஓர் ஆசை ஊஞ்சலாடிக் கொண்டு தான் இருக்கும். எங்காவது தனிமை கிடைக்கும் போது அல்லது பொழுதுபோக்கு இடங்களுக்குச் செல்லும் போது அங்கு சறுக்கு மரம் கண்ணுக்கு



தெரிந்தால் அதில் ஏறி விளையாட மாட்டோமா என்ற ஏக்கம் மனதுக்குள் துளிர்விடும். இது பொதுவாக எல்லோருக்கும் ஏற்படுகிற ஆசை தான் என்றாலும் அக்கம் பக்கத்தவர்களுக்கு அச்சப்பட்டு நாம் சறுக்கு மரம் ஏறி விளையாட தயங்குவோம்.

ஆனால், ஜெர்மனியில் இந்தக் குறையை போக்க மியூனிச் பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்காகவே இரண்டு பெரிய சறுக்கு மரங்களை உருவாக்கியுள்ளனர். மூன்றாம் மாடியில் இருக்கும் மாணவர்கள் இதில் அமர்ந்தால் அடுத்த சில நொடிகளில் கீழே கொண்டு வந்து விட்டு விடும். இதுபோன்ற சறுக்கு மரம் உள்ள பல்கலைக்கழகம் உலகத்திலேயே இது ஒன்று தான். மற்ற பல்கலைக்கழகங்களில் படிக்கட்டுகள், மின்தூக்கிகள் தான் இருக்கும். ஆனால் மினியூச் பல்கலைக்கழகத்தில் வித்தியாசமாக அமைக்கப்பட்டுள்ள இந்த சறுக்கு மரம் மாணவர்களை மட்டுமல்ல அங்குள்ள பேராசிரியர்களையும் வெகுவாக கவர்ந்துள்ளது.

இதுபோன்ற சறுக்கு மரம் எல்லா பல்கலைக்கழகங்களிலும் வராதா என்ற ஏக்கத்தைத்தான் நமக்கு ஏற்படுத்துகிறது. வந்தால் நல்லதுதான். வருமா?

நடுவே விழுந்து கிடந்த ஒரு ஏழு எட்டு வயதுள்ள சிறுமியுடன் வந்தாள். அந்த சிறுமிக்கு காலில் அடிபட்டு ரத்தம் உறைந்திருக்க, சிறுமி வலியால் அலறிக் கொண்டிருந்தாள். துடித்த சிறுமியை பில்லியனில் அமர வைத்து தானும் அமர்ந்து கொண்டதும் "ம்... போ சீக்கிரம்" என்றாள் ஆதவனிடம்.

"எங்கே?" என்றான் ஆதவன் திகைப்புடன்.

"அருகிலிருக்கும் ஏதாவது மருத்துவமனைக்கு போ."

முன்பின் அறிமுகம் இல்லாத, தெருவில் சென்று கொண்டிருப்பவனை நிறுத்தி, அவன் வண்டியில் அனுமதியின்றி அமர்ந்து கொண்டு அவனையே விரட்டும் அந்த பெண்ணை ஆதவன் மிகுந்த ஆச்சரியத்துடன் பார்த்தான். ஹெல்மெட் இடைவெளிக்குள் தெரிந்த அவன் கண்கள் வெளிப்படுத்திய பாவனையை அறிய முடியாத அவள், "என்ன பார்க்கிறாய்? குழந்தைக்கு அடிபட்டிருப்பது தெரியவில்லை உனக்கு? சீக்கிரம் போ" என்றாள் அவனிடம்.

ஆதவன் தன்னையறியாமல் பைக்கை மருத்துவமனைக்குத் திருப்பினான். சைல்ட் டிரஸ்ட் மருத்துவமனை வாயிலில் அவன் வண்டியை நிறுத்தியதும் இறங்கிய அவள், அவன் வண்டியை விட்டு இறங்கி ஸ்டாண்ட் போடுகிறவரை காத்திருந்தாள். அவளது நன்றியைப் பெற்றுக் கொண்டு ஆதவன் கிளம்பத் தயாராக, அவள் அழுது கொண்டிருக்கிற சிறுமியை தூக்கி அவன் கைகளில் வைத்தாள். "குழந்தையை உள்ளே தூக்கி வா. நான் கேஷுவாலிட்டி எங்கே என்று விசாரித்துக் கொண்டு வருகிறேன்."

அந்த சிறுமி குளித்து பலநாட்கள் ஆகியிருக்க வேண்டும். அழுக்கான உடையும், வாரப்படாத தலையுமாய் அவளிடம் ஒரு துர்நாற்றம் வீசியது. ஆதவன் அருவருப்புடன் முகத்தை சுளித்தான். இந்த குழந்தையுடன் தெரிந்தவர்கள் யாராவது தன்னைப் பார்த்தால் என்ன நினைப்பார்கள் என்று தோன்றியது. ஒரு சினிமா ஸ்டாரைப் போல இருக்கும் அந்தப் பெண்ணுக்கும் இந்த சிறுமிக்கும் என்ன தொடர்பிருக்கக் கூடும் என்று அவன் யோசிக்கையிலேயே அவள் திரும்பி வந்தாள்.

"யாருக்கும் மனிதாபிமானம் இல்லை. கடமை உணர்ச்சி இல்லை. தெரு ஓரத்தில் படுத்திருப்பவர்கள் மீது காரை ஏற்றிவிட்டு ஒருவன் நிற்காமல் போகிறான். அடிபட்டவர்களை ஆஸ்பத்திரிக்கு ஏற்றி செல்ல யாரும் முன்வரவில்லை. நாம் அழைத்து வந்தால் இங்கு ஆயிரம் கேள்வி கேட்கிறார்கள். இப்படியே போனால் இந்த நாடு எப்படி உருப்படும்?" படபடவென பொரிந்தபடி அவன் அருகில் வந்த அந்தப் பெண் ஆதவன் அருகிலிருந்த சேரில் அமர்ந்திருந்த சிறுமியை உள்ளே அழைத்துப் போனாள்.

ஹெல்மெட்டை பக்கத்து சீட்டில் வைத்துவிட்டு எழுந்த ஆதவன், "எஸ்கியூஸ்மீ" என்றதும் "யார் நீ?" என்றாள் அந்தப் பெண் அவன் முகத்தைப் பார்த்து.

ஆதவனுக்கு கோபத்திலும், அவமானத்திலும் முகம் சிவந்தது. நன்றாக முட்டாளடிக்கப் பட்டோம் என்ற ஆத்திரத்துடன் அவளை திரும்பியும் பார்க்காமல் வெளியே விரைந்தான். பைக்கை ஸ்டார்ட் செய்து கல்லூரி போய் சேர்ந்த போதும், அதற்கு பிறகும் கூட அவனது கோபம் குறையவே இல்லை. இதுவரை இல்லாத விதமாய் எதிலும் கவனம் செலுத்த முடியாமல் திண்டாடினான்.

***

சுஷ்மா செல்போனில் மணியைப் பார்த்தாள். பன்னிரெண்டு நாற்பது. எதிர்பாராமல் இன்று காலேஜ் கட். ஏற்கனவே அவள் கிளாஸ் டீச்சருக்கு அவள் மேல் ஏக கடுப்பு. இதையும் சேர்த்து வைத்து நாளை நன்றாகத் திட்டப் போகிறார். இன்று காலையில் வழக்கத்தை விட சீக்கிரமாகத்தான் கிளம்பினாள். வழியில் அடிபட்டு அழுதுக் கொண்டிருந்த சிறுமியைப் பார்த்ததும் எல்லாம் மாறிவிட்டது.

அவளை மருத்துவமனைக்கு அழைத்துப் போய் சிகிச்சை அளித்து சாப்பிட வாங்கி கொடுத்து வேலைக்கு சென்றிருந்த அவள் அம்மா வந்ததும் அவளிடம் ஒப்படைத்து விட்டு கிளம்ப நேரமாகி விட்டது.

சுஷ்மா சாலையில் விரைந்த ஆட்டோவிற்கு கையசைத்தாள். அவள் அருகில் நிறுத்திய ஆட்டோ டிரைவர் அவள் உடையிலிருந்த ரத்தத்தைப் பார்த்து தயங்கியதும் அவளுக்கு சிரிப்பு வந்தது. "லிபர்டி போ" என கூறி ஆட்டோவில் ஏறி அமர்ந்த சுஷ்மாவுக்கு காலையில் சந்தித்த இளைஞனின் நினைவு வந்தது.

சாலையில் விரைந்த வாகனங்கள் அந்த தெருவோர சிறுமியை ஏற்ற மறுத்த வேளையில் அந்த இளைஞன்தான் தன்னுடைய பைக்கில் மருத்துவமனைக்கு அழைத்துப் போனான். ஹெல்மெட் அணிந்திருந்ததால் அவன் முகம் அவளுக்கு தெரியவில்லை. மருத்துவமனைக்கு உள்ளே வந்ததும் அவன் ஹெல்மெட்டை கழட்டி இருந்தான். அதனால் அவனைப் பார்த்ததும் அடையாளம் புரியாமல் நீ யார்? என்று கேட்டாள். அதைக் கேட்டதும் அவன் முகம் போன போக்கை நினைத்து அவளுக்கு இப்போதும் சிரிப்பு வந்தது.

பிலிம் டைரக்டர்ஸ் காலனியிலிருந்த அந்த பெரிய வீட்டின் முன் ஆட்டோ நின்றதும் சுஷ்மா ஆட்டோவிற்கு பணத்தை கொடுத்து விட்டு உள்ளே நுழைந்தாள். ஹால் யாருமின்றி வெறிச்சோடி கிடக்க, சமையலறையில் வேலையாய் இருந்த காமுபாட்டி அவளைப் பார்த்ததும் வேலையை அப்படியே விட்டுவிட்டு ஓடி வந்தாள்.

"என்னம்மா, உடையெல்லாம் ரத்தமா இருக்கு?" என்றாள் பதற்றத்துடன்.

"ஒரு நிமிஷம் பாட்டி. குளித்து விட்டு வந்து சொல்கிறேன்" என சுஷ்மா தன் அறைக்கு செல்லவும், பின்னாலேயே வந்த பாட்டி "ஏதாவது ஆக்ஸிடென்டா? டாக்டருக்கு போன் பண்ணட்டுமா?" என்றாள் தொடர்ந்து.

"அடடா, பாட்டி எனக்கு எதுவும் இல்லை. காலேஜ் போகிறவழியில் தெருவில் அடிபட்டுக் கிடந்த ஒரு குழந்தைக்கு உதவி செய்யப் போனேன்."

"உனக்கு எதுக்கு பாப்பா இந்த வம்பெல்லாம்? வீட்டு வாசல்ல கப்பல் மாதிரி எத்தனை கார் நிக்குது? அலுங்காம அதில் போய் வராம, பஸ்சுல போய் இந்த மாதிரி தொல்லையை எல்லாம் ஏன் இழுத்து விட்டுக்கற? ரோட்ல நடந்து போற அத்தனை பேருக்கும் இல்லாத அக்கறை உனக்கு ஏன்? ஏதாவது போலீஸ், கேஸ்னு வந்தா அம்மா, அப்பாவுக்கு எவ்வளவு சங்கடம் தெரியுமா? பத்திரிகைகளில் ஒன்றுக்கு பத்தாக செய்தி வரும். அதுவும் நீ ஒரு பெண் என்பதால் பலதையும் யோசிக்க வேண்டும் பாப்பா."

காமு பாட்டி புத்திமதி கூறும் குரலில் கூறவும், சுஷ்மா அழுத்தமாக பாட்டியின் தோளைப் பற்றினாள். "பாட்டி, நாம் எல்லோரும் சேர்ந்ததுதான் இந்த உலகம். நமக்கெதுக்கு என்று நினைக்க ஆரம்பித்தால் பின் நமக்காக யாருமே இருக்க மாட்டார்கள்."

பாட்டி சுஷ்மாவின் நெற்றியைத் தொட்டு திருஷ்டி கழித்தாள்.

"உன்னுடைய அறிவும் சாமர்த்தியமும் யாருக்கு வரும் பாப்பா? உன் நல்ல மனசால் தேவையில்லாத பிரச்சினைகளில் சிக்கி கொள்ளக் கூடாதே என்ற பயம்தான் எனக்கு"

பாட்டி பேசியபடியே கீழே இறங்கிப் போக சுஷ்மா கதவைத் தாழிட்டு விட்டு ஷவரைத் திருப்பினாள். குளித்து தயாராகி டைனிங் ஹாலுக்கு வந்தபோது சுனந்தா படேல் போர்க்கால் நாசூக்காக சில்லி சிக்கன் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

"மம்மி, இந்த நேரத்தில் அதிசயமாய் வீட்டில் இருக்கிறீர்களே!" என்றாள் சுஷ்மா வியப்புடன்.

"இன்று கிளப் மீட்டிங் கேன்சல் ஆகிவிட்டது. ஈவ்னிங் அப்பாவுடன் ஆடியோ ரிலீஸ் பங்ஷன் இருக்கிறது. சோ, ரெஸ்ட் எடுக்கலாம் என்று வீட்டிற்கு வந்தேன். இன்று நீ காலேஜ் போகவில்லையா?" என்றாள் சுனந்தா படேல்.

"இல்லை" என்றபடி சுஷ்மா சேரில் அமர்ந்ததும் அருகில் நின்றிருந்த வேலைக்காரப் பெண் குறிப்பறிந்து பரிமாறினாள்.

"ரொம்ப நல்லது. ஈவ்னிங் பங்ஷனுக்கு நாமிருவரும் போகலாம்" என்றாள் அவள்.

"எனக்கு இன்னும் இரண்டு நாளில் செமஸ்டர் எக்ஸாம்ஸ் ஆரம்பிக்கப் போகிறது. படிக்க நிறைய இருக்கிறது. என்னால் கண்டிப்பாக வர முடியாது."

"எக்ஸாம்தானே!" என்றாள் சுனந்தாபடேல் அலட்சியத்துடன். "எக்ஸாமில் மார்க் எடுத்து என்ன செய்யப் போகிறாய்?"

"என்ன செய்வேனா? வேலைக்குப் போவேன்."

சுனந்தாபடேல் கையிலிருந்த ஸ்பூனை பீங்கான் பிளேட்டில் தட்டினாள். "இது நல்ல ஜோக். பிரபல சினிமா தயாரிப்பாளர் அரவிந்த் படேலின் பெண் வேலை பார்க்கப் போகிறாளாம்! உன் அப்பா படத்தில் ஸ்டார்களுக்கு தரும் சம்பளமே கோடிகளில். நீ... சில ஆயிரங்களுக்காக இன்னொருவரிடம் போய் வேலை பார்க்கப் போகிறாயா? முட்டாள்தனம்."

"உழைத்து சாப்பிட வேண்டும் என்பது பூமியில் பிறந்த உயிர்களின் அடிப்படை விதி, மம்மி."

"உண்ணவும் உடுக்கவும் இல்லாதவர்கள் உழைக்க வேண்டியது கட்டாயம். இருப்பவர்கள்

அவர்களை நிர்வாகம் செய்வதுதான் புத்திசாலித்தனம்."

"உங்களுடைய உலகம் ஒரு மாயலோகம் மம்மி. இன்று உயரத்தில் இருப்பவர்கள் நாளை பாதாளத்தில் விழலாம். கீழே விழுந்து கிடப்பவன் உச்சியைத் தொடலாம். கல்வியும், சொந்தக்காலில் நிற்க முடியும் என்ற மனோதிடமும்தான் நிரந்தரம்."

"ஸ்டாப் இட் சுஷ்மா. வரவர அதிகப்பிரசங்கி ஆகிவிட்டாய். பெரியவர்களிடம் எப்படி பேசுவது என்பது கூட மறந்து விட்டது உனக்கு" என்றாள் சுனந்தாபடேல் கோபத்துடன்.

"நான் தவறாக எதுவும் சொல்லவில்லை" என்றபடி சுஷ்மா சாப்பிட ஆரம்பிக்க, சுனந்தாபடேல் நாப்கினால் கைகளை துடைத்தபடி எழுந்து போனாள்.

இந்திய சினிமாவின் முக்கிய புள்ளியான அரவிந்த் படேல் இந்தி, தெலுங்கு, தமிழ் என மூன்று மொழிகளிலும் படம் தயாரிப்பவர். இந்திய சினிமாவின் சூப்பர் ஹீரோக்களையும், கனவுக் கன்னிகளையும் விரல் நுனியில் ஆட்டி வைப்பவர். சென்னையில் ப்ரேக்பாஸ்ட்டும், மும்பையில் லஞ்சும், பட்டாயாவில் டின்னரும் சாப்பிடுபவர். அவர் மனைவி சுனந்தா நகரிலுள்ள அத்தனை உயர்மட்ட கிளப்களிலும் மெம்பர் என்பதுடன் சமயங்களில் தானே டைரக்ட் பண்ண வேண்டும் என்ற ஆசையில் கணவனின் பணத்தையும் சில நடிகர்களின் மார்க்கெட்டையும் காலி செய்வாள். இவர்களின் மூத்த மகன் அர்ஜுன் ஹாலிவுட்டில் சினிமா பற்றி படிக்க போயிருக்க, பெண் சுஷ்மா பி.ஏ. சோஷியாலஜி கடைசி வருடத்தில் இருந்தாள்.

சுனந்தாவின் சிறுவயதில் இளம் விதவையாக அவள் பெற்றோர் வீட்டில் வேலைக்கு சேர்ந்த காமுபாட்டி சுனந்தா திருமணமாகி வரும்போது அவளுடனேயே வந்து விட்டாள். எனவே அர்ஜுனும், சுஷ்மாவும் பிறந்ததும் காமுபாட்டி தன் சொந்த பேரக் குழந்தைகளை வளர்க்கிற பிரியத்துடன் அவர்கள் பொறுப்பை ஏற்றுக் கொண்டாள்.

## 3

ஆதவன் மாலையில் வீடு திரும்பும் போது ஹாலில் சங்கரன் யாருடனோ பேசிக் கொண்டிருந்தார். ஆதவனைப் பார்த்ததும் "இவன்தான் இரண்டாவது பிள்ளை. எம்.எஸ்சி. படிக்கிறான்" என்றார் அவர்களிடம்.

ஆதவன் அவர்களுக்கு வணக்கம் தெரிவித்த பின்னர் மேற்கொண்டு என்ன பேசுவதென்று புரியாமல் விழித்துவிட்டு உள்ளே போனான். அத்தையை காணாததால் சமையலறையில் வேலையாய் இருந்த அம்மாவிடம் போய் "யார் வந்துருக்காங்கம்மா?" என்றான்.

"ஆதவா நல்ல நேரத்துக்குத்தான் வந்திருக்காய். வடையும், கேசரியும் சூடா இருக்கு. சாப்பிடு முதலில்" என தட்டில் பரிமாறினாள் வாசுகி.

அம்மா வீட்டில் அதிகமாய் பேசும் வார்த்தைகளே சாப்பாட்டு சம்பந்தமாய்தான் இருக்கும். என்ன காய்கறி வாங்கலாம் என்பதில் தொடங்கி அவருக்கு இது பிடிக்கும், பையன்களுக்கு இது பிடிக்காது, சின்னவன் சரியா சாப்பிடல என்று முடிப்பாள். அரிசியும், பருப்பும் அக்னியும் சூழ்ந்தது அம்மாவின் உலகம் என்று நினைத்தபடி ஆதவன் மறுபடி கேட்டான்.

"வீட்டிற்கு விருந்தாளி வந்திருக்காங்க போலிருக்கே!"

"ஆமாம், சரவணன் ஜாதகம் பொருந்தினதா சொல்லி பெண் வீட்டுக்காரங்க வந்திருக்காங்க"

"சரவணனுக்கு கல்யாணமா? பெண் இதே ஊரா?" என்றான் ஆதவன் வியப்புடன். இதுவரை சரவணன் கல்யாணப் பேச்சே எழுந்ததில்லை.

"பெண் சேலம் பக்கமாய் சுவேரிபுரம் என்ற கிராமமாம். நம்ம சுந்தர் இருக்கானே, அதான் உங்கப்பாவோட சின்ன தாத்தா பிள்ளை, அவனுக்கு உறவாம்."

"படிப்பு?" என்றான் ஆதவன்.

"பன்னிரெண்டாங்கிளாஸ் படிச்சிட்டு, டீச்சர் டிரைனிங் முடித்திருக்கிறாளாம்!"

"சரவணன் என்ன சொல்றான்?"

"எதைப் பத்தி?" என்ற வாசுகி ஆதவன் பதில் பேசும் முன் கிரைண்டரில் இருந்த மாவை கவனிக்கப் போனாள்.

ஏழுமணி வாக்கில் அத்தையும், சரவணனும் கோவிலில் இருந்து திரும்பி வந்து ஆதவனிடம் பிரசாதத்தை கொடுத்த போது, சரவணன் எப்போதும் போல் இருந்தான். புதிதாக ஒரு வாழ்க்கை தொடங்கப் போவதற்கான பரபரப்பு ஏதுமின்றி வழக்கமான புன்னகையுடன் தன் அருகில் நின்றிருந்தவனிடம், "உனக்கு கல்யாணமாமே!" என்றான் ஆதவன்.

சரவணன் தலையசைத்தான். "அப்பா சொன்னார்"

"நீ பெண்ணைப் பார்த்தியா?"

"இல்லை. அப்பாவுக்கு ஏற்கனவே நல்லா தெரிஞ்சவங்கதான். பெண்ணுடைய அப்பாவும், நம் அப்பாவும் தமிழ் லிட்ரேச்சரில் கிளாஸ் மேட்ஸ்சாம்."

"சோ, வாத்தியார் குடும்பம்ங்கற ஒரே குவாலிபிகேஷன் போதும்னு முடிவு பண்ணியாச்சா?"

"சமமான அந்தஸ்தோட, தெரிஞ்ச இடமாவும் இருந்தா நல்லதுன்னு அப்பா அபிப்ராயப்பட்டார்."

"அப்பா சரி, நீ?"

"ஒரே குடும்பத்தில் வசிக்கப் போகிறோம் என்கையில் வரப் போகும் பெண் பெற்றோருக்கு பிடித்திருப்பதுதானே முக்கியம்!"

"ஆனால் ஆயுசுக்கும் சேர்ந்திருக்கப் போவது நீ மட்டும்தான். உன்னுடைய விருப்பம்தான் இதில் முக்கியமானதாய் இருக்க வேண்டும்" என்றான் ஆதவன் வற்புறுத்தலாக.

"வீட்டினர் விருப்பம்தான் என் விருப்பமும்" என்றான் சரவணன் அதே புன்னகையுடன்.

இவனிடம் என்ன சொல்வதென்று புரியாமல் ஆதவன் யோசிக்க, அதுவரை சகோதரர்கள் பேச்சில் தலையிடாமல் இருந்த அத்தை ஆதவன் காதை திருகினாள்.

"சரவணன், வாழ்க்கையை அதன் போக்கில் போய் வாழப் பழகியவன். உன் புதிய சிந்தனைகளை அவன் மீது திணித்து அவனையும் குழப்பப் பாக்காதே!" என்றாள் விளையாட்டாக.

அத்தை தன் மனதில் ஓடும் எண்ணங்களை புரிந்துக் கொண்டாள் என்ற கூச்சத்துடன் ஆதவன் மேற்கொண்டு எதுவும் பேசாமல் அமைதியானான்.

அடுத்த நாளே கல்யாண ஏற்பாடுகள் தொடங்கின. பெண் வீட்டில் திருமணம் என்று முடிவானதால் சென்னையில் தெரிந்தவர்களுக்கும், அக்கம் பக்கத்தினருக்கும் வீட்டிலேயே விருந்தளிப்பதென அப்பாவும், சபாபதி மாமாவும் முடிவு செய்தார்கள். பெண்ணுக்கு பரிசப் புடவையும், தாலியும் வாங்க அம்மாவையும், சில உறவுப் பெண்களையும் அழைத்துக் கொண்டு அப்பா கடைவீதிக்கு போய் வந்தார். "சரவணா, உனக்கு என்ன துணி வேணுமோ எடுத்துக்கோ" என அவர் அவனிடம் பணத்தை கொடுத்தபோது, சரவணன் "சரிப்பா" என எண்ணிக் கூட பார்க்காமல் வாங்கிக் கொண்டு போனான்.

கூடத்தில் எல்லோரும் உட்கார்ந்து முகூர்த்த பத்திரிகை எழுதுகையில், "எனக்கு பரிட்சை சமயம் இல்லாத நாளா பாருங்க" என்றான் ஆதவன்.

"நீ கவலைப்பட வேண்டாம். பரிட்சைக்கு ஐந்து நாள் முந்தித்தான் கல்யாணம்" என்றார் சங்கரன்.

"ஐந்து நாளா? திரும்பி வந்து நான் எப்ப படிக்கிறது?"

"கடைசி நிமிஷத்துல படிக்கறது புத்தில ஏறாது. நிதானமா புரிஞ்சி படிக்கறதுதான் மனசுல நிக்கும். இத்தனை நாள் படிக்காததையா கடைசி ஐந்து நாளில் படிக்கப் போகிறாய்?" என்றார் அப்பா வாத்தியாராக.

"அஞ்சாங் கிளாஸ் பசங்களுக்கு சொல்ற அட்வைஸையே இன்னும் சொல்றார்" என ஆதவன் முணுமுணுக்க, சரவணன் சமாதானமாய் அவன் தோளை தட்டினான்.

"அப்பாவிடம் முறைத்து பயனில்லை. இன்னிலிருந்து தீவிரமா பரிட்சைக்கு படிக்கத் தொடங்கிடு"

"அப்படித்தான் செய்யணும். வேறு வழியில்லை" என்றான் ஆதவன் சலிப்புடன்.

மாலை கல்லூரி முடிந்து ஆதவன் பஸ் ஸ்டாப்பில் பஸ்சுக்காக காத்திருந்தான். அவனுடன் படிக்கும் சுனில் தன் காரை அவன் அருகே நிறுத்தி "உன் பைக் என்னவாச்சு ஆதவன்?" என்றான் அவனிடம்.

"பைக் என்னுதில்லை சுனில். என் அண்ணாவுடையது. எப்பவாவது அவனும் அதை யூஸ் பண்ணணும் இல்லையா? அதனால் இன்று பஸ்சில் வந்தேன்" என்றான் ஆதவன் சிரித்தபடி.

"ஓ.கே. வா. நான் உன்னை டிராப் பண்ணுகிறேன்."

"ஓநோ. உனக்கு எதுக்கு சிரமம்?"

"எந்த சிரமமும் இல்லை. ஒரு ஐந்து நிமிடம் பீச்சில் உட்கார்ந்து விட்டு உன்னை உன் வீட்டில் விடுகிறேன். ரைட்?"

"பரிட்சை நெருங்குகிறது. படிக்க நிறைய இருக்கு. பீச்சுக்கு இன்னொரு நாள் போகலாமே!" என்றான் ஆதவன் தயக்கத்துடன்.

"கம்மான் மேன்! உன்னை மாதிரி அதிபுத்திசாலிக்கு பரிட்சையை பார்த்து பயமா? எப்பவும் புத்தகங்களை கட்டிக் கொண்டு கிடந்தால் மூளை சூடேறி விடும், பாஸ். அதுவும் இந்த வயதில் அனுபவிக்க எவ்வளவோ இருக்கும்போது" சுனில் கண்ணடித்து சிரித்தான்.

ஆதவன் மேற்கொண்டு எதுவும் பேசாமல் காரில் ஏறினான்.

சுனில் ரொம்ப ஜாலியானவன். எப்பவும் சிரிப்பும், விளையாட்டுமாக இருப்பான். அவனுக்கு நிறைய கேர்ள் பிரண்ட்ஸ் உண்டு.

கடற்கரையின் உட்புற சாலையில் சுனில்

**விசித்திரமான வித்தைக்காரன்**

உங்கள் வாயால் உங்கள் மூக்கை கடிக்க முடியுமா? இது என்ன முட்டாள்தனமான கேள்வி என்று நினைக்கிறீர்களா? முயற்சித்துப் பாருங்கள். வெற்றி கிடைப்பது குதிரைக் கொம்புதான். ஆனால் இந்த அதிசய மனிதன் தன் வாயால் மூக்கை கடிக்கிறார். நல்லவேளை இந்த வித்தைக்காரன் அவனது மூக்கைத்தானே கடித்துக் கொள்கிறான். மற்றவர்கள் மூக்கை கடிக்கவில்லையே. அதுவரை நலம்.

காரை நிறுத்தினான். இருவரும் இறங்கி காலார நடக்கையில் சுனில் கேட்டான். "சோ, வாட் நெக்ஸ்ட் ஆதவன்?"

"யு மீன்?"

"வேலைக்கு போகப் போகிறாயா? மேற்கொண்டு இன்னும் படிக்கப் போகிறாயா?"

"படிக்கலாம் என்றுதான் நினைக்கிறேன்" என்றான் ஆதவன் மழுப்பலாக. "நீ?"

"நிறைய ஐடியாஸ் இருக்கு. அப்பா என்னவோ வெளிநாடு போ என்கிறார். இன்னும் எதுவும் முடிவு செய்யவில்லை."

"ஓ.கே."

"ரீசன்டாக என்ன படம் பார்த்தாய் ஆதவன்?"


"எனக்கு படம் பார்க்கவே நேரமில்லை சுனில். என் அண்ணனின் திருமணம் நிச்சயமானதிலிருந்து புத்தகத்தை பிரித்து வைத்தால் யாராவது வந்து நிற்பார்கள். அல்லது எதைப் பற்றியாவது வீட்டில் சத்தமாக பேசிக் கொண்டிருப்பார்கள்."

"சரிதான். அண்ணன் திருமணத்தில் உனக்கு வேலைகள், பொறுப்புகள் இல்லையா?" என்றான் சுனில்.

'கூடமாட ஒத்தாசை செய்யாம ஆதவன் எங்கே போனான்?' என்ற அப்பாவின் குரலும், 'அவன் பரிட்சைக்கு படிக்கிறான். என்ன வேலை இருக்கோ என்கிட்டே சொல்லுங்க' என்ற சரவணனின் குரலும் காதுகளில் ஒலிக்க ஆதவன் சொன்னான். "இந்த சமயத்தில் நான் என்ன செய்ய முடியும் சுனில்? தவிர நான் ஐ.ஏ.எஸ். தேர்வுக்கும் தயாராக வேண்டியிருக்கிறது."

"இஸிட்? வெரிகுட். உனக்கு நிச்சயம் ஐ.ஏ.எஸ். கிடைக்கும்" என்றான் சுனில் அவன் கைகளை குலுக்கி.

இருவரும் பேசியபடியே கலங்கரை விளக்கத்தின் அருகே வந்திருந்தனர். சுற்றிச் சுற்றி வந்து பட்டாணி சுண்டல் வாங்க சொல்லி கெஞ்சிய சிறுவர்களிடம் சுனில்



இரண்டு பாக்கெட் சுண்டல் வாங்குகையில் ஆதவன் அந்த பெண்ணைப் பார்த்தான். அன்று வழியில் வண்டியை நிறுத்தி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று முட்டாளாக்கியவள். இன்றும் அவள் ஜீன்ஸ்தான் அணிந்திருந்தாள். மேலே அணிந்திருந்த ரத்த சிவப்புநிற டாப்ஸ் அவள் நிறத்தை பளீரென்று மின்ன வைத்தது. ஷாம்புவிலும் கன்டிஷனரிலும் பளபளத்த கூந்தல் கடல்காற்றில் அழகாய் பறந்தது. முகத்தில் புரண்ட முடியை நளினமாய் ஒதுக்கியபடி ஒரு மீனவப் பெண்ணிடம் சீரியசாய் பேசிக் கொண்டிருந்தாள்.

இவள் தோற்றத்திற்கும், உடைக்கும் துளியும் சம்பந்தமில்லாத இதுபோன்றவர்களிடம் இவளுக்கு என்ன நட்பிருக்கக் கூடும் என ஆதவன் யோசிக்கையில், "அந்த பெண்ணைப் பார்த்தாயா ஆதவன்?" என்றான் சுனில் அவனிடம்.

"எந்தப் பெண்?" என்றான் ஆதவன் திடுக்கிட்டு.

"அந்த ரெட் டாப்ஸ், ப்ளாக் ஜீன்ஸ் யார் தெரியுமா? புரொடியூசர் அரவிந்த் படேலின் பெண். பரம்பரை பணம். அத்துடன் அப்பா சம்பாதிப்பது வேறு. வீட்டில் பென்ஸ்சும், ஹம்மரும் அணிவகுத்து நிற்கிறது. நகத்தில் அழுக்குப்படாமல் சாப்பிட்டு வளர்ந்தவள், சமூகசேவை செய்கிறேன் பேர்வழி என குப்பத்திலும், தெருவோர பிளாட்பாரங்களிலும் சுற்றிக் கொண்டிருக்கிறாள். பணக்கார பெண்களுக்கு இது ஒரு பொழுதுபோக்கு."

சுனில் ஏதோ பேசிக் கொண்டிருக்க ஆதவனின் பார்வை அவனையறியாமல் சுஷ்மாவிடம் சென்றது. அந்த மீனவப் பெண் தீவிர முகபாவத்துடன் ஏதோ சொல்வதும், சுஷ்மா அவள் தோளில் கை வைத்து சமாதானமாய் பேசுவதும் இங்கிருந்தே தெளிவாக தெரிந்தது.

"ஆதவன், கிளம்பலாமா?" என்றான் சுனில்.

"போகலாம்" என்றான் ஆதவன்.

கையிலிருந்த சுண்டல் பேப்பரை இருவரும் டஸ்ட்பின்னில் போட்டு விட்டு ஒரு வாட்டர் பாட்டில் வாங்கிக் கொண்டு திரும்பி வருகையில் சுஷ்மா அவர்கள் எதிரில் நின்றிருந்தாள்.

"ஹாய்" என்றாள் ஆதவனிடம் கைகளை அசைத்து.

அந்திநேர சூரியன் கடற்கரை முழுக்க ஆரஞ்சு வண்ணம் பூசியிருந்ததால் சுஷ்மா அந்த ஒளியில் தங்கமுலாம் பூசப்பட்ட சிலையென ஜொலித்தாள். ஆதவன் கண்களை இமைக்காமல் நின்றிருக்க, சுனிலின் வாயில் சரித்த தண்ணீர் தொண்டைக்கு கீழே இறங்காமல் நின்றது.

"என்னை நினைவில்லையா உனக்கு?"

என்றாள் சுஷ்மா ஆதவனிடம். சுஷ்மா தன்னை அடையாளம் கண்டு கொண்டு பேசக்கூடும் என்று எதிர்பாராத ஆதவன், என்ன பேசுவதென புரியாமல் திகைக்க, "இந்தப் பெண்ணை முன்பே தெரியுமா உனக்கு? என்னிடம் சொல்லவே இல்லையே!" என்றான் சுனில் அவன் காதருகே.

"ஓ! உனக்கு என் மீது கோபம் இருக்கும்" என்றாள் சுஷ்மா நினைவு வந்தவளாக. "நான் அன்று நடந்து கொண்ட விதம் தப்புதான். ஆனால் வேண்டுமென்றே அப்படி செய்யவில்லை."

"ஒருவருக்கொருவர் கோபித்துக் கொள்கிற அளவுக்கு நெருக்கமா?" என்றான் சுனில் வாய் பிளந்து.

சுஷ்மா தொடர்ந்து பேசினாள். "அன்று உன் அவசர வேலைகளுக்கு நடுவேயும் பைக்கில் லிப்ட் கொடுத்தாய். பட், நான் உனக்கு சரியாக தேங்க்ஸ் கூட சொல்லவில்லை."

"அடப்பாவி, கல்லூரியிலேயே சாதுபையன் என்று பெயரெடுத்த உனக்குள் இப்படி ஒரு ப்ளேபாயா?" என்றான் சுனில் பற்களை கடித்தபடி.

"போதும் சுனில்... போகலாம்" என்றான் ஆதவன் அவன் கையைப் பற்றி.

"முன்பே பேசி வைத்த சந்திப்பா? நான் கூட வந்து தொல்லை செய்து விட்டேன் என்று நினைக்கிறேன். இதோ போய் விடுகிறேன்" என்றான் சுனில்.

"நீயாக எதையாவது கற்பனை செய்து கொள்ளாதே சுனில். இந்த கதையே வேறு" என ஆதவன் சுனிலிடம் சொல்லிக் கொண்டிருக்கையில், "உன்னிடம் கொஞ்சம் பேச வேண்டும். இப்போது நீ ப்ரீயா?" என்றாள் சுஷ்மா.

நண்பனின் பார்வையில் தெரிந்த கேலியை உணர்ந்த ஆதவன், "நான் ரொம்ப பிஸி... எப்பவுமே" என்றான் இறுக்கமான குரலில்.

சுஷ்மா மேலும் ஏதாவது பேசி சுனிலின் கிண்டலுக்கு ஆளாகும் முன் ஆதவன் அவசரமாக அங்கிருந்து கிளம்பினான். சுனில் நடந்து கொண்டிருக்கும் நண்பனையும், திகைப்புடன் நின்று கொண்டிருக்கும் சுஷ்மாவையும் ஒரு பார்வை பார்த்து விட்டு நண்பனுடன் போய் சேர்ந்து கொண்டான்.

கார் பார்க்கிங்கை அடைந்ததும், "நான் இப்படியே வீட்டிற்கு போய் கொள்கிறேன் சுனில்" என்றான் ஆதவன்.

"சரி... சரி... இன்று உன் ப்ரோகிராம் தெரியாமல் நான் குறுக்கே வந்து விட்டேன். நீ வெயிட் பண்ணி சுஷ்மாவுடன் பேசிவிட்டு வா. நான் கிளம்புறேன்" என்றான் சுனில் சிரித்தபடி.

"வாட் நான்சென்ஸ் சுனில்? நீ சொல்லும் வரை அந்தப் பெண் யார், அவள் பெயர் என்ன என்று கூட எனக்குத் தெரியாது."

"நிஜமாகவா?"

"சத்தியமாக."

"ஊர், பெயர் தெரியாத பெண்ணுக்கெல்லாம் பைக்கில் லிப்ட் கொடுப்பாயா ஆதவன்? நம் க்ளாஸ்சில் கூட நீ எந்தப் பெண்ணையும் உன்னுடன் அழைத்துச் சென்று நான் பார்த்ததில்லையே!"

"முதலில் நான் சொல்வதை கேட்டுவிட்டு பேசு" என்ற ஆதவன் இரண்டே வரிகளில் அன்று நடந்ததை சொன்னான். "அந்த சம்பவத்திற்கு பிறகு அந்த பெண்ணை இன்றுதான் பார்க்கிறேன். அன்று என்னை யார் என்று கேட்டவள், இன்று வலிய வந்து என்னுடன் பேசுவாள் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை."

"எதிர்பாராததை செய்வதுதான் பெண்களின் இயல்பு" என்ற சுனில், "சரி வா... உன்னை வீட்டில் விட்டுப் போகிறேன்" என காரில் அமர்ந்தான்.

இருவரும் தங்கள் கல்லூரி, சக மாணவர்கள், அரசியல் என பேசிக் கொண்டு வந்ததில் சீக்கிரமே வீடு வந்துவிட, ஆதவன் தங்கள் தெருமுனையில் காரை நிறுத்தச் சொன்னான். "இங்கேயே இறங்கிக் கொள்கிறேன் சுனில். காரை உள்ளே விட்டு திருப்புவது கஷ்டம்."

"ஓ.கே." என்று தோள்களை குலுக்கிய சுனில் சொன்னான். "எக்ஸாமுக்கு வழக்கம் போல நன்றாக படி ஆதவா. பைக்கில் அமர வைத்த பெண்ணை மனசிலும் அமர வைத்து விடாதே!"

"என்னை அத்தனை பலவீனமா நினைச்சியா சுனில்?"

"நீ பலசாலிதான். ஆனால் அதிகம் பெண்களிடம் பழகியறியாதவன். அதனாலேயே உன் போன்றவர்கள் வாழ்க்கையில் முதன் முதலாய் ஒரு பெண் வரும்போது, அது அவர்களிடம் பெரிய சலனத்தை ஏற்படுத்தி விடும்."

"குட் ஜோக்" என்றான் ஆதவன் புன்னகையுடன். "இன்று அவளாக வந்து பேசியிருக்காவிட்டால் அந்த பெண்ணின் முகம் கூட தெரிந்திருக்காது எனக்கு. மறந்தே போயிருந்தேன் அவளை."

"தட்ஸ் ரைட்" என்ற சுனில் அவனிடம் விடைபெற்று கிளம்பிப் போனான்.

வீட்டின் உள்ளே நுழைகையில் "தெருமுனையில் யாரோடவோ பேசிட்டு இருந்த போலிருக்கே!" என்றார் அப்பா அவனிடம்.

"ஆமாம். என் க்ளாஸ்மேட் சுனில். என்னை டிராப் பண்ணினான்."

"வீடு வரை வந்தவனை ஏன் தெருமுனை

யோடு திருப்பி அனுப்பணும்? உள்ளே வந்து ஒரு காபி குடிச்சிட்டு போக சொல்லியிருக்கலாம் இல்லையா?" என்றாள் வாசுகி.

ஆதவனின் பார்வை பழைய சோபாவின் கிழிந்திருந்த ரெக்ஸினை மறைக்க விரிக்கப்பட்டிருந்த போர்வையிலும், கால் ஒடிந்த பிரம்பு நாற்காலியிலும் படிந்து மீண்டது. "அவனுக்கு ஏதோ அவசர வேலை" என்றான் அம்மாவுக்கு பதில் சொல்லும் விதமாய்.

அப்பா அவனிடம் ஒரு லிஸ்ட்டை கொடுத்தார். "நீ காபி, டிபன் சாப்பிட்டப்புறம் இந்த லிஸ்ட்ல இருக்க சாமான் எல்லாம் சரியா இருக்கான்னு பாத்து அட்டைப் பெட்டியில் அடுக்கி கட்டி வை."

"நானா?" என்றான் ஆதவன் திடுக்கிட்டு.

"நீதான். நான் சொன்னது காதுல விழலையா?" என்றார் சங்கரன் அதட்டலுடன்.

இன்று சுனிலுடன் கடற்கரைக்கு போனதில் வழக்கத்தை விட நேரம் அதிகமாகி விட்டிருந்தது. இன்னும் இந்த சாமான்களை பேக் செய்து முடிப்பதென்றால் இரவு வெகுநேரமாகி விடும். இன்று அவன் புத்தகத்தையே தொடப் போவதில்லை. தினமும் அவரிடம் படிக்க வரும் மாணவர்கள் பரிட்சையில் மார்க் குறைந்தால் திட்டும் ஆசிரியருக்கு, தன் மகனின் பரிட்சை பற்றியே நினைவில்லாதது தன் துரதிஷ்டம்தான் என்று நினைத்தபடி தலையாட்டினான்.

"நான் கொஞ்சம் வெளியே போய் வருகிறேன்" அப்பா குரல் கொடுத்துவிட்டு போனதும் அத்தை அவன் அருகில் வந்தாள்.

"அந்த லிஸ்ட்டை இப்படி கொடு ஆதவா. நான் எல்லாம் எடுத்து வைக்கிறேன். நீ போய் உன் வேலையைப் பார்."

"உன்னால் முடியாது அத்தை. ஏற்கனவே உனக்கு முதுகுவலி வேறு. நீ சாமான்களை எடுத்து வைப்பதை பார்த்தால் அப்பா என்னைத்தான் கோபித்துக் கொள்வார்."

"நான் சாமானை சரிபார்த்து வைக்கத்தான் போகிறேன். இன்னும் அரை மணி நேரத்தில் சரவணன் வந்துவிடுவான். பேக்கிங் எல்லாம் அவனே செய்வான்" என்றாள் அத்தை.

சட்டென்று ஏற்பட்ட நிம்மதி உணர்வுடன் "தேங்க்யூ அத்தை. யுவார் வெரி ஸ்வீட்." ஆதவன் அத்தையை கட்டிப்பிடித்து முத்தமிட்டான்.

"இந்த கிழவியை கொஞ்சி என்னடா பிரயோஜனம்? வயசு பெண்ணா இருந்தாலும் பலன் உண்டு" என்றாள் அத்தை கிண்டலாக.

"அதற்காகத்தான் டிரையல் பார்க்கறேன்னு வெச்சுக்கோயேன்!"

"அடப்பாவி, அத்தனை சமத்தா நீ?" என்றாள் கண்ணம்மா முகவாயில் விரல் வைத்து.

சிரித்தபடி ஓடிச் சென்று புத்தகத்தை பிரிக்கையில், வரிவரியாய் ஓடிய எழுத்துக்களுக்கு நடுவே சுஷ்மாவின் முகம் அவனைப் பார்த்து புன்னகைத்தது. 'டிரையலுக்கு நான் ரெடி' என்றது. திகைப்புடன் ஒரு நொடி கண்களை மூடிய ஆதவன் தன்னை சமாளித்துக் கொண்டு படிக்க ஆரம்பித்தான்.

## 4

"விநாயகனே... வினை தீர்ப்பவனே...
ஆனை முகத்தோனே..."

அப்பாவின் குரல் வழக்கம் போல் உரத்து ஒலித்தது. ஆதவனுக்கு தூக்கத்திலிருந்து விழிக்க முடியாமல் கண்கள் எரிந்தன. ஊதுபத்தியின் மணமும், கற்பூரம் கரையும் வாசனையும் காற்றில் கரைந்து வீட்டை நிறைத்தது.

"கந்தா போற்றி
கடம்பா போற்றி
சண்முகா போற்றி..."

அப்பா விநாயகரில் தொடங்கி, கந்தனை வணங்கி, அம்பாளிடம் சரணடைகையில் சரவணனும், அத்தையும் அவருடன் சேர்ந்திருப்பார்கள். அம்மா அதிக ஓசையின்றி வாய்க்குள் ஸ்லோகத்தை முணுமுணுத்தபடியே பூஜைக்கு சாமான்கள் எடுத்துத் தருவதும், அடுக்களையில் காபிக்கு டிகாஷன் போடுவதுமாய் நடந்து கொண்டிருப்பாள்.

"தினமும் இந்த தெருவை எழுப்பி விடறதே நீங்கதான்" என்பான் ஆதவன் அத்தையிடம்.

"தெரு எழுந்து என்ன பிரயோஜனம்? நீ எழுந்துக்கறதா இல்லையே!" கண்ணம்மா செல்லமாய் அவன் காதைத் திருகுவாள்.

"ராத்திரி முழுசும் உட்கார்ந்து படிச்சிப் பாருங்க. அப்புறம் சொல்லுங்க, காலையில தூங்க விடாம தொல்லை செய்யறவங்க மேல எரிச்சல் வருதா இல்லையான்னு!"

"படிப்பு முக்கியம்தான். ஆனால் பக்திங்கறது பெரிய ஆத்மபலம் ஆதவா. சமயங்களில் உன் படிப்போ, பணமோ கொடுக்காத தன்னம்பிக்கையை அது கொடுக்கும். 'எல்லாம் அவன்' என்ற பிடிமானம் இல்லாது போனால் 'நான் யார்?' என்ற வெறுமை தோன்றி விடும். வழிபாடு என்பது சடங்கு இல்லை ஆதவா. அது ஒரு அர்ப்பணிப்பு."

"உங்க அர்ப்பணிப்பு அடுத்தவங்களை தொல்லைப்படுத்தக் கூடாது அத்தை."

"அடுத்தவங்களா? நீ அடுத்தவனா ஆதவா? இந்த வீட்டுப் பையன். நீ இன்னும் எவ்வளவு படித்தாலும், எவ்வளவு பெரிய வேலை பார்த்தாலும் தமிழ் வாத்தியார் சங்கரனுடைய பிள்ளைதான் நீ. நினைவில் வெச்சுக்கோ."

அத்தை அழுத்தமாக சொல்லுகையில் இது

ஒரு மறக்க முடியாத அடையாளம் என்று தோன்றும். ரேஷன் கடையில், குழாயடியில் வரிசையில் நிற்கையில் வாத்தியார் பிள்ளை என்ற மரியாதையும், கல்லூரியில் அடிடாசும், லிவைசுமாய் காபி ஷாப்புகளிலும், பீட்ஸா கார்னர்களிலும் பொழுதை கழிக்கும் கும்பலின் நடுவே "உன் அப்பா தமிழ் டீச்சரா?" என்ற கேள்வி அவனது மிடில்க்ளாஸ் வாழ்க்கையை யாரும் சொல்லாமலே உணர்த்தும்.

"ஆதவா இன்னிக்கு காலேஜ் இல்லையா உனக்கு?" அத்தை போர்வையை பிடித்து உலுக்கியதும் ஆதவன் வேறுவழியின்றி எழுந்து அமர்ந்தான். இதற்கு மேல் படுத்திருந்தால் அப்பா முருகனை விட்டுவிட்டு அவனைப் பாட ஆரம்பித்து விடுவார். வழக்கம்போல் படுக்கையை சுருட்டுகையில் "நான் எடுத்து வைக்கிறேன். நீங்க போய் தயாராகுங்க" என்றாள் உமா.

சரவணனுக்கும் அவளுக்கும் திருமணம் முடிந்து அன்றுடன் பதினைந்து நாட்களாகியிருந்தன. இத்தனை சாதாரணமாக ஒருதிருமணம் நடந்து விடும் என்பது இன்னமும் அவனுக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது. உமா பல வருஷங்கள் அந்த வீட்டில் இருந்து பழகிய சரளத்துடன் அங்கு ஐக்கியமாகிவிட்டாள். அம்மாவுக்கு சமையலில் உதவுவதும், அத்தையின் பூஜைக்கு பூத்தொடுப்பதும், அப்பாவின் புத்தக அலமாரியை அடுக்கி வைப்பதும், ஆதவனின் படுக்கையை சுருட்டி வைப்பதுமாய் அந்த வீட்டில் இயல்பாய் பொருந்தினாள்.

சரவணன் ஹனிமூன் என்று மனைவியை எங்கும் அழைத்துப் போகவில்லை. வீட்டிலும் இருவரும் தனிமையை நாடி ஆதவன் பார்த்ததில்லை. தினமும் தூங்கப் போகையில் எப்போதும் திறந்திருக்கும் உள் அறை கதவு தாழிடப்பட்டிருப்பதை பார்க்கும் போதுதான் சரவணனுக்கு திருமணமானது நினைவுக்கு வருகிறது.

அவன் குளித்துவிட்டு வரும்போது உமா தயாராக டிபன் எடுத்து வைத்திருந்தாள்.

"நீங்க எதுக்கு இதையெல்லாம் செய்யணும்? வழக்கம் போல் நானே சாப்பிட்டுக் கொள்வேன்" என்றான் ஆதவன் கூச்சத்துடன்.

"வழக்கமாய் அம்மாவை ஏமாற்றிவிட்டு சாப்பிடாமல் ஓடி விடுவாய். இனி உன் அண்ணியிடம் அதெல்லாம் நடக்காது" என்றாள் அத்தை சிரிப்புடன்.

அத்தை சொன்னது நிஜம்தான். தினமும் அவன் குளித்துவிட்டு வரும்போது டிபனும், டிபன் சாப்பிட்டு முடிக்கையில் அயர்ன் செய்த உடைகளும் தயாராக இருந்தன. மறக்காமல் மதிய உணவை கையில் கொடுத்து "பாத்து போங்க தம்பி" என உமா புன்னகைக்கையில் அம்மா, அத்தை, அண்ணி எல்லோரும் உண்மையில் ஒருவரேதான். உருவங்கள்தான் வேறு என்று தோன்றும்.

மாலையில் ஆதவனுக்கு ஸ்பென்ஸர் ப்ளாசா போக வேண்டி இருந்தது. லேண்ட் மார்க்கின் உள்ளே நுழைந்து அந்த தடிமனான புத்தக அலமாரியில் தனக்கு தேவையான புத்தகத்தை தேடினான். அவன் தேடிய புத்தகம் இடதுபுறம் ஷெல்ப்பில் இருக்கவே, அந்த புத்தகத்தை வரிசையில் இருந்து உருவினான். உருவிய புத்தக இடைவெளியில் சுஷ்மாவின் முகம் தெரியவே ஆதவன் ஒரு நிமிடம் திகைத்துப் போனான்.

"ஹாய்" என்றாள் சுஷ்மா தன் வரிசைப் பற்கள் தெரிய புன்னகைத்து. ஆதவன் தலையை உலுக்கி பிரமையை கலைத்துவிட்டு திரும்புகையில் சுஷ்மா அவன் எதிரில் நின்றிருந்தாள். ஆதவன் பேசத் தோன்றாமல் நின்றிருக்க "புக்ஸ் எடுத்தாச்சா?" என்றாள் கேஷுவலாக.

ஆதவன் பேசாமல் இருக்கவும், "ஓ... கம்.. யார்..." என்றாள் அவன் தோளைத் தட்டி. "தவறுதலாக நடந்த ஒரு விஷயத்திற்கு எத்தனை நாள் கோபப்படுவாய்? இத்தனைக்கும் நான் லிப்ட் கேட்டபோது நீ ஹெல்மெட் அணிந்திருந்தாய் என்று உனக்கே தெரியும்."

"உண்மைதான்" என்றான் ஆதவன்.

பில் கவுண்டருக்கு முன் வரிசையில் நிற்கையில் சுஷ்மா ஆதவனின் கையிலிருந்த புத்தகத்தை பறித்து தன்னுடைய சி.டி.க்களுடன் பில் போடக் கொடுத்தாள். ஆதவன் மறுக்கவும் "அன்று நீ செய்த உதவிக்கு என் நன்றியாக இருக்கட்டும்... ப்ளீஸ்" என்றாள் கெஞ்சலாக.

"செய்ததற்கு பிரதிபலனை எதிர்பார்த்தால் அதற்கு பெயர் உதவியே இல்லை. சம்பளம். இந்த பணத்தைக் கொடுத்துஎன் கூலியை கழிக்கப் பார்க்கிறாயா?"



என்றான் ஆதவன்.

சுஷ்மா சட்டென அவன் கையிலிருந்த பணத்தை எடுத்துக் கொண்டாள். "சம்பளமாவது? கூலியாவது? நாம ரெண்டு பேரும் ப்ரண்ட்ஸ். ஓகே?"

அம்மாவையும், அத்தையும் தவிர பிற பெண்களிடம் அதிகம் பேசி பழக்கமில்லாத ஆதவன் சுஷ்மாவிடம் சகஜமாக பேச முடியாமல் திணறினான்.

"இப்போது உனக்கு வேறு வேலை இருக்கிறதா?" என்றாள் ஆதவனிடம்.

"வீட்டிற்குப் போக வேண்டும்."

சுஷ்மா கடகடவென சிரித்தாள். "எல்லோருமே தினமும் வீட்டிற்குதான் திரும்பிப் போகிறோம். இப்போது ஒரு பீட்ஸா சாப்பிட்டுவிட்டு போகலாம் வா."

ஆதவன் மறுப்புடன் தலையசைக்க, சுஷ்மா மறுபடியும் சிரித்தாள். "நான் உன்னை எதுவும் செய்துவிட மாட்டேன். சத்தியமாய்"

சுஷ்மாவின் சிரிப்பு ஆதவனை சீண்டுவது போலிருக்க, அதற்கு மேல் மறுப்பு சொல்லாமல் அவளுடன் நடந்தான். இருவரும் எஸ்கலேட்டரில் மேலே போய் புட்கோர்ட்டில் அமர்ந்து பீட்ஸாவுக்கு ஆர்டர் செய்தனர். அவர்களைப் போலவே ஜோடியாய் அமர்ந்திருப்பவர்களையும், ஏதையோ பேசி சிரித்தபடி நடந்து கொண்டிருப்பவர்களையும் ஆதவன் ஒரு சுவாரஸ்யத்துடன் வேடிக்கை பார்க்க தொடங்கவும்,

"சோ?"

என்றாள் சுஷ்மா அவன் கவனத்தை கலைத்து.

"சோ வாட்?"

"நாம எத்தனை நல்ல ப்ரண்ட்ஸ் பாரேன்! எனக்கு உன் பெயர்கூட தெரியல."

"இப்ப தெரிஞ்சுட்டா போச்சு. என் பெயர் ஆதவன்."

"நல்ல தமிழ் பெயர் இல்லையா?"

"எஸ். பிகாஸ் என் அப்பா ஒரு தமிழாசிரியர்."

"தட்ஸ் குட். என் பெயர் சுஷ்மா. பி.ஏ. சோஷியாலஜி கடைசி வருடத்தில் இருக்கிறேன்."

"ஓ! அதனால்தான் சமூக சேவையில ஈடுபாடா?"

சுஷ்மா ஒரு தீவிரத்துடன் மறுத்தாள். "தன் கண் முன்னே கஷ்டப்படும் சகமனிதனுக்கு உதவிக்கரம் நீட்டுவது சாதாரண



மனிதாபிமானம், மனிதத்தன்மையுடன் இருப்பதற்கு மனிதனாய் இருந்தால் போதும். அதற்காக படிக்க வேண்டிய அவசியமில்லை."

திருத்தமான உடையுடன், நளினமாய் பீட்ஸா சாப்பிடுபவளை ஆதவன் கேள்விக்குறியுடன் பார்த்தான். அவள் காலில் அணிந்திருந்த ப்ராண்டட் ஷூவே சில ஆயிரங்கள் இருக்கும். அப்படியிருக்க அவள் மனிதாபிமானத்தை பற்றி பேசுவது வேடிக்கையாக இருந்தது.

"உன்னைப் போன்ற பணக்காரர்கள் வேறு எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டிய அவசியமில்லாததால் சகமனிதர்களைப் பற்றி யோசிக்க முடிகிறது. தன்னைத்தானே நினைத்துப் பார்க்கக்கூட நேரமின்றி ஓடிக் கொண்டிருக்கும் நடுத்தர குடும்பங்களுக்கு எதைப் பற்றியும் யோசிக்க நேரமில்லை சுஷ்மா."

"டாமிட்... மனசில் பொங்கும் கருணைக்கு ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசம் இல்லை. என் பெற்றோர்கள் பணக்காரர்களாக இருக்கலாம். ஆனால் என் மனதில் அது பதிந்ததே இல்லை. அடிப்படையில் எல்லோரையும் போல் நான் ஒரு சராசரிப்பெண்."

முகத்தில் தெரிந்த உறுதியில், பேச்சில் வெளிப்பட்ட பாசாங்கு இல்லாத சரளத்தில் அவள் வார்த்தைகள் உண்மைதான் என்பது தெரிந்தது. நேர் எதிர்மறையான குணமே அவள் இயல்பாய் இருக்க வேண்டும். ஆதவன் அவளைப் பற்றிய யோசனையில் இருக்கையில் சுஷ்மா கேட்டாள்.

"ஆதி... நீ ரொம்ப நல்லா படிப்பியா?"

"ஆமாம். எப்படித் தெரியும்?" என்றான் வியப்புடன்.

"உன் முகத்தில் அறிவுக்களை தெரிகிறது. அத்துடன் ஏதோ ஒரு சாத்வீகம் தெரிகிறது. தனிமையில் பார்க்கிற நிலா மாதிரி, மாலை நேரத்தில் வருடிச் செல்லும் தென்றல் மாதிரி ஒரு குளுமை இருக்கிறது உன்னிடம். என் கெஸ் சரின்னா உன்னிடம் எந்த கெட்டப்பழக்கமும் இருக்க சான்ஸே இல்லை. சரியா?"

ஆதவன் அசந்து போனான். சுஷ்மாவின் கலகல சிரிப்பிற்கும், படபடப்பான பேச்சிற்கும் பின்னால் பார்த்தவுடன் மனிதர்களை எடைபோடும் புத்திசாலித்தனமும் இருந்தது வியப்பாக இருந்தது.

"யு வார் டு ஸ்மார்ட்" என்றான் கைகளை தட்டி.

இருவரும் பேசியபடியே ஐஸ்கிரீம் சாப்பிடுகையில் வாட்ச்சைப் பார்த்த ஆதவன் "மை காட்" என்றான் திகைப்புடன். "எனக்கு நேரமாச்சு சுஷ்மா. உடனே கிளம்பினாதான் நான் பஸ்ஸை பிடித்து வீடு போய் சேர முடியும். இன்று பேச்சில் நேரம் போனதே தெரியல."

ஒரு பள்ளி சிறுவனின் கவலையுடன் பேசிய அவனை சுஷ்மா சுவாரஸ்யத்துடன் பார்த்தாள். அவளுக்கு தெரிந்த ஆண்கள் அனைவரும் பெண்கள், அதுவும் அழகான பெண்கள் அருகில் இருந்தால் அந்த இடத்தைவிட்டு நகரவே விரும்ப மாட்டார்கள். அந்த பெண்ணை இம்ப்ரஸ் பண்ண தன்னை அதிமேதாவியாய் காட்டிக் கொள்வது, அதிகம் சம்பாதிப்பவனாக, நாகரீகமானவனாக காட்டிக் கொள்ள அசட்டுத்தனமான காரியங்களில் ஈடுபடுவார்கள். சுஷ்மாவை கவர முற்படாத ஆதவனின் இயல்பு அவன் மீது புதிய ஆர்வத்தை ஏற்படுத்தியது. இருவரும் லிப்டில் பேஸ்மெண்ட் வந்ததும் சுஷ்மா சொன்னாள். "நீ முன் வாயில் கேட் அருகே வெயிட் பண்ணு ஆதி. நான் பார்க்கிங்கிலிருந்து காரை எடுத்து வருகிறேன். நானே உன்னை டிராப் பண்ணுகிறேன்."

"நீயா? வேண்டாம். நானே போய்க் கொள்வேன்" என்றான் அவசரமாக.

"எனக்கு எந்த சிரமமும் இல்லை ஆதி. நான் ப்ரீயாகத்தான் இருக்கேன்."

"நீ ப்ரீ என்பதற்காக என்னை சிரமப்படுத்தாதே."

"உன்னை உன் வீட்டில் விடுவது சிரமப்படுத்துவதாகுமா?"

"எனக்கு அப்படித்தான். என் வீட்டு வாசலில் ஒரு பெண்ணுடன் காரில் வந்து இறங்கினேன் என்றால் எத்தனை பேருக்கு பதில் சொல்ல வேண்டியிருக்கும் தெரியுமா?"

"பதில் சொல். என் ப்ரண்ட்னு சொல். இதுபோன்ற ஒரு மெட்ரோ பாலிட்டன் நகரில் கோ–எஜுகேஷன் ஸ்கூல்களிலும், சேர்ந்து பணிபுரியும் அலுவலகங்களிலும் ஆணும் பெண்ணும் இயல்பாக பழகுவது நடுத்தர குடும்பங்களில் கூட சகஜம்தான் ஆதி."

"சரி. அப்படி ஒரு சகஜமனோபாவம் என் வீட்டினருக்கு இருக்கிறதா என்று தெரிந்தபின் உன்னுடன் வருகிறேன். இப்போது வேண்டாம். பை." அவள் மேலே பேசும் முன் ஆதவன் கைகளை அசைத்துவிட்டு கிளம்பிப் போனான்.

சுஷ்மா அவனது வேகமான நடையையும், கம்பீரமான உருவத்தையும் கண்மறையும் வரை அசையாது பார்த்தபடி நின்றிருந்தாள்.

## 5

ஆதவனுக்கு அது பைனல் செமஸ்டர் என்பதால் பரிட்சைக்கு தயாராவதும், ப்ராஜெக்ட் வேலைகளுமாய் நாட்கள் விரைந்தன. மூச்சுவிட நேரமின்றி ஓடிக் கொண்டிருந்தான்.

ஒரு வழியாய் கடைசி பரிட்சை முடிந்ததும் பெரிய நிம்மதி பெருமூச்சு விட்டவனை

அவனது நண்பர்கள் வற்புறுத்தி படம் பார்க்க அழைத்துச் சென்றனர். சத்யம் காம்ளக்ஸில் நிறைந்திருந்த இளைஞர் கூட்டத்தின் நடுவே சூடான பாப்கார்னை கொறித்தபடி ஆதவனும், அவன் நண்பர்களும் பேசிக் கொண்டிருந்தனர். படிப்பு முடிந்ததால் லேசான மனமும், எதிர்காலத்தைப் பற்றிய கவலையுமாய் இருந்தார்கள்.

சுனில் வழக்கம்போல் அந்த இடத்தை கலகலப்பாக்கிக் கொண்டிருந்தான். அவன் செய்த கலாட்டாவுக்கு நண்பர்கள் அனைவரும் வயிற்றைப் பிடித்தபடி சிரிக்க தொடங்குகையில் "எஸ்க்யூஸ்மீ" என்ற குரல் குறுக்கிட்டது.

"எஸ்" என்று திரும்பியவர்கள் எதிரே நின்றிருந்த சுஷ்மாவைப் பார்த்ததும் பேசத் தோன்றாமல் திகைக்க, சுஷ்மா "ஹலோ ஆதி" என்றாள் உற்சாகமாக.

நண்பர்களின் கண்களில் தெரிந்த பளபளப்பைப் பார்த்த ஆதவன் "ஹலோ" என்றான் லேசாக.

"ஹே, நீ சினிமாவுக்கெல்லாம் வருவியா? உனக்கு புத்தகத்தைத் தவிர வேறு எதுலயும் இன்ட்ரஸ்ட் இல்லேன்னு நினைச்சேனே!" அந்த டெனிம் ஸ்கர்ட்டையும், ஸ்லீவ்லெஸ் டாப்பையும், ஈர இதழ்களில் பளபளத்த புன்னகையையும் பார்த்த ஆதவன் ஒரு நொடி சுற்றுப்புறத்தை மறந்து போனான்.

ஆதவனை ஒரு பார்வை பார்த்த சுனில் சுஷ்மாவிடம் சொன்னான்.

"உங்களைப் போலத்தான் நாங்களும் இத்தனை நாளாய் ஆதவனுக்கு படிப்பில் மட்டும்தான் இன்ட்ரஸ்ட்டுன்னு நினைச்சோம். ஆனா உங்க இருவரையும் இரண்டாம் முறையாக பார்க்கும் போதுதான் தெரிகிறது அப்படி இல்லேன்னு!"

எல்லோரும் சிரிப்புடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ள, நண்பர்களில் ஒருவன் அப்பாவியாக ஆதவனிடம் கேட்டான். 'இவங்க யார் ஆதவன்? உன் கசினா? நாங்க பார்த்ததே இல்லையே!"

ஆதவனுக்கு முன்னதாக சுஷ்மா பதில் சொன்னாள். "நான் உங்களை மாதிரி ஒரு ப்ரண்ட். இல்ல ஆதி?"

"ஆதவனுக்கு இப்படிப்பட்ட ப்ரண்ட் இருப்பதே எங்களுக்குத் தெரியாதே!" என்றார்கள் நண்பர்கள் கோரஸாக.

"அவனுக்கு இத்தனை நண்பர்கள் இருப்பது கூடத்தான் எனக்குத் தெரியாது" என்றாள் சுஷ்மா பதிலுக்கு.

"அப்ப, ஆதவனை உங்களுக்கு ரொம்ப நாளா தெரியும்னு சொல்லுங்க."

"ஒரு சிலரை தினமும் சந்தித்தாலும் பழகத் தோன்றுவதில்லை. சிலரை பார்த்தவுடனே பிடித்துப் போகிறது. ஆதியும் அப்படி ஒருத்தன்தான்" என்றாள் யதார்த்தமாக.

"அடடே!... என்ன ஒரு பீல்..." நண்பர் உருகவும், ஆதவன் அவசரமாக சொன்னான். "சுஷ்மா உன்னை யாரோ கூப்பிடுகிறார்கள்."

"மம்மியாக இருக்கும்" என்ற சுஷ்மா சற்று தூரத்தில் நின்றிருந்த பெண்மணியைக் காட்டினாள். பாப் பண்ணப்பட்ட தலையும், ஜீன்ஸும் குர்தாவுமாய் இளமையாக நின்றிருந்த பெண்தான் சுஷ்மாவின் அம்மா என்பதை ஆதவன் நம்பமுடியாமல் பார்த்தான்.

"அம்மாவின் அருகில் நிற்பவரைத் தெரிகிறதா ஆதி? டைரக்டர் வர்மா. அவருடைய வற்புறுத்தலுக்காகத்தான் படம் பார்க்க வந்தோம். நாம் பிறகு சந்திக்கலாம் ஆதி. பை" என்ற சுஷ்மா, "பை...பை... ப்ரண்ட்ஸ்" என அவன் நண்பர்களிடம் விடைபெற்றாள். திரும்பி அம்மா நின்றிருந்த இடத்திற்கு நடக்கும் போது 'இனி ஆதியை அவன் நண்பர்கள் ஒருவழியாக்கி விடுவார்கள்' என்ற எண்ணத்தில் சுஷ்மாவின் இதழ்களில் புன்னகை விரிந்தது.

"தியேட்டரில் படம் பார்க்க வந்தோம். பட் காரிடாரிலேயே சினிமா பாத்தாச்சு" என்றான் சுனில் நண்பர்களிடம்.

"ஆதவனின் செல்லப் பெயர் ஆதியாமே! உங்க யாருக்காவது தெரியுமா?" என்றான் ஒருவன்.

"அம்பிக்குள்ள இப்படி ஒரு ரெமோ இருக்கறது இதுவரை நமக்கு தெரியாம போச்சே!"

"சும்மா சொல்லக் கூடாது. புளியங் கொம்பாத்தான் புடிச்சிருக்கான்."

ஆளுக்காள் கேலி செய்ய ஆதவன் கெஞ்சினான். "ப்ளீஸ்... விடுங்கப்பா. நீங்க எல்லாம் நினைக்கிற மாதிரி எதுவும் இல்லை. எதேச்சையாய் இரண்டொரு முறை சந்திக்க நேர்ந்ததில் ஏற்பட்ட பழக்கம். அதற்கு மேல் வேறு எதுவும் இல்லை."

"எதுவும் இல்லைன்னு நீ சொன்னா ஒத்துக்கறோம்" என்றார்கள் அனைவரும் கோரசாக நம்பாத குரலில்.

**ஆ**தவன் தன் ஐ.ஏ.எஸ். பரிட்சைக்கு மும்முரமாக தயார் செய்து கொண்டிருந்தான். இரவெல்லாம் கண் விழித்து படிக்கையில், குறிப்புகள் தயார் செய்கையில் அம்மா புலம்பிக் கொண்டே இருந்தாள்.

"படிப்புதான் முடிஞ்சு போச்சே! இன்னும் எதுக்கு இப்படி கண்விழிச்சி படிச்சி உடம்பை கெடுத்துக்கணும்!"

ஆதவன் பதில் சொல்வதற்குள் சங்கரனின் குரல் கேட்டது.

"கண்ணம்மா எங்கே வாசுகி?"

"ரேஷன் கடைக்கு போயிருக்கா."

"ரேஷனுக்கா?" சங்கரன் கோபத்துடன்

குரலை உயர்த்தினார். "தடிதடியா ரெண்டு ஆம்பிளை பசங்க வீட்டிலிருக்கும் போது கண்ணம்மாவை எதுக்கு அனுப்பின? அவளுக்கு வயசு குறைஞ்சுட்டே வருதுன்னு நினைச்சியா?"



"நான் அனுப்பல" என்றாள் வாசுகி பயத்துடன். "சரவணன் காலேஜ்ல மீட்டிங்னு இன்னும் வீட்டுக்கு வரல. உமா பக்கத்து வீட்டில் நவராத்திரிக்கு மஞ்சள், குங்குமம் வாங்கிக்க போயிருக்கா. அதனால கண்ணம்மா தானே போறதா கிளம்பி போனாள்."

அப்பா ஆதவனை முறைத்தார். "நீ என்ன செய்யற வீட்ல? படிப்புதான் முடிஞ்சி போச்சே! ரிசல்ட் வருகிற வரை வீட்டு வேலைகளில் ஒத்தாசை செய்ய வேண்டாமா?"

"அத்தை போனதே எனக்கு தெரியாது. நான் போய் பார்க்கிறேன்" என ஆதவன் கிளம்புகையில், சங்கரன் சொன்னார். "நாளை காலை ஒன்பது மணிக்கு சபாபதி வருவான். அவனோட போக தயாராய் இரு."

எங்கே என்று கேட்க நினைத்தவன் அப்பாவின் கடுமையான முகத்தைப் பார்த்ததும் அதை கேட்காமல் செருப்புக்குள் காலை நுழைத்தான்.

ஆதவன் ரேஷன் கடையை நெருங்குகையில் அத்தை நிறைய சாமான்களை தூக்க முடியாமல் எதிரில் வந்து கொண்டிருந்தாள். ஆதவன் ஓடிப்போய் அத்தையின் கைகளில் இருந்த பையை வாங்கிக் கொண்டான். "என்னை கூப்பிட்டிருக்க வேண்டியதுதானே அத்தை?" என்றான் ஆதங்கத்துடன்.

"படிக்கிற பிள்ளையை எதுக்கு தொல்லை செய்யணும்னு நானே போனேன்."

"அதுக்காக இவ்வளவு பெரிய பையை தனியா தூக்கிட்டு வரணுமா?"

"தனி என்ன ஆதவா? என்னை மாதிரி எத்தனைபேர் சுமந்துட்டு போறாங்க பார்."

"ஆள் இல்லாதவங்க சுமக்கலாம். நாங்களெல்லாம் இருக்கையில் நீ எதுக்கு தனியாய் சுமக்கணும்?"

கண்ணம்மா பிரியத்துடன் புன்னகைத்தாள். "ரேஷன் கடைக்கு தனியா வந்ததால நான் தனின்னு ஆயிடுமா? நீங்களெல்லாம் எப்பவும் என்கூட இருக்கீங்கன்னு தெரியும் எனக்கு."

"உங்கண்ணாவுக்குதான் அது தெரியல. கொஞ்சம் புரிய வை."

"பாசம் கண்ணை மறைக்கிற போது எதிரே நிற்கறவங்க கூட தெரியாது. அது மாதிரிதான் இதுவும்" என்றாள் கண்ணம்மா.

"எப்படியோ உன் மேலயாவது அந்த பாசம் இருந்தா சரி."

"ஆதவா, என்ன பேச்சு இது? அப்பாவுக்கு தன் பிள்ளைகள் மீது பாசம் இல்லாமல் இருக்குமா? அண்ணா தன் தொழிலை நேசிப்பவன். தன் மாணவர்களுக்கு தானே முன்னுதாரணமாக இருக்க வேண்டும் என்று நினைப்பவன். அந்த நேர்மையை தன் பிள்ளைகளிடமும் எதிர்பார்ப்பதால் எப்போதும் கண்டிப்பாக இருப்பதுபோல தோன்றும். உண்மையில் அண்ணா மாதிரி நல்லவனை பார்ப்பது அரிது."

"சரி... சரி. உன் அண்ணா பற்றி இனி வாயே திறப்பதில்லை. சரிதானா?" என்றான் சிரிப்புடன்.

ஆனால் அடுத்தநாளே ஆதவன் கோபத்துடன், "உன் அண்ணா சொல்வதை கேட்டாயா அத்தை?" என்றபடி கண்ணம்மா முன் வந்து நின்றான்.

"என்ன விஷயம்?" என்றாள் அத்தை.

"அப்பாவின் நண்பர் சதாசிவம் மாமா வந்திருக்கிறார். அவருடைய நண்பரின் பள்ளியில் அப்பா என்னை வேலையில் சேர்த்துவிட சொன்னாராம். நான் வரவில்லை என்று நீயே அவர்களிடம் சொல்லி விடு."

"படிப்பு முடிந்து நீ சும்மாதானே இருக்கிறாய் என்ற எண்ணத்தில் அண்ணா சொல்லியிருக்கலாம். அதுக்கு உனக்கேன் இத்தனை கோபம் வருது?"

"நீ கூட நான் சும்மா இருப்பதாகத்தான் நினைக்கிறாயா அத்தை? நான் ஐ.ஏ.எஸ்.க்கு தயாராகி கொண்டிருப்பது உனக்குத் தெரியாதா?" என்றான் ஆதவன் வருத்தத்துடன்.

"இதுக்கு ஏன் இத்தனை உணர்ச்சிவசப்படற ஆதவா? நிதானமா புரிய வைக்க முயற்சி செய்."

"என் பிரச்சினை உனக்கு புரியாது அத்தை"

## வயலில் விளைந்த பெண்

வயலில் இருந்து நெற்கதிர்கள்தான் விளையும். ஒரு அழகான மனிதப் பெண் உருவாக முடியுமா? ஆனால் ஜப்பானில் இந்த அதிசயம் நடக்கின்றது.

எப்படி என்று வாயைப் பிளக்க வேண்டாம்.

வயல்களில் மிகவும் நுட்பமான முறையில் கலைப்படைப்புக்களை உருவாக்குகின்றனர். இவை மிகவும் அழகானவையும், நேர்த்தியானவையும் ஆகும். ஜப்பானியர்களின் எந்தவொரு முயற்சியும் வித்தியாசமாக இருப்பதும், நம்மை வியப்பில் ஆழ்த்தவும் தவறுவதில்லை.

என்றான் சோர்வுடன். "அப்பாவிற்கு அவர் மொழியை தாண்டிய சிந்தனை இல்லை. சரவணன் அப்பா பிள்ளை. சிறுவயதில் என் மீது குத்தப்பட்ட லேபிளை கிழித்து கொண்டு வெளியே வர நான் படும் போராட்டம் உங்களுக்குத் தெரியாது."

சற்று யோசனைக்குப் பிறகு அத்தை எழுந்து போனாள். உள்ளே அப்பாவிடம் அவள் ஏதோ சொல்லுவதும் பதிலுக்கு அவர் கத்துவதும் கேட்டது.

"அவசரப்படாதே சங்கரா. இந்த காலத்து பசங்களை விட்டுத்தான் பிடிக்கணும்" என்ற சபாபதி மாமாவின் குரல் தெளிவாக கேட்டது.

ஆதவன் ஜன்னல் அருகே நின்று தெருவை வேடிக்கை பார்க்கத் தொடங்கினான்.

"சொன்ன பேச்சை கேட்கலைன்னு ஆனப்புறம் இனி யார் விஷயத்திலும் நான் தலையிடறதா இல்ல" என்ற அப்பாவின் குரலும், சிறிது நேரத்தில் அவர் சபாபதி மாமாவுடன் வெளியே செல்வதும் தெரிந்தது. ஆதவன் தெருவில் புத்தக மூட்டை முதுகை வளைக்க நடந்து செல்லும் சிறுவர்களை பார்த்தபடி அசையாமல் நின்றிருந்தான்.

சிறிது நேரத்தில் "ஆதவா" என்றபடி அத்தை அவனருகே வந்தாள்.

"அண்ணா இனி உன்னை எதற்கும் வற்புறுத்த மாட்டான். உன் விருப்பத்திற்கு தடை சொல்ல மாட்டான். நீ கவலைப்படாமல் போய் உன் வேலையை கவனி."

"தேங்க்ஸ் அத்தை. எனக்காக நீ எத்தனை திட்டு வாங்கியிருப்பேன்னு எனக்குத் தெரியும்" என்றான் கனிவுடன்.

"அண்ணாவின் கோபத்தில் விகல்பம் எதுவுமில்லை ஆதவா. ஆனா அண்ணாவின் கோபத்தைவிட உன் வேகம்தான் ஆபத்தானது. எத்தனை உயர பறந்தாலும் திரும்ப பூமிக்கு வரணும்ங்கிற எண்ணம் இருக்கணும். ஏன்னா பூமியில கால் பதியும் போது தான் கீழே விழுந்துடுவோம்ங்கிற பயம் ஏற்படாது. இது உன் வீடு ஆதவா. எத்தனை வளர்ந்தாலும் இங்க கால்பதிச்சு நிற்கறதுதான் உனக்கு பாதுகாப்பு."

"எனக்கு தெரியும் அத்தை. நீங்க வீணா எதையும் யோசிக்காதீங்க." என்றான் ஆதவன் அத்தையை அணைத்து.

## 6

அடுத்து வந்த நாட்களில் ஆதவன் எதைப் பற்றியும் நினைக்க நேரமில்லாமல் தேர்வுக்கு தயாராகத் தொடங்கினான். ரிட்டன் எக்ஸாம் அன்று நல்லமுறையில் தேர்வு எழுதிவிட்ட திருப்தியுடன் நடந்து வரும்போது வழியில் சுஷ்மாவை சந்தித்தான். தன் செவர்லெட்டை ஓட்டியபடி வந்தவள் ஆதவனைப் பார்த்ததும் "ஹேய் ஆதி, கம் இன்" என்றாள் முன்பக்க கதவைத் திறந்து.

ஆதவன் மிகுந்த தயக்கத்துடன் நிற்க, பின்னால் நின்ற வண்டிகளின் ஹார்ன் சப்தம் பலமாக கேட்டது. சுஷ்மா சடாரென அவன் கைகளைப் பற்றி உள்ளே இழுத்துக் கொண்டு கதவை சாத்தினாள். "உன்னை நான் விழுங்கப் போகிறேனா என்ன? எதற்காக தயங்குகிறாய்?" என்றாள் கோபத்துடன்.

அகலமான கண்கள் கோபத்தில் மேலும் விரிந்திருப்பதைப் பார்த்த ஆதவன், "கண்ணாலேயே விழுங்கிடுவியோன்னு பயமாத்தான் இருந்தது" என்றான் தன்னையறியாமல்.

வியப்புடன் அவனைப் பார்த்த சுஷ்மா சொன்னாள். "அதுவும் ஒரு நாள் நடக்கத்தான் போகிறது. நீ இப்படி பயந்து கொண்டிருந்தால்..."

"அப்படியானால் காரை நிறுத்து. நான் இப்போதே இறங்கிக் கொள்கிறேன்" என்றான் பயத்துடன்.

அவள் வாய்விட்டு சிரித்தாள். "குறைந்தபட்சம் இன்று நீ பிழைத்தாய். பின்னால் பார் உனக்கு துணைக்கு ஆள் இருக்கிறது."

பின்சீட்டில் அமர்ந்திருந்த காமுபாட்டி ஆதவனை ஆர்வத்துடன் பார்த்தாள். "இது காமு பாட்டி. என்னை வளர்த்தவங்க இவங்கதான். பாட்டியை டாக்டரிடம் காட்டிவிட்டு வருகிறோம்" என பாட்டியை ஆதவனுக்கு அறிமுகம் செய்தாள்.

"பாப்பாவுக்கு வேறு வேலை இல்லை தம்பி. அடிக்கடி டீ குடிக்கறதால எப்பவாவது தலைசுத்தல் வரும். கொஞ்சம் படுத்து எழுந்தால் சரியாயிடும். அதுக்காக டாக்டர், மருந்து மாத்திரைன்னு ஏக அமர்க்களம் பண்ணிடிச்சி" என்றாள் பாட்டி.

"உனக்கு பி.பி. இருக்கிறது பாட்டி. டாக்டர் சொன்னது நினைவில்லையா? மருந்து மாத்திரைகளை ஒழுங்கா சாப்பிட வேண்டும்" என்றாள் சுஷ்மா.

"அதெல்லாம் சாப்பிட்டு இன்னும் எத்தனை நாள் இருக்கப் போகிறேன்? உன் கல்யாணத்தை கண்ணுல பாத்துட்டா எனக்கு அதுவே

பேர்தும் பாப்பா."

"உன் அவசரத்துக்கு நான் கல்யாணம் பண்ணிக்க முடியாது பாட்டி."

"உனக்கும் கல்யாண வயசாகலியா பாப்பா? இப்ப பண்ணிக்காம வேறு எப்ப பண்ணிக்குவ?"

"கல்யாணங்கிறது ரெண்டு பேர் முடிவெடுத்தாதான் நடக்கும். ஒருத்தர் மட்டும் பிரியப்பட்டா போதாது. என்ன ஆதி, நான் சொல்றது சரிதானே?"

"என்ன சரி?" என்றான் ஆதவன் திடுக்கிட்டு.

"கல்யாணத்தைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?"

"யாருடைய கல்யாணம்?"

"உன்னுடைய... என்னுடைய கல்யாணம்தான்னு வெச்சுக்கோயேன்"

குறும்பில் மின்னிய அவள் விழிகளைப் பார்த்த ஆதவன் சொன்னான். "பொருளாதார பிரச்சினையே பிரதானமாகிப் போன நடுத்தர குடும்பங்களில் திருமணம் என்பது ஒரு சம்பிரதாயம். என் தாத்தா திருமணம் செய்து கொண்டார், அப்பா, அண்ணன், அக்கா எல்லோரும் செய்து கொண்டார்கள். நாளை நானும் செய்து கொள்வேன் என்பதை தவிர அதற்கு பிரத்தியேக அர்த்தம் எதுவுமில்லை."

"உனக்கு? நீ கூடவா உன் திருமணத்தைப் பற்றி, மனைவி எப்படி இருக்க வேண்டும் என்பதைப் பற்றி எல்லாம் யோசித்ததில்லை? உண்மையை சொல் ஆதி!"

"என் கனவு, கற்பனை எல்லாம் நான் இப்போது எழுதியிருக்கும் எக்ஸாம் பற்றிதான். அதைத் தாண்டி யோசிக்க முடியவில்லை என்னால்."

சுஷ்மா கலகலவென சிரித்தபடி அவன் தோளைப் பற்றினாள். "ஹவ் இன்னஸன்ட் யு வார்!"

தோளில் பதிந்த மிருதுவான கைகள் உடலை சிலிர்க்க வைக்கையில் ஆதவன் சொன்னான். "ரொம்ப இன்னஸன்ட் எல்லாம் இல்ல."

நந்தனம் சிக்னலில் கார் நிற்கையில் "இப்படியே லெப்ட் ஓரமா நிறுத்து சுஷ்மா. நான் இறங்கிக் கொள்கிறேன்" என்றான்.

"உன்னை வீட்டில் டிராப் பண்ணுகிறேன் ஆதி."

"வேண்டாம் நானே போய்க் கொள்வேன்."

"உன் வீட்டிற்கு வந்தால் ஒரு கப் காபி தரவேண்டும் என்று யோசிக்கிறாயா? பரவாயில்லை. நீ என் வீட்டிற்கு வா, பாட்டி சூப்பரா காபி போடுவாங்க. இல்லையா பாட்டி?"

"ஆமாம் தம்பி. வீட்டிற்கு வந்து என் கையால் ஒரு கப் காபி குடித்து விட்டு போங்க" என்றாள் காமுபாட்டி.

"இன்னொரு நாள் வருகிறேன்..." என்றான் மழுப்பலாக.

"இன்னொரு நாள் என்பதற்கு இல்லை என்றுதான் பொருள்" என்றாள் சுஷ்மா.

சிக்னல் மாறவும் கார் வேகம் பிடித்தது. உஸ்மான் சாலையின் போக்குவரத்தில் கலந்து கோடம்பாக்கம் மேம்பாலத்தில் விரைந்தது. இனியும் மறுத்தால் பிகு செய்வதாக தோன்றும் என்பதால் ஆதவன் அமைதியானான். சேகர் எம்போரியத்தை கடந்து, வலதுபக்கம் திரும்பி டைரக்டர் காலனி விநாயகர் கோவிலுக்கு பக்கத்திலிருந்த அந்த பிரமாண்டமான வீட்டின் முன் காரை நிறுத்தி, "இறங்கு ஆதி" என்றாள் சுஷ்மா.

பெரிய லானையும், பச்சைப் புற்களையும் நடைபாதை ஓரமெங்கும் தலையசைத்த வண்ணப் பூக்களையும் பார்த்தவாறு ஆதவன் உடன் நடந்தான். ஹாலில் நுழைந்ததும் சென்ட்ரலைஸ்ட் ஏசியின் குளிரும் ரூம் ஸ்ப்ரேயரின் நறுமணமும் முகத்தைத் தாக்கியது. அவனை சோபாவில் உட்கார சொல்லி விட்டு சுஷ்மா பிரிட்ஜிலிருந்து சாக்லெட் பாக்கெட்டையும், ரோஸ்டட் பாதாமையும் எடுத்து வந்தாள். ஒரு ரெட்புல் டின்னை திறந்தவள், காமு பாட்டி காபியுடன் வரவே "காபியா, கூல்ட்ரிங்கா? எது வேண்டும் உனக்கு?" என்றாள் அவனிடம்.

"எனக்கு எதுவும் வேண்டாம்" என்றான் ஆதவன் மறுப்பாக.

அந்த பிரமாண்ட ஷாண்டிலியர்களை, காஷ்மீர கார்பெட்டை, வீடெங்கும் கொட்டிக் கிடக்கும் பணத்தின் செழுமையை பார்க்கையில் தன் இயலாமை விஸ்வரூபமாய் எளிதில் நிற்பது போலிருந்தது.

"முதன் முதலாக வந்திருக்கிறாய். எதாவது சாப்பிடு ஆதி" என அவள் வற்புறுத்துகையில் சுஷ்மாவின் அம்மாவும், அப்பாவும் காரை விட்டு இறங்கி உள்ளே வந்தார்கள். ஆதவனைப் பார்த்து புருவங்களை உயர்த்தியவர்களிடம் சுஷ்மா அறிமுகம் செய்தாள்.

"இவன் ஆதி. ஆதவன். என்னுடைய ப்ரண்ட்."

ஆதவனின் எளிமையான உடையையும், சாத்வீகமான முகத்தையும் ஒரு நொடி அளவெடுத்த அரவிந்த் படேல் "ஹலோ" என்றார் அவன் வணக்கத்திற்கு பதிலாக.

"உன்னை சந்தித்ததில் மிகவும் மகிழ்ச்சி ஆதவன். இருந்து சாப்பிட்டுவிட்டு போ" என்றாள் சுனந்தா நளினமாக புன்னகைத்து.

ஆதவன் அவர்களிடம் சகஜமாக பேச முடியாமல் விழிக்கையில் தன்னை அழைத்து வந்து இந்த நிலைக்கு ஆளாக்கிய சுஷ்மாவின் மீது கோபம் வந்தது.

ஆதவனைப் பற்றிய அரவிந்த் படேலின்

கேள்விகளுக்கு சுஷ்மாவே பதில் சொன்னாள். சில நிமிட யோசனைக்கு பிறகு, "சரி, பிறகு பார்க்கலாம்" என அரவிந்த் படேல் மனைவியை அணைத்தபடி படியேறி மேலே செல்ல, ஆதவன் கிளம்பினான்.

"நான் வருகிறேன்."

"இரு ஆதி... எதுவுமே சாப்பிடலையே நீ?"

"இல்லை. நான் போக வேண்டும்." ஆதவன் அவள் பேசும் முன் திரும்பி நடக்கத் தொடங்க, சுஷ்மா அவன் பின்னால் ஓடி வந்தாள்.

"சரி வா. உன்னை டிராப் பண்ணுகிறேன்."

"எனக்கு வழி தெரியும் சுஷ்மா."

"ஆதி என் மேல் என்ன கோபம் உனக்கு?" என்றாள் புரியாமல்.

"கோபம் என் மீதுதான் சுஷ்மா. ஒரு நொடி என் அந்தஸ்தை மறந்து போய் உன்னுடன் வந்தது என் பெரிய தவறு."

"மைகாட். உனக்குள் இப்படி ஒரு இன்பீரியாரிட்டி காம்ப்ளக்ஸ் எப்படி வந்தது?" என்றாள் திகைப்புடன்.

"அதை தெரிந்து கொள்ள நீ என் வீட்டில் பிறந்திருக்க வேண்டும்" என்றான்.

"சந்தோஷமாக இருந்திருப்பேன்" என்றாள் அவள்.

"எதையும் சொல்வது ரொம்ப ஈஸி சுஷ்மா."

"அனுபவிப்பது கூட ஈஸிதான். அதற்கான சந்தர்ப்பத்தை நீதான் தர மறுக்கிறாய்."

"என்ன சந்தர்ப்பம்?" என்றான் ஆதவன் புரியாமல்.

"என்னை ஒரு முறை கூட உன் வீட்டிற்கு கூப்பிடடதில்லையே, அதை சொன்னேன்" என்றாள் சுஷ்மா சமாளிப்பாக.

"என் வீடு உனக்கு நிச்சயம் ஏமாற்றமளிக்கும் சுஷ்மா."

"அதை நான் சொல்கிறேன்" என்றாள் சுஷ்மா முடிவாக.

சுஷ்மாவுடன் திரும்பி காரில் பயணிக்கும் போது இவள் எதற்கு தன் வீட்டிற்கு வர இத்தனை அடம் பிடிக்கிறாள் என்ற யோசனை பெரிதாய் எழுந்தது. வீட்டு வாசலில் காரை நிறுத்திவிட்டு இறங்கி உள்ளே நுழைகையில் அம்மா ரேஷன் அரிசியில் கல் பொறுக்கிக் கொண்டிருப்பது கண்ணில் பட்டது. அம்மாவின் பச்சை நூல்புடவையையும், சிவப்பு ரவிக்கையையும், மஞ்சளில் மினுமினுத்த முகத்தையும், அரிசியை புடைக்கும் போது கைகளில் உருண்ட சிவப்பு கண்ணாடி வளையல்களையும் பார்க்கையில் ஜீன்ஸும், சுர்தாவுமாய் நளினமாய் புன்னகைக்கும் சுனந்தா படேல் நினைவுக்கு வந்தாள். சுஷ்மா அம்மாவைப் பற்றி என்ன நினைக்கக் கூடும் என்று ஆதவன் யோசிக்கையில், அவள் "நமஸ்காரம் ஆண்ட்டி" என சகஜமாய் அம்மாவின் அருகில் தரையில் அமர்ந்தாள்.

வாசுகி புரியாமல் இருவரையும் மாறி மாறி பார்த்தாள். கேர்ள் பிரண்ட் என்ற வார்த்தை வீட்டில் உள்ளவர்களை கலவரப்படுத்தும் என்பதால் அம்மாவிடம் அறிமுகப் படுத்துவதற்கான வார்த்தைகளை ஆதவன் யோசிக்க, சுஷ்மாவே சொன்னாள். "ஒரு ரோடு ஆக்ஸிடெண்டில் அடிபட்டவர்களுக்கு உதவி செய்ய போனபோது எனக்கு ஆதியை பழக்கம் ஆண்ட்டி. இன்று வழியில் பார்த்தேன். வீட்டில் டிராப் பண்ணலாம் என்று கூட வந்தேன்."

ஆதவன் வெளியே தெரியாமல் ஒரு பெருமூச்சை வெளியேற்ற, "அப்படியாம்மா? ரொம்ப சந்தோஷம். கொஞ்சம் இரு வருகிறேன்" என வாசுகி எழுந்து உள்ளே போனாள். சகஜமாக வாசுகியை பின்தொடர்ந்த சுஷ்மா, வாசுகி தந்த சர்க்கரைப் பொங்கலையும், வடையையும் ருசித்து சாப்பிட்டாள். "காமு பாட்டிக்கு இத்தனை கிரிஸ்பியாக வடை செய்ய வராது" என்றாள் வாசுகியிடம்.

"ஏன் உன் அம்மா செய்ய மாட்டார்களா?" என்றாள் வாசுகி.

"என் அம்மா சமையலறை பக்கமே போனதில்லை ஆண்ட்டி."

"அப்ப சாப்பாட்டிற்கு என்ன செய்வீர்கள்?" என்றாள் அப்பாவியாக.

அம்மாவின் அறியாமையை தாங்க முடியாத ஆதவன் குறுக்கிட்டான்.

"அவங்களுக்கெல்லாம் நிறைய வேலை இருக்கும். சமைக்க நேரமிருக்காது. அது உனக்கு புரியாதும்மா."

"என் தங்கை பெண்ணும், அண்ணா மருமகளும் கூடத்தான் வேலை பாக்கறாங்க. ஆனா அவங்க நல்லா சமையல் பண்றாங்களே" என்றாள் அம்மா விடாமல்.

ஆதவன் அம்மாவை அதட்டும் முன் சுஷ்மா சொன்னாள். "மனித சுபாவங்களும், வாழ்க்கை முறைகளும் ஒன்றுக்கொன்று வேறுபட்டவை ஆண்ட்டி. உங்களுக்கு வீடுதான் உலகம். என் அம்மாவுக்கு இந்த உலகமே ஒரு வீடுதான்."

வாசுகிக்கு சுஷ்மாவின் வார்த்தைகள் புரியவில்லை என்றாலும் மேற்கொண்டு எதுவும் கேட்காமல் அமைதியானாள். குளியலறையில் இருந்து அப்போதுதான் வெளியே வந்த கண்ணம்மா, சுஷ்மாவை வியப்புடன் பார்க்கவும் "ஆதி... இவங்க யார்னு சொல்லவேயில்லையே... எத்தனை அழகா இருக்காங்க!" என்றாள் சுஷ்மா அத்தையின் அருகில் சென்று.

செயற்கை பூச்சு எதுவுமில்லாமல் வழவழத்த அத்தையின் நிறமும், சுருண்ட முடியும், கட்டுக்குலையாத தேகமும், கருணை பொங்கும் கண்களும் சுஷ்மாவை அசத்தியது.

"உன் முகத்தில் தெரியும் சாத்வீகம் எங்கிருந்து

வந்ததுன்னு இப்ப புரியுது ஆதி" என்றாள் அத்தையின் கைகளைப் பற்றி.

அம்மாவைப் போல அத்தை வெகுளி அல்ல. ஆதி என்ற சுருக்கமான அழைப்பும், நெருக்கமான பேச்சும் அத்தைக்கு புதிய செய்திகளை தெரிவிக்கக் கூடும் என்ற அவசரத்துடன் ஆதவன் சொன்னான்.

"இது சுஷ்மா அத்தை. வழியில் இரண்டொரு முறை பார்த்திருக்கிறோம். அதிக பழக்கமில்லை. இன்று நான் எக்ஸாம் முடிந்து வரும்போது என்னை டிராப் பண்ணுவதாக கூறினாள்..."

"ஆமாம். ஆதி அன்று என்னை பைக்கில் அழைத்துப் போனான். பதிலுக்கு நான் இன்று அவனை காரில் அழைத்து வந்திருக்கிறேன்."

குறும்பில் மின்னிய அவள் விழிகளைப் பார்த்த ஆதவன், அத்தையை பார்க்க முடியாமல் வேறு எங்கோ பார்த்தான். அத்தை சிரித்தபடியே சுஷ்மாவை அணைத்துக் கொண்டாள். "மனிதர்கள் என்றிருந்தால் ஒருத்தருக்கொருத்தர் உதவி செய்து கொள்வது இயல்புதானே!"

"அது உங்களுக்குத் தெரிகிறது அத்தை. உங்கள் மருமகனுக்கு தெரியவில்லை பாருங்களேன். என்னிடம் சண்டை போடுகிறான். என்னை இங்கு வரவேக் கூடாது என்றான். எனக்கு உங்களை எல்லாம் பார்க்க வேண்டும் என்றிருந்ததால் பிடிவாதமாக கிளம்பி வந்தேன். வரலாம் இல்லையா அத்தை?"

ஆதவனுக்கும் அவளுக்கும் மிக அந்நியோன்யமான நட்பு என்கிற ரீதியில் அவள் சொல்லிக் கொண்டு போக, "நீ தாராளமாய் எப்ப வேணும்னாலும் வரலாம். இதை உன் வீடு மாதிரி நினைச்சிக்கோ" என்றாள் கண்ணம்மா.

"தேங்க்யூ அத்தை. இனி உங்களைப் பார்க்க நான் யார் அனுமதியையும் கேட்க வேண்டியதில்லை" என்றாள் சுஷ்மா ஆதவனைப் பார்த்தபடி.

ஆதவன் கோபத்துடன் பற்களைக் கடித்தான்.

"காபி குடிக்கிறாயா சுஷ்மா? பில்டர் காபி" என்றாள் அத்தை.

"ஓ! குடிக்கிறேனே!" சுஷ்மா அழகாய் தலையை அசைத்தாள்.

காபி போட அத்தையும், காய்கறிகாரனுக்கு பதில் சொல்ல அம்மாவும் நகர்ந்ததும் ஆதவன் பொருமினான். "மாசக்கணக்கில் கண்விழிச்சி படிச்சி காலைல டிபன் கூட சாப்பிடாம போய் பரிட்சை எழுதிட்டு வந்திருக்கேன். எனக்கு ஒரு வாய் தண்ணீர் வேணுமான்னு யாரும் கேட்கல."

"எல்லாத்துக்கும் ஒரு ராசி வேணும் ஆதி" என்றாள் சுஷ்மா பெருமையாக.

"முதலில் என்னை ஆதின்னு கூப்பிடறதை நிறுத்து" என்றான் ஆதவன் எரிச்சலுடன்.

"பின்னே எப்படி கூப்பிடுவது? டேய்... வாடா.. தடிமாடு... எருமமாடுன்னு கூப்பிடவா? ஆனா அது நல்லா இருக்குமா...?" சுஷ்மா முகவாயில் விரல் வைத்து யோசித்தாள்.

"ஷட்டப் சுஷ்மா" என்றான் ஆதவன் கத்தலாக.

"என்ன சத்தம் அங்கே?" என்றபடி அத்தை காபியுடன் வர, சுஷ்மா சொன்னாள். "படிச்சி ரொம்ப களைப்பா இருப்ப, காபி, டிபன் சாப்பிடறியான்னு கேட்டேன். அவனுக்கு சாப்பிடவே பிடிக்கலையாம். வயிறு புல்லா இருக்காம். அதான் இவ்வளவு கோபமா வேண்டாம்னு சொல்றான்."

"அதுக்கேன் இவ்வளவு கோபம்? உனக்கு வேண்டாட்டி நான் குடிச்சிட்டு போறேன்." அத்தை ஆதவனுக்கென எடுத்து வந்த காபியை தான் எடுத்துக் கொண்டாள். சுஷ்மா ஆதவனின் கோபத்தையும் காபியுடன் சேர்த்து துளித்துளியாக ரசித்துப் பருகத் தொடங்கினாள்.

காபி குடித்ததும் அத்தையிடம் அரட்டை அடிக்க ஆரம்பித்த சுஷ்மாவிடம் ஆதவன் சொன்னான். "நீ வீட்டுக்கு கிளம்பலையா? நேரமாச்சு போலிருக்கே!"

"என்னை எப்படி விரட்டறான் பாத்தீங்களா அத்தை" என கண்ணம்மாவிடம் புகார் சொன்ன சுஷ்மா, மேலும் சிறிது நேரம் இருந்து ஆதவனின் பொறுமையை சோதித்த பின்பே கிளம்பினாள். "நான் வர்றேன் ஆண்ட்டி" என சுஷ்மா குரல் கொடுத்ததும், வாசுகி தாம்பூலத்தட்டுடன் வந்தாள். வெத்திலை பாக்குடன் பூ இரண்டு வாழைப்பழங்கள், மஞ்சள், குங்குமம், ரவிக்கை துணி முதலியவற்றை ஒரு தட்டில் வைத்துக் கொடுத்தவள், "முதன் முதலாய் வெள்ளிக்கிழமை வீட்டிற்கு

## கையடக்க ஸ்கூட்டர்!

பயணங்களின் போது, கைகளிலேயே மடித்து எடுத்துச் செல்லக் கூடிய மிக எளிமையான ஸ்கூட்டர் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த புதிய ரக ஸ்கூட்டர் செப்டம்பர் மாதம் விற்பனைக்கு வரவுள்ளது. இதன் விலை ரூ.1லட்சத்து 92 ஆயிரம் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சுழற்சி முறையில் தயாரிக்கப்பட்ட அலுமினியத்திலான சக்கரங்கள் இந்த ஸ்கூட்டருக்கு உருவாக்கப்பட்டுள்ளது.

இது ஹைட்ராலிக் டிஸ்க் பிரேக் வசதி கொண்டது. 250 வாட் திறன் கொண்ட மோட்டார் இதில் அமைக்கப்பட்டுள்ளது. லேப்டாப் கருவிக்கு சார்ஜர் செய்யக்கூடிய

ந்திருக்கிறாய். தீர்க்க சுமங்கலியா இரு" ன்றாள் ஆசீர்வாதமாக.

சுஷ்மா சிரித்தபடியே அம்மாவிடம் ாம்பூலத்தையும், ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொண்டு, அத்தையிடம் சொல்லிக் கொண்டு வெளியே வருகையில் சினிமாவுக்கு போயிருந்த ரவணனும், உமாவும் பைக்கில் வந்து றங்கினர்.

"ஹேய், இது ஆதவனின் பைக்தானே!" ன்றாள் சுஷ்மா சரவணனிடம்.

"ஆமாம். அவ்வப்போது நான் இரவல் ாங்கிக் கொள்வேன்" என்று சிரித்தான்.

"நீங்க ஆதியோட அண்ணன் சரவணன். இது உமா. சரிதானே? படம் எப்படியிருந்தது?" ன்றாள் சுஷ்மா.

"ம்... நன்றாக இருந்தது?" உமா சுஷ்மாவைப் ார்த்த பிரமிப்பு நீங்காமல் தலையசைத்தாள்.

"ஓ.கே. அப்பாவை மட்டும்தான் பார்க்க டியவில்லை. அவரை அடுத்தமுறை ந்திப்பதாக சொல்லுங்கள். இப்போது எனக்கு நரமாச்சு. நான் வருகிறேன். பை... பை" என கையசைத்து விட்டு சுஷ்மா வேகமாக ஓடிச் சென்று தன் காரில் ஏறினாள். ரிவர்ஸ் எடுத்து ிரும்பியவள் "ஸீ யூ ஆதி. நாளை சந்திக்கலாம்" ன சிரிப்புடன் தலையசைத்தாள்.

உமாவின் குறுகுறுப்பான பார்வைக்கும், ார் அந்தப் பெண்? ரொம்ப நாள் பழக்கமா?" ன்ற சரவணனின் கேள்விக்கும் பதில் சொல்ல டியாமல் ஆதவன் திணறினான். தன்னை இதுபோன்று அனைவரிடமும் மாட்டி விட்ட ுஷ்மாவின் மீது கோபமும் சிரிப்பும் சேர்ந்தே வந்தது.

சரவணனை



அளவுக்கு 240 வாட்ஸ் மின்சாரம் இருந்தாலே இதற்கு போதுமானது. 4 மணிநேரத்தில் இந்த ஸ்கூட்டருக்குத் தேவையான மின்சக்தியை நிரப்பி விடலாம். நாம் செல்லும் இடத்தைப் பொருத்து 20 முதல் 40 கிலோ மீட்டர் வேகத்தில் இதில் செல்ல முடியும். இதன் எடை 25 கிலோவாகும். நாம் நடந்து செல்ல விரும்பும் போது, இந்த ஸ்கூட்டரை மடித்து கையில் எடுத்துக் கொண்டு நடையைக் கட்டலாம்.

சமாளித்து விட்டு அத்தையின் அருகில் சென்று அமர்ந்த ஆதவன் சொன்னான். "அத்தை அந்தப் பெண் விளையாட்டாக ஏதோ பேசினாள். அவளிடம் எனக்கு அதிகப் பழக்கம் இல்லை. நீங்கள் தவறாக..."

"இதில் தவறாக நினைக்க என்ன இருக்கிறது ஆதவா? ஒரு நாளின் பெரும்பகுதியை வெளியே கழிப்பவர்கள் எத்தனையோ பேரை பார்க்க வேண்டியிருக்கும். பழக வேண்டியிருக்கும். இதில் ஆணும், பெண்ணும் தனித் தனியானவர்களா என்ன?" என்றாள் அத்தை சாதாரணமாக.

அத்தையின் அருகில் அமர்ந்திருந்த அம்மா சொன்னாள். "உன் அண்ணா சேலையூரில் வேலை பார்த்தபோது அவருடன் வேலை செய்த சாரதா டீச்சர் அடிக்கடி நம் வீட்டுக்கு வருவாங்களே ஞாபகம் இருக்கா கண்ணம்மா? புது இடத்தில் சாமான் வாங்க, கடைக்கு போய்வர நமக்கெல்லாம் எத்தனை ஒத்தாசையா இருந்தாங்க? பெரியவனுக்கு டைபாய்டு வந்து நாமெல்லாம் ஆஸ்பத்திரியில் இருந்த போது கூட நமக்காக சமைத்து சாப்பாடு அனுப்பினாள். நல்ல பெண்" என்றாள் வாசுகி வாஞ்சையுடன்.

"ஆமாம் அண்ணி. சரவணன் கல்யாணத்துக்கு கூட சாரதாவும் அவள் கணவனும் வந்திருந்தாங்களே!" என்றாள் அத்தை.

பெண்ணுடன் கலந்து பழக சந்தர்ப்பம் கிடைக்காத சமூகம்தான் அவர்களை போதை பொருளாக கற்பனை செய்ய ஆரம்பிக்கிறது. குடும்ப உறவுகளுக்கு மதிப்பளித்து பழகும் குடும்பங்களில் தோழி என்பதும் ஒரு உறவுதான். அதற்கு பாலினம் கிடையாது. அம்மா, அத்தையின் பெருந்தன்மையான சுபாவத்தில் ஆதவன் நெகிழ்ந்து போனான்.

அம்மா காய்ந்த துணிகளை எடுத்து வைக்க எழுந்து போனாள். அமைதியாக அமர்ந்திருந்த ஆதவனிடம் அத்தை சொன்னாள். "சுஷ்மா கள்ளங்கபடமில்லாத பெண் ஆதவா. மனசில் படறதை பளிச்சென்று பேசறப் பெண். எங்களிடம் அவள் பிரியம் காட்டியதற்கு பிரத்தியேக காரணம் எதுவும் இருக்கும்னு தோணல."

அத்தைக்கு சுஷ்மாவை பிடித்து விட்டது என்ற எண்ணத்தில் ஆதவனின் முகம் சட்டென மலர்ந்து போகவும், கண்ணம்மா சொன்னாள். "ஆனால் உன்னைப் பற்றிய கவலைதான் எனக்கு."

ஆதவன் நுட்பமான இடத்தில் பிடிபட்டாற்போல் திணறினான். தனக்கே பிடிபடாத மனதின் ஆழம் வரை ஊடுருவும் அத்தையின் பார்வையை நினைத்து வியந்தபடி சொன்னான். "உன் வளர்ப்பில் உனக்கே நம்பிக்கை இல்லையா அத்தை?"

"இந்த வீட்டையும், கோவிலையும் தவிர எதுவும் தெரியாது எனக்கு. நாலு சுவற்றுக்குள் நான் உனக்கு கற்பித்த விஷயங்கள் வெளி உலகில் உன்னை எத்தனை தூரம் கட்டுப்படுத்த முடியும்?"

"உனக்கு அந்த கவலையே வேண்டாம் அத்தை. என்னிக்கும் நீ தலைநிமிர்ந்து நிற்கிற மாதிரிதான் நான் நடந்து கொள்வேன்."

"எனக்கு அந்த நம்பிக்கை இருக்கே" என்றாள் புன்னகையுடன்.

"அத்தையும், மருமகனும் என்ன ரகசியம் பேசறீங்க?" என்றபடி சரவணன் வந்து அவர்கள் அருகில் அமர்ந்ததும் பேச்சு திசை மாறியது.

"அம்மா, இன்னிக்கு ராத்திரிக்கு உங்களுக்கு டிபனா, சாப்பாடான்னு மாமி கேட்கறாங்க" என்றபடி உமா வந்து நின்றாள்.

"இன்னிக்கு அமாவாசை விரதம். பால் மட்டும் போதும்னு சொல்" என்றாள் அத்தை.

"அமாவாசை, பவுர்ணமி, பிரதோஷம், வெள்ளி, சனின்னு தினமும் எதற்காக இத்தனை விரதம் இருக்கிறாய் அத்தை? உனக்கும் வயதாகிறது. நினைவிருக்கிறதா?" என்றான் ஆதவன் கண்டிப்புடன்.

அத்தை புன்சிரிப்புடன் சொன்னாள். "நீ வேறு மாதிரி சொல்ற. இப்பதான் உன் ப்ரண்ட் என்னை சின்ன பொண்ணு மாதிரி இருக்கீங்கன்னு சொன்னான்."

"ஓ! அதனால்தான் அவளைப் பிடித்துப் போயிற்றா?" என்றான் பெரிய சிரிப்புடன்.

"சேச்சே! உண்மையாகவே அவள் நல்ல பெண்தான் ஆதவா?"

ஆதவன் முகத்தில் பெரிய புன்னகை விரிந்தது.

## 7

இன்னும் இரண்டொரு நாளில் ஆதவனின் குரூப் ஒன் தேர்வு முடிவு வந்துவிடும். அவன் தலைவிதியை அதுதான் நிர்ணயிக்கப் போகிறது.

செம்மொழி பூங்காவின் மரத்தடியில் அமர்ந்திருந்தவன் தன் கையிலிருந்த புத்தகத்தை பிரிக்க முற்படுகையில் "ஆதவன்" என குரல் கொடுத்தபடி அவனுடன் படித்த நீலேஷ்வர் அவன் அருகில் வந்து அமர்ந்தான்.

"ஹாய் நீலேஷ். எப்படியிருக்கிறாய்?" என்றான் ஆதவன் அவன் கைகளை குலுக்கி.

"பைன் யார். சினிமாவில் நடிக்கப் போகிறேன். அதற்கு என்னை தயார்படுத்திக் கொள்கிறேன். ஜிம்முக்குப் போகிறேன். டான்ஸ் கற்றுக் கொள்கிறேன். நிறைய படம் பார்க்கிறேன். புதிதாக கற்றுக் கொள்ள தினமும் ஏதோ விஷயம் இருக்கிறது ஆதவன். நாட்கள் வேகமாக நகர்கின்றன."

நீலேஷின் அப்பா ஒரு டைரக்டர் என்பது ஆதவனுக்கு நினைவு வந்தது. அப்பாவின் துறையில் மகனை பழக்குகிறார் போலும். நல்லவேளை இவனுக்கு அப்பாவின் தொழிலில் ஆர்வம் இருக்கிறது. படிக்கும்போதே நீலேஷ் ஒரு நடிகனுக்குள்ள கவர்ச்சியுடன்தான் வலம் வருவான்.

"ஷூட்டிங் எப்போது நீலேஷ்? ஹீரோயின் யார்?" என்றான் ஆதவன் ஆர்வத்துடன்.

"அடுத்த மாதம் ஷூட்டிங். அப்பாதான் டைரக்டர். கதை, மியூஸிக் எல்லாம் ரெடி. அரவிந்த் படேல் புரொடக்ஷன்தான். ஹீரோயின் இன்னும் சரியாக முடிவாகவில்லை. அரவிந்த் படேலின் பெண் மிக அழகாக இருப்பாள். அவளை நடிக்க வைக்க முயற்சி நடக்கிறது."

"அவள் சம்மதித்து விட்டாளா?" என்றான் அவன் தன் படபடப்பை அடக்க முடியாமல்.

நீலேஷ் தோள்களை குலுக்கினான். "நோ, முடியாது என்று சொல்லுகிறாள். பட் அவளுடைய பெற்றோர்களுக்கு மகள் நடிப்பதில் விருப்பம் அதிகம்."

"இருந்தாலும் அந்த பெண்ணுக்கு பிரியமில்லாத போது என்ன செய்ய முடியும்?" என்றான் ஆதவன்.

"இதுபோன்ற எத்தனை பெண்களை இந்த சினிமா உலகம் பார்த்திருக்கிறது?" என்றான் நீலேஷ் அலட்சியத்துடன்.

"சினிமாவுக்கு உள்ள ஈர்ப்பு சக்தி மிக அதிகம் ஆதவன். அது ஒருமுறை உள்ளே வந்துவிட்டவர்களை அத்தனை எளிதில் விட்டுவிடாது."

"என்னவோ, சுஷ்மா இதற்கு ஒத்துக் கொள்வாள் என்று எனக்கு தோன்றவில்லை" என்றான் ஆதவன் தன்னையறியாமல்.

"என்ன சுஷ்மாவை உனக்குத் தெரியுமா?" என்றான் நீலேஷ் வியப்புடன்.

"ஒருமுறை பீச்சில் பார்த்தேன். சுனில்தான் காண்பித்தான்."

"அதானே பார்த்தேன்! சுஷ்மா எந்த விழாக்களிலும் கலந்து கொள்ள மாட்டாள். ஒரே துறையில் இருந்த போதும் நானே அவளை சமீபத்தில்தான் சந்தித்தேன். யார் கண்ணிலும் பட்டிராத புதிய பூ. புதுப் பூக்களுக்கு என்றுமே மவுசு அதிகம். அதுவும் சுஷ்மா..." அதற்கு மேல் கேட்க பிடிக்காத ஆதவன் சொன்னான். "ஆல் தி பெஸ்ட் நீலேஷ். உன் விருப்பப்படி தொழிலில் வெற்றியடைய என் வாழ்த்துகள்."

"தேங்க்யூ. ஆமாம், அடுத்து நீ என்ன செய்யப் போகிறாய்? ஏதாவது வேலைக்கு முயற்சி செய்கிறாயா?" என்றான் நீலேஷ்வர்.

"ம்... பார்க்க வேண்டும்" என்றான் ஆதவன் மழுப்பலாக.

"என் அப்பாவின் நண்பர் பெரிய ஸ்கூல்

வைத்திருக்கிறார். அவரிடம் சொல்லி வைக்கட்டுமா?"

'நான் வாத்தியார் வேலைதான் பார்க்க வேண்டும் என்பதை நீ எப்படி முடிவு செய்யலாம்?' என்றெழுந்த சீற்றத்தை மனதிற்குள் அடக்கிய ஆதவன், "தேங்க்ஸ் நீலேஷ். தேவைப்பட்டால் சொல்றேன்" என்றான் அவனிடம்.

மேலும் சில நிமிடங்கள் பேசிக் கொண்டிருந்து விட்டு நீலேஷ்வர் கிளம்பியதும் ஆதவனும் படிக்கப் பிடிக்காமல் வீட்டிற்கு கிளம்பினான்.

❦ ❦ ❦

"வெள்ளைத் தாமரை பூவில் இருப்பாள்
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்..."

உமா பாடிக் கொண்டே கையிலிருந்த சாமந்தி பூவை மாலையாக தொடுத்துக் கொண்டிருந்தாள். குரல் மிக இனிமையாக இருந்தது. ஆனால் விடுமுறை நாளின் சோம்பலான மதிய உறக்கத்திலிருந்த ஆதவன் அதை ரசிக்க முடியாமல் எரிச்சலானான். காலையில் அப்பா பாடி எழுப்புவது போதாமல் மாலையில் இந்த அண்ணி வேறு.

முற்றிலும் தூக்கம் கலைந்து போய்விட ஆதவன் எழுந்து போய் முகம் கழுவிக் கொண்டு வந்தான். உமா எழுந்து போய் ஒரு தட்டில் முறுக்கும், டீயும் எடுத்து வந்தாள்.

"அப்பா வர்ற நேரமாச்சே! இன்னும் எழுந்திருக்கலயேன்னு நினைச்சேன். இந்த டீயை குடிங்க மொதல்ல" என்றாள் ஆதவனிடம்.

"சரிதான். அலாரத்துக்கு பதில் பாட்டு பாடினீங்களா?" என்றவன், அப்பா சதாசிவம் மாமாவுடன் உள்ளே நுழைவதைப் பார்த்ததும், "அண்ணி என்னை கேட்டால் வெளியே போய் இருப்பதாக சொல்லுங்க" என அவசரமாய் உடையை மாற்றிக் கொண்டு வெளியே வந்தான். அம்மாவும் பூக்கூடையுடன் வெளியே நிற்பதைப் பார்த்தவன் "என்னம்மா கோவிலுக்கா" என்றான் வாசுகியிடம்.

"ஆமாம். வருகிறாயா?" என்றாள் எதிர்பார்ப்புடன். அம்மாவுடன் தான் அதிகம் வெளியே சென்றதில்லை என்பது நினைவுக்கு வரவும், "சரி போகலாம்" என ஆதவன் கிளம்பினான்.

"இன்னிக்கு கிருத்திகை இல்லையா? வடபழனி போகணும்" என்றாள்.

கோடம்பாக்கம் மேம்பாலத்தை கடந்து சேகர் எம்போரியத்தை தாண்டுகையில் "சுஷ்மாவின் வீடு இங்கேதான்" என்றான் தன்னையறியாமல்.

"அப்படியா?" என்றாள் அம்மா பிரத்தியேக அர்த்தம் எதுவுமின்றி.

வழக்கம்போல் கோவிலில் கூட்டம் அதிகம் இருந்தது. பிரகாரத்தை அடுத்திருந்த ஹாலில் நிறைய புதுமணத் தம்பதிகள் அமர்ந்திருந்தனர். ஆதவன் அர்ச்சனை தட்டை அம்மாவிடம் கொடுத்துவிட்டு கோவிலை சுற்றி வந்தான். வாசுகி ஒவ்வொரு சந்நிதியிலும் நின்று சுலோகம் சொல்லி ஆரத்தியை கண்ணில் ஒற்றிக் கொண்டு நகர்ந்தாள். அம்மா இங்கிருந்து கிளம்ப இன்னும் ஒரு மணிநேரம் ஆகும்.

அம்மாவிற்கென்று தனிப்பட்ட கோரிக்கைகள் ஏதேனும் இருக்கக்கூடுமா? அது எப்படிப்பட்டதாக இருக்கக்கூடும் என்று யோசித்தபடி தெப்பக்குளத்தை வேடிக்கை பார்த்தபடி நின்றான்.

"ஹலோ சார். என்ன ரொம்ப பக்தி பரவசத்தில் மூழ்கிட்டீங்க போலிருக்கே!" என்ற சுஷ்மாவின் குரல் அவனருகே கேட்டது.

ஆதவன் அவளை எதிர்பாராத வியப்புடனும், மகிழ்ச்சியுடனும் திரும்பிப் பார்த்து புன்னகைத்தான். சுஷ்மா கோவிலுக்கென்று பிரத்தியேக அலங்காரங்கள் ஏதுமின்றி வழக்கம் போல ஜீன்சில் இருந்தாள். அவனைப் பார்த்த சந்தோஷம் முகத்தில் தெரிந்தது.

"வரப்போகும் உன் ரிசல்ட்டுக்காக முருகனை காக்காய்ப் பிடிக்க வந்தியா?" என்றாள் சிரித்தபடி.

"நல்லா படிக்காதவங்கதான் காக்காய், குருவி எல்லாம் பிடிக்க வேண்டும் உன்னை மாதிரி" என்றான் ஆதவன்.

"நான் நல்லா படிக்கலேன்னு உனக்கு எப்படித் தெரியும்?"

"பிறகு நீ எதற்கு கோவிலுக்கு வந்தாய்?"

"நான் சாமி கும்பிட வந்தேன்னு உனக்கு யார் சொன்னது?"

"மை காட். கோவிலுக்கு பிறகு எதற்கு வருவார்கள்?"

"துணையாகவும் வரலாம். அங்கே பார்" சுஷ்மா காண்பித்த இடத்தில் காமுபாட்டி கொடிமரத்தை விழுந்து கும்பிட்டுக் கொண்டிருந்தார்.

"நீ என்ன இந்த பாட்டியுடனேயே சுற்றிக் கொண்டிருக்கிறாய்?" என்றான் ஆதவன் சிரிப்புடன்.

"ம்... வேறு என்ன செய்வது? என்னுடன் சுற்ற யாரும் இல்லை. ஒருவேளை இப்படி செய்தால் என்ன?"

"எப்படி?"

"நாம் இருவரும் சேர்ந்து சுற்றலாம். சரியா?"

ஆதவனுக்கு திடீரென நீலேஷ்வருடன் பேசிக் கொண்டிருந்தது நினைவுக்கு வந்தது. "உன்னுடன் சுற்ற எத்தனையோ ஹீரோக்கள் காத்திருப்பார்கள் சுஷ்மா. இந்த வாத்தியார் பையனின் சிநேகம் உனக்கெதுக்கு?" என்றான் இறுகின குரலில்.

சுஷ்மா புரியாமல் அவனைப் பார்த்தாள்.

"நீ என்ன சொல்கிறாய்?"

"நேற்று நீலேஷ்வரைப் பார்த்தேன்."

"யார் அது நீலேஷ்வர்?"

"என்னிடம் நீ நடிக்க வேண்டிய அவசியமில்லை சுஷ்மா. திரையில் அதை செய்தால் எத்தனையோ அப்பாவி ரசிகர்கள் அதைப் பார்த்து சந்தோஷப் படுவார்கள்."

சுஷ்மாவுக்கு ஆதவனின் இந்த திடீர் குத்தல்பேச்சு புரியவில்லை என்றாலும் "சொல்வதை புரியும்படியாக சொல் ஆதி" என்றாள் அமைதியான குரலில்.

"நீ சினிமாவில் நடிக்கப் போவதாக கேள்விப்பட்டேன்" என்றான் ஆதவன் நேரடியாக.

சுஷ்மாவின் முகத்தில் இனம் விளங்காத பாவம் தெரிந்தது. "சோ?"

'நான் நடிப்பது என் சொந்த விஷயம். அதை கேட்க உனக்கென்ன உரிமையிருக்கிறது' என்ற அர்த்தம் அந்த ஒற்றை வார்த்தையில் தெரிய, ஆதவன் பதில் சொல்ல முடியாமல் அமைதியானான்.

சுஷ்மா அவன் எதிரே நின்றாள். "பதில் சொல் ஆதி" என்றாள்



அவன் முகத்தைப் பார்த்து.


ஆதவன் அமைதியாகவே இருக்கவும், "சொல்லு ஆதி. நீலேஷ்வர் சொன்னான் சரி. உனக்கேன் அதற்கு இத்தனை கோபம்?"

ஆதவன் அதற்கும் பதில் பேசாமல் இருக்கவே, சுஷ்மா அவனை நெருங்கி அவன் கண்களைப் பார்த்து சொன்னாள். "சொல்லு ஆதி, நீ என்னுடையவள்னு சொல். நான் கட்டிக்கப் போற பொண்ணுன்னு சொல்லு. ஐ லவ் யூன்னு சொல்."

ஆதவன் தன்னையறியாமல் ஓரடி பின்னால் நகர்ந்தான். சுஷ்மா தான் கேட்டதற்கு பதில் சொல்ல விரும்பாமல் தன்னை வேண்டுமென்றே சீண்டிப் பார்க்கிறாள் என்ற கோபம் வந்தது. பேசாமல் திரும்பி நடக்க முற்பட்டவனின் கைகளைப் பற்றினாள் சுஷ்மா. "எனக்கு பதில் சொல்லிட்டுப் போ ஆதி."

ஆதவன் தன் கைகளை உதறினான். முகம் கோபத்தில் சிவந்து ஜொலிக்க, கடித்த பற்களுக்கிடையே வார்த்தைகளை துப்பினான்.

"உன் பர்சனல் விஷயத்தில் தலையிட்டது என்னுடைய தவறுதான். உனக்கு பதில் சொல்ல விருப்பமில்லை என்றால் அதை நேரடியாக



சொல்லலாம். அதற்காக என்னை அவமானப்படுத்த வேண்டியதில்லை"

திகைப்புடன் அவன் முகத்தைப் பார்த்த சுஷ்மா, மிருதுவான குரலில் கேட்டாள். "அன்பை சொல்லுவது அவமானப் படுத்துவதாகுமா ஆதி?"

"தனக்கு பொருத்தமானவர்களிடம்தான் அன்பு ஏற்பட வேண்டும். தகுதியில்லாத இடத்தில் ஏற்படும் அன்பு அவமானத்தில்தான் போய் முடியும்."

"தகுதி என்று நீ எதை சொல்கிறாய் ஆதி?"

"ப்ளீஸ் ஸ்டாப் இட் சுஷ்மா" என்றான் ஆதவன் அலுப்புடன். "பிரச்சினைகளே இல்லாத வாழ்க்கை உன்னுடையது. எதிர்காலத்தைப் பற்றிய கவலைகளோ, அந்த கவலை ஏற்படுத்தும் பயங்களோ இல்லை. அதனால் வாழ்க்கை உற்சாகமாக இருக்கிறது. கேலி செய்து சிரிப்பதும், வம்புக்கு இழுப்பதும், ஓடிப்போய் உதவி செய்வதும் உனக்கு சுவாரஸ்யமான பொழுதுபோக்காக இருக்கலாம். ஆனால் அதற்கு நான் ஆள் இல்லை. என்னை விட்டுவிடு."

சுஷ்மா அடுத்த வார்த்தை பேசும் முன் ஆதவன் வேகமாக நடந்தான். தரிசனம் முடிந்து அவனைத் தேடத் தொடங்கிய அம்மாவிடம் "போகலாமா?" என்றபடி கோவிலை விட்டு வெளியே வந்தான்.

ஆதவன் அன்று இரவெல்லாம் தூங்க முடியாமல் படுக்கையில் புரண்டான். சுஷ்மாவின் வார்த்தைகளே காதில் ஒலித்தது.

## 8

டி.வி.யை ஓடவிட்டு கையில் புத்தகத்தை பிரித்து வைத்திருந்த சுஷ்மாவுக்கு இரண்டிலும் மனம் செல்லாமல் பார்வை எங்கோ நிலைத்தது. நேற்று கோவிலில் சந்தித்த ஆதவனின் கோபமான முகம் நினைவுக்கு வந்து தன்னையறியாமல் புன்னகை மலர்ந்தது. அவனை பார்த்த நாளில் இருந்தே அவனிடம் ஒரு பிரியம் ஏற்பட்ட போதும் அதை இப்படி திடுதிப்பென போட்டு உடைக்க வேண்டும் என்று அவள் எண்ணியிருக்கவில்லை. ஆதவன் உரிமையுடன் அவளிடம் கோபித்துக் கொண்டது அவளுக்கு பிடித்திருந்தது. அதே உரிமையை தானும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் மனதில் இருந்ததை சொல்லி விட்டாள். அதை அவன் ஏன் நம்பவில்லை. நல்ல குடும்ப பின்னணியும், படிப்பும், கம்பீரமான உருவமும் உள்ள அவன் மீது விருப்பம் ஏற்படுவது இயல்பான விஷயம் என்று ஏன் அவனுக்கு புரியவில்லை?

சுஷ்மா சோபாவில் பின்னால் சரிந்து கண்களை மூடினாள். சுகமும், துக்கமுமாய் விநோத உணர்வொன்று எழுந்து மனமெங்கும் பரவியது.

"சுஷ்மா டி.வி. பார்த்துட்டே தூங்கறியா?" என்ற அர்ஜுன் குரல் கேட்டு சுஷ்மா கண்களைத் திறந்தாள்.

"ஏய் அர்ஜுன்... நீ எப்போ அமெரிக்காவிலிருந்து வந்தாய்?" என்றாள் வியப்புடன்.

"காலையில்"

"என்ன, காலையில் வந்து விட்டாயா? நான் உன்னைப் பார்க்கவே இல்லையே!"

"ஆமாம். நானும் வீட்டில் யாரையும் இன்னும் சந்திக்கவில்லை."

"உன் கோர்ஸ் எப்படிப் போகிறது?"

"ம்... போகிறது. இன்னும் மூன்று மாதத்தில் முடிந்து விடும். நீ என்ன செய்கிறாய்? உன் டிகிரி முடிந்து விட்டதில்லையா? அப்பாவின் படத்தில் நடிக்கப் போவதாக கேள்விப்பட்டேனே!" என்றான் அர்ஜுன்.

சுஷ்மாவுக்கு தூக்கி வாரிப்போட்டது. கோவிலில் ஆதவன் சொன்னதை அமெரிக்காவிலிருந்து வரும் அர்ஜுனும் சொல்கிறான். "எனக்கே தெரியாத விஷயம். என்னைப் பற்றி உனக்கு எப்படித் தெரிந்தது?" என்றாள்.

"இது பெரிய விஷயம் இல்லை. நம்ம ஊர் சினிமா பத்திரிகை ஒன்றை நான் நெட்டில் படித்த போது அதில் டாடி தயாரிக்கும் படம் ஒன்றில் நீ கதாநாயகியாகவும், டைரக்டர் வர்மாவின் மகன் ஹீரோ என்றும் செய்தி வந்திருந்தது."

எப்போதோ ஒரு முறை அப்பா அவளிடம் நடிப்பதைப் பற்றிக் கேட்டிருக்கிறார். சுஷ்மா முடியவே முடியாது என்று மறுத்திருக்கிறாள். அத்துடன் அதை மறந்தும் போனாள். இப்போது அவளை கேட்காமலே யார் பத்திரிகைக்கு தகவல் அனுப்பியிருக்கக் கூடும்?

"எனி வே சுஷ்மா, நல்ல சான்ஸ் வரும்போது அதை சரியாக பயன்படுத்திக் கொள். ஆல் த பெஸ்ட் பார் யுவர் ப்யூச்சர். எனக்கு அக்கார்ட் ஹோட்டலில் இன்று ஒரு டின்னருக்கு போக வேண்டும். வரட்டுமா?" என அர்ஜுன் அவளிடம் கைகுலுக்கி விட்டுப் போனான்.

'நடிக்கப் போறியா?' என கோபப்பட்ட ஆதவனும், 'வாழ்த்துகள்' சொல்லிவிட்டுப் போன அண்ணனும் மாறி மாறி நினைவில் வர சுஷ்மா தன்னை சுற்றி என்ன நடக்கிறதென புரியாத குழப்பத்தில் இருந்தாள்.

இரவு அம்மாவும் அப்பாவும் தங்கள் பார்ட்டி முடிந்து வரும் வரை சுஷ்மா ஹாலிலேயே காத்திருந்தாள். "உங்களிடம் பேச வேண்டும்" என அவள் ஆரம்பித்ததை அவர்கள் கேட்கும் நிலையில் இல்லை. நள்ளிரவு வரை அருந்திய மதுவின் கிறக்கத்தில் அரவிந்த்

படேலும், பார்ட்டி முடிந்த களைப்பில் சுனந்தா படேலும் இருந்தார்கள். "குட் நைட் பேபி" என சுனந்தா மகளின் கன்னத்தில் முத்தமிட்டு விட்டு செல்ல, அரவிந்த் படேலும் மனைவியை பின்தொடர்ந்தார்.

என்னதான் வீட்டினரின் பழக்க பழக்கங்கள் தெரிந்திருந்த போதிலும் பெற்றோருடன் பேசுவதற்காக மறுநாள் மதியம் வரை காத்திருக்க நேர்ந்தது சுஷ்மாவின் பொறுமையை சோதித்தது.

மதிய உணவு வேளையில் மூவரும் ஒன்றாக அமர்ந்திருக்கையில் சுனந்தா படேல் மகளிடம் சொன்னாள். "டாடி ஒரு வாரமாய் உன்னுடன் பேச வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார் சுஷ்மா."

சுஷ்மா அப்பாவைப் பார்க்க, "யெஸ் பேபி. நீ இப்போது ப்ரீயா?" என்றார்.

சுஷ்மா "ஆமாம்" என்று தலையசைத்ததும் "டைரக்டர் வர்மாவை உனக்குத் தெரியுமில்லையா?" என்றார் மகளிடம்.

"யா..."

"அவர் நம் பேனரில் ஒரு படம் டைரக்ட் செய்கிறார். அவர் மகன் நீலேஷ்வர்தான் ஹீரோ. பையன் நல்ல ஸ்மார்ட்டாய் இருக்கிறான். மியூஸிக், ஸ்டோரி எல்லாம் முடிவு செய்தாயிற்று. ஹீரோயினுக்காக பல மாதங்கள் மும்பைக்கும், கேரளாவுக்கும் அலைந்தும் யாரையும் பிடிக்கவில்லை. சமீபத்தில் உன்னை சந்தித்த வர்மா நீதான் ஹீரோயின் என பிடிவாதமாக இருக்கிறான்."

வர்மாவின் வற்புறுத்தலின் பேரில் அம்மாவுடன் ஒரு முறை சத்தியம் தியேட்டருக்கு சென்றது நினைவுக்கு வந்தது.

"என் விஷயத்தில் பிடிவாதம் பிடிக்க வர்மா யார்?" என்றாள் சுஷ்மா அப்பாவிடம்.

"அவர் ஒரு டைரக்டர் சுஷ்மா. தன் எதிர்பார்ப்புகளுக்கு தகுந்த மாதிரி ஒரு பெண்ணை நேரில் பார்க்கும் போது எப்படியும் நழுவ விடக் கூடாது என்றுதான் நினைப்பார்."

"நினைப்பதற்கு அவருக்கு உரிமை இருக்கிற மாதிரி மறுப்பதற்கு எனக்கும் உரிமை இருக்கிறது டாடி."

"நிச்சயமாக" என்றார் அரவிந்த்படேல் தணிவாக. "ஆனால் ஏன் மறுக்க வேண்டும்? யோசித்துப் பார். சினிமாவில் ஒரு சின்ன இடத்திலாவது தலையைக் காட்ட ஒரு சந்தர்ப்பம் கிடைக்காதா என தினமும் கோடம்பாக்கத்துக்கு வந்து குவியும் கூட்டத்தைப் பற்றித் தெரியுமா உனக்கு? என் மகள் என்பதால் நீ சிரமப்படாமலே கதாநாயகி அந்தஸ்து உன்னைத் தேடி வருகிறது. அதை பயன்படுத்திக் கொள்வதுதான் புத்திசாலித்தனம் சுஷ்மா."

"எனக்கு ஒரு விஷயத்தில் விருப்பம் இருக்கும் போது அது கிடைக்கவில்லை என்றாலும் கூட அதற்காக மெனக்கெடுவதில் ஒரு நியாயம் இருக்கிறது. எனக்கு பிடிக்காத விஷயம், அது எத்தனை உயர்ந்ததாய் இருந்தாலும் அதில் எனக்கு அக்கறை இல்லை."

"நீ அதிகம் சினிமாவே பார்த்ததில்லை. சினிமா ஷூட்டிங்களுக்கும் வந்ததில்லை. ஒரு படம் எப்படித் தயாராகிறது, அதிலுள்ள சிரமங்கள், பிரச்சினைகள் பற்றி உனக்குத் தெரியுமா? ஒரு விஷயத்தைப் பற்றி தெரிந்து கொள்ளாமலே பிடிக்கவில்லை என்று எப்படி சொல்வாய்? ஒரு படத்தில் நடித்துப் பார். பிறகு சொல் பிடிக்கவில்லை என்று. நான் வற்புறுத்த மாட்டேன்."

"அப்பாவுடைய படம் என்பதால் நீ எதற்கும் தயங்க வேண்டியதில்லை. எல்லோரும் உன்னிடம் ரொம்ப மரியாதையாக நடந்து கொள்வார்கள். சினிமா தரும் கவர்ச்சியும் அதனால் ஏற்படும் புகழும் அலாதியானவை சுஷ்மா. கேமராக்களின் ஒளியும், மீடியாக்களின் வெளிச்சமும் உண்டாக்கும் போதை எளிதில் விலகாது" என்றாள் சுனந்தா.

"கனவுலகத்தின் ராணியாய் வாழ்வதை விட நிஜ உலகத்தில் சராசரிப் பெண்ணாய் வாழ்வதுதான் எனக்குப் பிடித்திருக்கிறது. என்னை வற்புறுத்தாதீர்கள். உங்கள் சினிமாவுக்கு வாரிசாக அர்ஜுன் இருக்கிறான். பணமும் நிறைய சம்பாதித்து விட்டீர்கள். நான் நடித்துதான் சம்பாதிக்க வேண்டும் என்ற நிலை இல்லை. என்னை என்போக்கில் விடுங்கள்."

அரவிந்த் படேலும் சுனந்தா படேலும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ள சுனந்தா கேட்டாள். "உன் படிப்பு முடிந்து விட்டது. உன் எதிர்காலத்தை தீர்மானிக்க வேண்டாமா? நடிக்க பிடிக்கவில்லை என்றால் திருமணமாவது செய்து கொள். புரொடியூசர் ராம்ரெட்டியின் மகன், தொழிலதிபர் சந்தோஷ்கிருஷ்ணாவின் தம்பி என இப்போதே நிறைய பேர் பெண் கேட்டு நச்சரிக்கிறார்கள். படிப்பு முடியவில்லை என இத்தனை நாள் சொல்லிக் கொண்டிருந்தோம். இப்போது படிப்பும் முடிந்து விட்டதால் திருமணமா? சினிமாவா? என்பதை நீதான் தீர்மானிக்க வேண்டும்."

"இரண்டுமே இப்போதைக்கு இல்லை" என்றாள் சுஷ்மா. "நிச்சயம் நடிப்பு எனது தொழில் இல்லை. திருமணம், என் மனதுக்கு பிடித்தவனைத்தான் செய்து கொள்வேன். என் திருமணத்தின் மூலமாய் உங்கள் அந்தஸ்தை உயர்த்திக் கொள்ளவோ, தொழிலுக்கு ஆதாயம் தேடவோ திட்டம் போடாதீர்கள். அது நடக்காது."

"சுஷ்மா நீ யாரையாவது காதலிக்கிறாயா?" என்றார் அரவிந்த் படேல் அவளை கூர்மையாக பார்த்து.

சுஷ்மா அவரை நேரடியாக பார்க்காமல் சொன்னாள். "என் மனதுக்கு ஒருவனை

பிடித்து, அவனுக்கும் என்னை பிடித்துப் போனால் முதலில் உங்களிடம்தான் சொல்வேன். எதற்காகவும் மறைக்க மாட்டேன்."

சற்று நேரம் சாப்பாட்டு அறையில் மவுனம் நிலவியது. ஸ்பூன்கள் பீங்கான் பிளேட்டுகளுடன் உராயும் சத்தம் மட்டுமே கேட்டது.

மேற்கொண்டு எதுவும் பேசாமல் நாப்கினில் கைகளை துடைத்துக் கொண்டு எழுந்த அரவிந்த் படேல், "ஓ.கே. ஸ்வீட்டி. எதுவாக இருந்தாலும் நல்ல முடிவாக எடு" என்றார் மகளின் கைகளைக் குலுக்கி.

"தேங்க்யூ டாடி" என சுஷ்மா புன்னகைக்கவும், சுனந்தாபடேல் மகளின் முதுகை தட்டிக் கொடுத்துவிட்டு "இன்று கிளப்பில் அசோசியேஷன் மீட்டிங் இருக்கிறது. இப்போதே கிளம்பினால்தான் சரியாக இருக்கும். வரட்டுமா?" என கிளம்பினாள்.

சுஷ்மா ஒரு பெருமூச்சுடன் டேபிள் மீதிருந்த சாலட் கிண்ணத்தை கையில் எடுத்தாள்.

## 9

ஆதவனுக்கு நாட்கள் நகராமல் நின்றன. காலையில் பால் பூத்தில் பால் வாங்கி வருவதும், கடையில் மளிகை சாமான்கள் வாங்கப் போவதும், மாலையில் அப்பாவிடம் டியூஷன் படிக்க வரும் மாணவர்களுக்கு உதவி செய்வதும் போக மீதி நேரம் நகராமல் நின்றது. ஆசிரியர் தொழிலில் அவனுக்கு விருப்பம் இல்லை என்று உறுதியாக கூறியதால் அப்பா தெரிந்தவர்கள் மூலமாக கிளார்க் வேலைக்கு முயற்சி செய்து கொண்டிருந்தார். ஆதவன் மிக பொறுமையுடன் தேர்வு முடிவுக்கு காத்திருந்தான்.

சுஷ்மாவை அன்று கோவிலில் பார்த்த பிறகு அவன் வேறு எங்கும் சந்திக்கவே இல்லை. அவளது பரிட்சையும் முடிந்திருக்கும். அடுத்து என்ன செய்வாள்? தினசரி பத்திரிகையை தினமும் படிக்கையில் ஆதவன் வழக்கத்திற்கு மாறாக சினிமா செய்தியை கவனத்துடன் படித்தான். ஒரு நாள் பெட்டி செய்தியில் நீலேஷ்வர் ஒரு வட இந்திய நடிகையுடன் அரவிந்த்படேல் தயாரிப்பில் நடிப்பதாக செய்தி வந்திருந்தது. ஆதவன் நிம்மதி பெருமூச்சு விட்டான். எதற்காக இந்த பரபரப்பு? ஏன் இந்த நிம்மதி என்பது புரியவில்லை என்றாலும் மனம் தெளிவாக இருந்தது.

அன்று மாலை கீரை ஆய்ந்து கொண்டிருந்த அத்தையின் அருகில் அமர்ந்து ஆதவன் ஒவ்வொரு இலையாக பிய்த்து போட்டுக் கொண்டிருந்தான்.

"குரங்கு கைல பூமாலைன்னு சொல்லுவாங்க. இப்ப பூ மாலைக்கு பதில் கீரையா?" என்றாள் அத்தை.

### தத்துக் கொடுத்த மகளை 77 ஆண்டுக்கு பிறகு சந்தித்த 100 வயது தாய்!

டச்சு நாட்டை சேர்ந்தவர் மின்கா டிஸ்ப்ரோ. மிகச் சிறிய வயதிலேயே டாக்காவின் தென்பகுதியில் அகதியாக குடிபெயர்ந்தவர். குடும்பத்தை விட்டு அனாதையான இவர் 8-ம் வகுப்பு வரை மட்டுமே படித்திருந்தார்.

டாக்காவில் உள்ள ஒரு பண்ணையில் வேலை செய்து வாழ்க்கை நடத்தி வந்த இவர் 1928-ம் ஆண்டு அடையாளம் தெரியாத ஒருவரால் பாலியல் வன்கொடுமைக்கு ஆளானார். இதில் கர்ப்பமுற்ற இவர் அழகிய பெண் குழந்தையை பெற்றெடுத்தார். ஆனால், அந்தக் குழந்தையை வளர்க்க போதிய வயதும், அனுபவமும் இல்லாததால்



"ஏன் சொல்ல மாட்ட? தினமும் வீட்டையே சுத்தி வரேன் இல்லையா? குரங்காய்த்தான் தெரிவேன்."

"ஏன் ஆதவா கோவிச்சிக்கற? உங்கிட்ட விளையாடாம வேறு யார்கிட்ட விளையாடுவேன் நான்?" என்றாள் அத்தை அவன் முகவாயைப் பற்றி.

"என்னை ஒண்ணும் தாஜா பண்ணாதே. என் கவலை எனக்கு" என்றான் ஆதவன் முகத்தை திருப்பியபடி.

சிறுவயதில் சாப்பிட மறுத்து முகத்தைத் திருப்பிக் கொள்ளும் ஆதவன் நினைவுக்கு வர அத்தை வாஞ்சையுடன் அவன் தோளைப் பற்றினாள். "எதுக்கு இத்தனை டென்ஷன்? அமைதியாய் இரு ஆதவா. உனக்குன்னு விதிச்சிருக்கிறது எதுவோ அது உன்னைத் தேடி வந்தே தீரும். கவலைப்படுவதால் ஆவது எதுவுமில்லை."

தனது அத்தனை கவலைகளையும் கோபதாபங்களையும் தினமும் கோவிலில் இறக்கி வைத்து விட்டு நிர்மலமான மனதுடன் வீடு திரும்பும் அத்தையின் மனோநிலை அத்தனை பேருக்கும் சாத்தியம் இல்லை. துக்கத்தில் துவண்டு போகாமல், தோல்வியில்

த்து கொடுத்து விட்டார்.

இருந்தாலும் தனது மகளை பார்க்கும் ஆர்வத்தில் தொடர்ந்து தேடி வந்தார். அவரது தேடலுக்கு 77 ஆண்டுகள் கழித்து பலன் கிடைத்தது. லீ நார்வே நாட்டை சேர்ந்த பாதிரியார் குடும்பத்தாரால் வளர்த்து ஏராமரிக்கப்பட்ட இவரது மகள் பெட்டி ஜேனை சமீபத்தில் நேரில் சந்தித்த மின்கா, டச்சிக் குளிர்ந்து போனார். இவரது மகள் பெட்டி ஜேன் தனது பெயரை ரூத் லீ என்று மாற்றி கொண்டார். விண்வெளி வீராங்கனையாகவும் பணியாற்றி வந்தார். தனது பணிக் காலத்தில் நான்கு முறை விண்கலத்தில் சாகசப் பயணம் மேற்கொண்ட இவர், 517 முறை விண்வெளியில் உலகைச் சுற்றி வந்துள்ளார்.

கடந்த 2006-ம் ஆண்டு தற்செயலாக தாயும், மகளும் பலமுறை நேரில் சந்தித்து கொண்ட போதிலும் உறவு முறை தெரியாமலேயே இந்தச் சந்திப்பு நடந்ததாக இருவரும் தெரிவிக்கின்றனர். தற்போது பேத்தி, கொள்ளுப் பேத்திகளுடன் வாழ்ந்து வரும் மகள் லீயை, 77 ஆண்டுகளுக்கு பிறகு சந்தித்ததில் அளவு கடந்த மகிழ்ச்சியில் இருக்கிறார் 100 வயது தாய் மின்கா. இவர்களுடைய சந்திப்பு பலரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

டைந்து போகாமல் அன்பையும், கனிவையும் மட்டுமே திருப்பித் தரும் அத்தையின் சுபாவம் பிறவியிலேயே அமைந்ததாக இருக்க வேண்டும்.

காலிங்பெல்லின் ஓசை உரக்கக் கேட்டது.

"உனக்கு போர் அடிக்குதில்லையா, இப்ப யார் வேலை வந்து விட்டது. கதவை திறந்து யார்னு பார்" என்றாள் அத்தை.

நெற்றி நிறைய விபூதியும், கைகளில் மஞ்சள் துணிப் பையுமாய் நடுத்தர வயது மனிதர் ஒருவர் நின்றிருந்தார். "சங்கரன் ஆசிரியர் வீடு இதுதானே!" என்றார் பவ்யமாக.

"ஆமாம். நீங்க?"

"நான் சங்கரனோட மாமா பிள்ளை மூர்த்தி இருக்கானே, அந்த மூர்த்தியின் சம்பந்தியோட அண்ணன்."

"ரொம்ப நெருங்கிய உறவுதான். உள்ளே வாங்க" என்றான் ஆதவன் புன்சிரிப்புடன்.

அவர் வந்து உட்கார்ந்ததும் டியூஷனை முடித்து விட்டு எழுந்து வந்த சங்கரன், "அடடே... விஸ்வநாதனா? வாங்க... வாங்க" என்றார் உற்சாகத்துடன்.

"இவன்தான் என் இரண்டாவது பிள்ளை ஆதவன்" என சங்கரன் சொன்னதும், விஸ்வநாதனின் பார்வை ஆதவனை தலைமுதல் கால் வரை அளவெடுத்தது. "ஆதவா, அம்மாவை சாப்பிட ஏதாவது கொண்டு வரச் சொல்" என்றார் சங்கரன்.

ஆதவன் அம்மாவிடம் சொல்லிவிட்டு குளிக்கப் போனான்.

இரவு ஆதவன் சாப்பிட அமர்கையில் அம்மா அப்பாவிடம் கேட்டுக்கொண்டிருந்தாள். "விஸ்வநாதன் வந்திருந்தாரே, என்ன விஷயம்? அவங்க வீட்ல ஏதாவது விசேஷமா?"

"விசேஷம் அவன் வீட்ல மட்டுமல்ல, நமக்காகவும்தான். விஸ்வநாதனின் மூத்த பெண்ணை ஒரு கல்யாணத்தில் பார்த்தோமே நினைவிருக்கிறதா? பி.காம். முடிச்சிட்டு ஒரு பிரைவேட் கம்பெனியில் வேலை பார்க்கறாளாம். அவளுக்கு நம்ம ஆதவனை பார்க்கலாமான்னு மூர்த்தி கேட்டான். சரி ஜாதகத்தை தரச் சொல்லு. ப்ராப்தம் இருந்தா நடக்கட்டும்னேன். அதான் விஸ்வநாதன் ஜாதகத்தை கொடுத்துட்டு மாப்பிள்ளையையும் ஒரு தடவை பாத்துட்டு போகலாம்னு வந்திருக்கார்."

ஆதவனுக்கு கோபத்தில் நரம்புகள் புடைத்தன. கையில் இருந்த உணவு தட்டில் சிதறியது. சில மாதங்கள் முன்பு சரவணனுக்கு கல்யாணம் பேச சிலர் வந்து போனதும், அப்பா சரவணனை கலந்து கூட ஆலோசிக்காமல் அவன் கல்யாணத்தை நடத்தி முடித்தது நினைவுக்கு வந்தது. ஆதவன் கையை கழுவிக் கொண்டு வந்து அத்தையின் எதிரில் நின்றான்.

"இதற்குள்ளாகவா சாப்பிட்டு விட்டாய்? இப்போதுதானே உனக்கு சாப்பாடு எடுத்து வைத்தேன்?" என்றாள் அவனைப் பார்த்ததும்.

"இன்று காலையில் நம் வீட்டிற்கு வந்தது யார் என்று தெரியுமா?" அத்தை பதில் பேசாமல் இருக்க, ஆதவன் சொன்னான்."எனக்கு கல்யாணமாம். வேடிக்கையாக இல்லை?"

"இதில் வேடிக்கை என்ன ஆதவா? பிள்ளைகளுக்கு திருமணம் செய்து வைப்பது பெற்றோர்களின் கடமை இல்லையா?"

"இல்லை. எனக்கு இன்னும் அதற்குரிய தகுதியோ, வயதோ ஆகவில்லை. என்னுடைய சாப்பாடே அப்பாவின், அண்ணனின் தயவில்தான் நடக்கிறது. படிப்பு நீங்கள் போட்ட பிச்சை. இதில் என்னை நம்பி ஒரு பெண் வாழ வருவது கண்ணைக் கட்டிக் கொண்டு கிணற்றில் விழுவது போலத்தான்."

"நீ இந்த வீட்டு பையன் ஆதவா. இந்த வீட்டில் சாப்பிடவும், படிக்கவும் உனக்கு சகல உரிமையும் இருக்கிறது. இதில் உன்னுடையது என்னுடையது என்ற பேச்சு எங்கிருந்து வந்தது?" என்றாள் அத்தை குரலில் அழுத்தத்துடன்.

ஒரு நிமிடம் தலைகுனிந்து அமைதியான ஆதவன் சொன்னான்.

"எப்படியிருந்தாலும் என் திருமணம்

இப்போது நினைத்து கூட பார்க்க முடியாத விஷயம். முதலில் ஒரு வேலை வேண்டும் எனக்கு."

"அவ்வளவுதானே" என்றாள் அப்போது அங்கு வந்த வாசுகி. "நிச்சயதார்த்தம் வேண்டுமானால் செய்து கொள்ளலாம். வேலை கிடைத்த பிறகு திருமணத்தை வைத்துக் கொண்டால் போயிற்று" என்றாள் சுலபமாக.

ஆதவன் சத்தமின்றி பற்களை கடித்தான். அப்பாவின் பேச்சுக்கு தலையாட்டி அம்மாவுக்கு யோசிக்கவே மறந்து போய்விட்டது என்று எண்ணியவனாக முடிவாக சொன்னான். "இன்னும் சில வருடங்களுக்கு இந்த பேச்சையே வீட்டில் யாரும் பேசக் கூடாது. அதுவுமில்லாமல் இப்படி எல்லாம் ஒரு நாள் பொழுதில் பேசி முடிவெடுத்து என்னால் திருமணம் செய்து கொள்ள முடியாது. எனக்கென்று சில எதிர்பார்ப்புகள் இருக்கின்றன. அதை நீங்கள் மதித்துத்தான் ஆக வேண்டும்."

ஆதவன் உறுதியாக சொல்லிவிட்டு அங்கிருந்து நகர்ந்ததும், "என்ன கண்ணம்மா, இவன் இப்படி சொல்கிறானே... உன் அண்ணாவுக்கு தெரிந்தால் கோபப்படுவாரே" என்றாள் வாசுகி கவலையுடன்.

"கவலைப்படாதீர்கள்... ஆதவனின் பிடிவாதமும், அண்ணாவின் கோபமும் நமக்கு புதுசா என்ன? ஆதவனுக்கு இப்போது திருமணத்திற்கு என்ன அவசரம்? பொறுத்து செய்யலாம் அண்ணி" என்றாள் அத்தை.

"ஆனால் இது நல்ல இடம் என்று உன் அண்ணா அபிப்ராயப்படுகிறார்."

"அவன் நேரம் இதை விட நல்ல பெண்ணாய் கூட கிடைக்கலாம். அண்ணாவிடம் பேசலாம் வா அண்ணி" என்ற கண்ணம்மா வாசுகியுடன் போய் சங்கரன் எதிரில் நின்றாள்.

"அதானே பார்த்தேன். உன் மருமகனுக்கு இன்னும் நீ தூது வரலையேன்னு நினைச்சேன். நான் எது செய்தாலும் அதற்கு எதிராக நடந்துக்கறதுன்னு நீயும் அவனும் முடிவு செய்திருக்கிறீர்களா கண்ணம்மா?" என்றார் சங்கரன் கோபமாக.

"அப்படி எல்லாம் இல்லை. ஆண்பிள்ளையின் திருமணத்திற்கு ஏன் இப்படி அவசரப்படணும்? நம்ம ஆதவனின் குணத்துக்கும், லட்சணத்துக்கும் பொண்ணா கிடைக்காது? ஊருக்குள் உங்களுக்கு இருக்கும் மரியாதைக்கு பெண் வீட்டார் என்னிக்கும் போட்டி போட்டுகிட்டு வருவாங்க பாருங்க."

வாசுகி மவுனமாக வேடிக்கை பார்த்தபடி நின்றிருக்க, அத்தை தன் அண்ணனை புகழ்ந்தும், கெஞ்சியும் பேசி இளக வைத்தாள்.

"அவனுக்கு வக்காலத்து வாங்க வீட்டிலேயே ஆள் இருக்கும் போது நான் என்ன செய்ய முடியும்? அவன் விருப்பப்படி நடக்கட்டும். ஆனால் கண்ணம்மா, அவன் ஏதாவது வழிமாறி போறான்னா அதற்கு நீயும் ஒரு காரணம். நினைவில் வைத்துக் கொள்" என்றார் சங்கரன் கடைசியில்.

"நான் வளர்த்த பிள்ளை, நிச்சயம் பாதை மாற மாட்டான் அண்ணா" என்றாள் அத்தை உறுதியுடன்.

## 10

ஆதவன் கண்களை மூடிக் கொண்டே வீட்டின் அசைவுகளை கவனித்துக் கொண்டிருந்தான். "துரை இன்னும் எழுந்திருக்கலையா?" என்ற அப்பாவின் குரலுக்கும், அதைத் தொடர்ந்து தன்னை எழுப்ப அத்தையோ அம்மாவோ வருவார்கள் என்ற எதிர்பார்ப்புடன் இருக்கையில் கூடத்தில் டெலிபோன் ஒலிக்கும் சத்தம் பெரிதாக கேட்டது. தொடர்ந்து உமா அவனை கூப்பிடுவதும் கேட்டது. "உங்களுக்கு போன். யாரோ ப்ரண்டாம்."

வீட்டிற்கு இந்த நேரத்தில் போன் செய்து பேசுமளவுக்கு எந்த ப்ரண்ட் இருக்கிறார்கள்? ஆதவன் யோசனையுடன் போய் ரிசீவரை எடுக்க, "ஹலோ ஆதி" என்றாள் சுஷ்மா உற்சாகத்துடன்.

எதிர்பாராமல் அவள் குரலை கேட்டதில் ஏற்பட்ட திகைப்புடன் ஆதவன் நின்றிருக்க, அவன் பதிலை எதிர்பாராமல் சுஷ்மா பேசினாள்.

"ஹேய், கன்கிராட்ஸ் மேன். குரூப் ஒன் தேர்வில் இந்தியாவிலேயே முதல் மூன்று பேரில் ஒருவனாக வந்திருக்கிறாய். ஐ யாம் வெரி ஹாப்பி."

ஆதவனுக்குள் மெதுவாக அவள் சொன்ன விஷயம் உறைக்க, "நிஜமாகவா?" என்றான் நம்ப முடியாமல். உணர்ச்சி வேகத்தில் ரிசீவரைப் பற்றியிருந்த அவன் கரங்கள் நடுங்கின.

"சியர் அப் மேன். வீட்டிலுள்ளவர்களுக்கு தெரிவி. நான் பிறகு பேசறேன்" என தொடர்பை துண்டித்தாள் சுஷ்மா.

அவன் வீட்டினருக்கு சொன்னபோது, சரவணன் மகிழ்ச்சியுடன் அவன் கைகளைப் பற்றி குலுக்கினான். "எனக்குத் தெரியும் நீ பாஸ் பண்ணுவேன்னு. எனக்கு ரொம்ப சந்தோஷம்" என்றான் முகம் மலர்ந்து.

உமாவும் கணவனின் மகிழ்ச்சியை பிரதிபலிக்க, "நேர்முகத்தேர்வு எப்போது? அதற்கு இப்போதிருந்து தயார் செய்து கொள்" என்றார் அப்பா. கண்ணம்மாவின் கால்களில் விழுந்து வணங்கிய ஆதவன், "உன் உதவி இல்லேன்னா இது நடந்திருக்காது அத்தை" என்றான் உணர்ச்சிவசப்பட்டு.

"உனக்கு கிடைக்க வேண்டியது

கிடைச்சிருக்கு" என்றாள் அத்தை கண்கலங்க. "அண்ணி உன் பையன் ஐ.ஏ.எஸ். பாஸ் பண்ணிட்டான் பாத்தியா?'' என்றாள் அம்மாவிடம்.

"எனக்கு அதைப் பத்தி என்ன தெரியும் கண்ணம்மா? அவன்தான் எப்பவும் படிச்சிட்டே இருந்தான்" என்றாள் வாசுகி.

ஆதவனின் மனம் மகிழ்ச்சியில் மிதக்க, அதற்கு நேர் எதிராய் வீடு எப்போதும் போல் எளிமையான அமைதியில் இருந்தது.

அடுத்து நடந்த நேர்முகத் தேர்விலும் ஆதவன் சிறப்பாக செய்யவே, அவன் தேர்ச்சி பெற்றதாக அறிவிக்கப்பட்டான். இன்னும் பத்து நாளில் முசோரிக்கு டிரெய்னிங் கிளம்ப சொல்லி ஆர்டர் வந்தது.

ஆதவன் கிளம்புவதற்கான ஏற்பாடுகளில் முனைந்த போது சரவணன் ஆதவனிடம் ஒரு செக்கை கொடுத்தான். "ஆதவா உனக்கு உடைகள், ஷூ, ஸ்வெட்டர், ப்ளாங்கெட்ஸ் என்று நிறைய வாங்க வேண்டி இருக்கும். போகும் இடத்திலும் கையிருப்பாக கொஞ்சம் பணம் தேவைப்படும். இந்த செக்கில் உனக்கு எவ்வளவு பணம் தேவைப்படுமோ தொகையை எழுதிக் கொள்" என்றான்.

சரவணன் முதல் தேதி சம்பளம் வாங்கியதும் பணத்தை அப்பாவிடம் கொடுத்து விடுவான். தேவைப்படும் போது கேட்டு வாங்கிக் கொள்வான். இந்தப் பணம் அவனுக்கு எப்படி வந்தது? ஆதவன் கேட்டதற்கு சரவணன் சொன்னான். "அத்தை வீட்டை விற்ற போது நான் என்ன சொல்லியும் கேட்காமல் எனக்கென்று ஒரு பங்கு தொகையை கொடுத்தார்கள். இத்தனை நாள் அதற்கு தேவையின்றி பேங்கில்தான் கிடக்கிறது. இப்போது ஒரு நல்ல விஷயத்திற்கு பயோகமாகட்டும். எடுத்துக் கொள் ஆதவா."

அத்தை வீடு விற்ற பணத்தில் பெரும்பகுதியை ஆதவனுக்குத்தான் செலவழித்தாள். மீதி இருக்கும் தொகையையும் சரவணன் தனக்கே தருவது மனதை நெகிழ்த்தியது. ஒரேயடியாக மறுக்கவும் தேவை இடம் தராததால் செக்கை வாங்கிக் கொண்ட ஆதவன் "தேங்க்யூ" என்றான் குரல் கரகரக்க.

கிளம்புகிற நாளன்று அம்மாவையும், அப்பாவையும் கூடத்தில் நிற்க வைத்து நமஸ்கரித்தான். அத்தையை வணங்கிய போது "நல்லா இருடா கண்ணா. நீ எங்கே இருந்தாலும் எங்களுக்கு எப்போதும் உன் நினைப்புதான்" என்றாள் கண்கலங்க.

ஆதவன் அத்தையின் தோளை அணைத்து சிரித்தான். "இனி பெரிய விடுதலை உனக்கு. எனக்காக அப்பாவிடம் திட்டு வாங்க வேண்டியதில்லை. ஒவ்வொரு பரிட்சைக்கும் பிள்ளையாருக்கு தேங்காயும், அப்பமும், கொழுக்கட்டையும் லஞ்சம் கொடுக்க வேண்டியதில்லை. எனக்கு பிடிக்காத கீரைத் துவையலை சாப்பிடச் சொல்லி கெஞ்ச வேண்டியதில்லை."

"இதெல்லாம் இல்லாததாலேயே நீ இல்லேன்னு ஆய்டுமா?" என்றாள் வருத்தத்துடன் அத்தை.

எல்லோரிடமும் விடைபெற்று கிளம்புகையில் "அடிக்கடி லெட்டர் போடுங்க. உடம்பை கவனிச்சுக்கங்க" என்ற உமாவின் கண்களும் கலங்கியிருந்தது.

சரவணன் டாக்ஸி பிடித்து வந்தான். ஆதவனும் சரவணனும் டாக்ஸியில் ஏறிக் கொண்டனர். வண்டி கிளம்பவும் ஆதவனின் பார்வை வீட்டினுள் சென்றது. கூடத்து சேரில் தலையை தொங்க போட்டபடி அப்பா அமர்ந்திருக்க, அம்மா சேலை முந்தானையால் கண்களை துடைத்துக் கொண்டிருந்தாள்.

ரெயில் நிலையத்தில் இறங்கி பிளாட்பாரத்தை நோக்கி பெரிய பெட்டியை உருட்டியபடி நடக்கையில் "ஆதவா, உன் ப்ரண்ட் வந்திருக்கா" என்றான் சரவணன்.

"என் ப்ரண்டா?"

"ஆமாம். அதோ பார்." சரவணன் காட்டிய திசையில் சுஷ்மா அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தாள். முதன் முதலில் தன் தேர்வு முடிவை அறிவித்தது அவள்தான் என்ற நினைவு அப்போதுதான் வந்தது. அதற்காக அவளுக்கு ஒரு நன்றி கூட சொல்லவில்லை. ஆதவனை சந்தித்து வாழ்த்து தெரிவிக்க வந்த நண்பர்களிடமும், ஆசிரியர்களிடமும் பேசுவதிலும், பயணத்திற்கு ஏற்பாடு செய்வதிலும் சுஷ்மாவை சற்று மறந்தே போனான்.

"ஹலோ ஆதி. கங்கிராட்ஸ்" என ஆதவனிடம் கை குலுக்கிய சுஷ்மா சரவணனிடம் நலம் விசாரித்தாள்.

"நீங்க ரெண்டு பேரும் மெதுவா வாங்க. நான் போய் சீட் நம்பர், கோச் எல்லாம் பார்த்து இந்த பெட்டியை உள்ளே வைக்கிறேன்" என்ற சரவணன் பெட்டியை உருட்டியபடி முன்னால் நடந்தான்.

"நீ நினைச்சபடியே ஜெயிச்சிட்ட. ரொம்ப சந்தோஷமா?" என்றாள் சுஷ்மா முறுவலுடன்.

"ரொம்ப... ரொம்ப சந்தோஷம். நீ அன்னிக்கு எனக்கு போன் செய்து விஷயத்தை சொன்னதற்கு ரொம்ப நன்றி சுஷ்மா. என் வீட்டு நம்பர் உனக்கெப்படித் தெரியும்?"

சுஷ்மா அலட்சியத்துடன் தலையை குலுக்கினாள். பட்டுக்கூந்தல் அழகாய் தோளில் குதித்தது. நீல ஜீன்ஸின் மீது அணிந்திருந்த கறுப்பு பனியன் ரெயில் நிலையத்தின் பிரகாசமான விளக்கொளியில் அவள் நிறத்தை மின்ன வைத்தது. பவுடர் பூச்சு கூட இல்லாத முகம் கூடுதல் கவர்ச்சியைத் தர ஆதவன் பார்வையை விலக்க முடியாமல் தடுமாறினான்.

"போன் நம்பர் தெரிஞ்சுக்கறதெல்லாம் ஒரு விஷயமா? ஒருவர் மீது அக்கறை இருந்தால் அவர் சம்பந்தப்பட்ட விஷயங்கள் தானாய் தெரிந்து விடும். உனக்குத்தான் என்னைப் பற்றிய நினைவே இல்லையே!" என்றாள்.

"வேண்டாம் சுஷ்மா... இப்போது எதுவும் சொல்லாதே. கோவிலில் ஏற்பட்ட மன வருத்தம் மீண்டும் தொடர வேண்டாம். நீ என்னை வழியனுப்ப வந்திருக்கிறாய். எனக்கு சந்தோஷமாக இருக்கிறது. இதே மனநிலையில் என்னை அனுப்பி வை" என்றான் ஆதவன்.

"நான் எதுவும் சொல்லவில்லை ஆதி. ஆனால் உண்மையை புரிந்து கொள்ள முயற்சி செய். நிஜத்தை கண்டு பயந்து ஓடாதே. நான் உன்னை விரும்புவது உண்மை. அதற்காக உன் பின்னால் ஓடி வருவது நிஜம். உன் மனதில் எழும் கற்பனைகள், சந்தேகங்கள் எல்லாமே பொய். இதை நீ என்றைக்காவது உணர வேண்டும்."

ஆதவன் பேச முடியாமல் நின்றிருக்க, சுஷ்மாவே சொன்னாள்.

"ஒருவேளை நானே வலிய வந்து என் அன்பை சொல்வதால் உனக்கு சாதாரணமாக தெரிகிறதோ என்னவோ. இனி நானாக உன்னைத் துரத்த மாட்டேன். நீயே உன்னை உணர்ந்து வரும் வரை காத்திருப்பேன். இந்த சமயத்தை மிஸ் பண்ணினால் என் அன்பையும் வாழ்த்துகளையும் உனக்கு தெரிவிக்க முடியாது என்பதால்தான் வந்தேன்."

"ஆதவா டூ டயர் ஏசி. இருபத்தி நாலாம் நெம்பர் சீட். உன் பெட்டியை வைத்து விட்டேன்" என்றபடி சரவணன் வர, "ஓ.கே. நான் கிளம்புகிறேன். மை பெஸ்ட் விஷ்ஷஷ் டு யு ஆதி" என்ற சுஷ்மா இருவரிடமும் விடைபெற்றாள்.

ரெயில் கிளம்பியதும் "உடம்பை பாத்துக்கோ" என்று சொல்லி சரவணன் கையசைத்தான். பதிலுக்கு கை அசைத்து விட்டு தன் சீட்டில் அமர்ந்த ஆதவனின் மனம் முழுக்க சுஷ்மா நிறைந்திருந்தாள்.

அடுத்து வந்த ஆறுமாதமும் ஆதவனுக்கு இறக்கை கட்டி கொண்டு பறந்தன. அவனது பயிற்சி வகுப்புகள் சுவாரஸ்யமாகவும், அதே சமயம் திறமைக்கு சவால் விடுவதாகவும் இருந்தது. பல மாநிலங்களிலிருந்து அவனைப் போல பயிற்சி பெற வந்திருந்த மாணவ, மாணவியர் மிகுந்த அந்நியோன்யத்துடனும், நட்புடனும் பழகினர்.

அத்தை வாரம் தவறாமல் அவனுக்கு கடிதம் போடுவாள். தனித்தனியே எழுதத் தேவையில்லாமல் அந்த கடிதத்திலேயே ...்லோரைப் பற்றிய செய்திகளும் இருக்கும். ...வொரு முறை அத்தையின் கடிதத்தை ...தும் போது அவனுக்கு சுஷ்மாவைப் பற்றிய நினைவு வரும்.

ஒரு வழியாக ஆதவனின் பயிற்சி முடிந்தது. கைநிறைய சான்றிதழ்களும், மனமெங்கும் மகிழ்ச்சியுமாய் சென்னை திரும்பினான். வழக்கம் போல சரவணன் அழைத்துப் போக ஸ்டேஷனுக்கு வந்திருந்தான். ஆதவனைப் பார்த்ததும் முகம் பூராவும் சிரிப்பாக சரவணன் அவன் அருகில் வந்தான்.

"ரொம்ப இளைச்சிட்டியே ஆதவா! ஆனா பளபளன்னு கலரும், இறுகின உடம்புமாய் இப்பவே ஆபீசர் மிடுக்கு வந்து விட்டது போ" என்றான் பெருமிதத்துடன் தம்பியை மேலும் கீழுமாய் பார்த்து.

"நீ எப்படியிருக்கிறாய்? வீட்டில் எல்லோரும் நலமா? ஏன் அண்ணியை கூட கூட்டிட்டு வரல?" என்றான் ஆதவன் அண்ணனிடம்.

சரவணன் லேசான கூச்சத்துடன் புன்னகைத்தான். "உமாவுக்கு இது இரண்டாம் மாதம். டாக்டர் டெஸ்ட் எடுக்க சொல்லியிருந்தார்"

"வாவ், அப்பா ஆகப் போறேன்னு சொல்லு."

இருவரும் வீடு வந்து அம்மாவிடமும், உமாவிடமும் நலம் விசாரித்துவிட்டு, அத்தையிடம் குடும்ப கதைகள் பேசிவிட்டு, அப்பா கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்லிவிட்டு இரவு வழக்கம்போல் தரையில் பாயை விரித்து படுக்கையில் இத்தனை நாள் இல்லாத வகையில் மனம் முரண்டியது.

## இருட்டிலும் பார்க்கும் பூனைக் கண் மனிதன்!

ஆந்தை, பூனைக்குத் தான் இரவு நேரங்களில் இருட்டிலும் கண் தெரியும். சில மனிதர்களுக்கு பகல் வெளிச்சத்திலே கூட கண் தெரிவதில்லை. பார்வையற்றவர்களை இந்த பட்டியலில் சேர்க்க முடியாது என்றாலும், பார்வைக் குறைபாடு உள்ளவர்களால் பகல் நேரங்களிலும் பார்க்க முடிவதில்லை என்பது என்னவோ உண்மைதான். அடர்ந்த காடுகளில் இரவு நேரங்களில் சோதனையில் ஈடுபடும் உளவுத் துறை அதிகாரிகள் இன்பிரேர்டு கண்ணாடிகளை அணிந்து கொண்டு இருட்டிலும் நன்றாக பார்ப்பார்கள்.

இருட்டிலும் பார்க்கக் கூடிய தன்மை இந்த நவீன கண்ணாடிகளுக்கு இருப்பதால், இதை பயன்படுத்துகிறவர்கள் இருட்டில் எதை வேண்டுமானாலும் பார்க்கலாம். ஆனால், சீனாவைச் சேர்ந்த இளைஞர்

இன்னும் எத்தனை தூரம் போனாலும் இந்த வீட்டில் என்னுடைய இடம் இதுதான். இங்கு நான் சங்கரன் வாத்தியார் மகன் ஆதவன்தானே தவிர ஆதவன் ஐ.ஏ.எஸ். அல்ல. இனி இங்கு பழையபடி தான் இருப்பது சாத்தியமா என்ற நினைவில் ஆதவன் அடுத்து என்ன செய்வதென்று யோசிக்கத் தொடங்கினான்.

அடுத்த சில வாரங்களிலேயே அவனுக்கு ஹோம் மினிஸ்டரியில் அண்டர் செகரட்டரியாக நியமனமும், அரசு குவார்ட்டர்ஸ்சும் கிடைத்தது. ஆதவன் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தான். புதிதாக வருபவர்களுக்கு முதலிலேயே இத்தனை பவர்புல் போஸ்ட்டிங் கிடைப்பதில்லை என்பதால் தெரிந்தவர்கள் அனைவரும் வியப்புடன் வாழ்த்தினார்கள். அத்தை மட்டும் "நீ கலெக்டர் ஆவேன்னு கனா கண்டேன்" என்றாள் ஏமாற்றத்துடன்.

ஆதவன் சிரித்தான். "நிறைய பேர் ஐ.ஏ.எஸ்.னா கலெக்டர்தான்னு நினைக்கறாங்க. அதுக்கு இணையான, அதைவிட மேலாய் நிறைய போஸ்டிங் இருக்கு. இதுவும் பவர்புல் போஸ்டிங்தான் அத்தை. கார், வீடு எல்லாம் உண்டு."

"அப்ப நீ இந்த வீட்டை விட்டு போகப் போகிறாயா?" என்றாள் அத்தை திடுக்கிட்டு.

"நாம் எல்லோரும் போகலாம்."

"அண்ணா அதுக்கு ஒத்துக்க மாட்டார்னு நினைக்கறேன்."



ஒருவருக்கு இது எதுவும் தேவையில்லை. இருட்டிலும் அவரால் எதிரில் உள்ள பொருட்களை இயற்கையாக பார்க்க முடியும். காரணம், இவருக்கு இரு கண்களும் பூனைக் கண்கள்.

நீல நிறத்தில் காணப்படும் இந்த கண்கள் மூலம் இவர் இருட்டில் எந்த பொருளையும் தெளிவாகப் பார்த்து அடையாளம் கண்டுபிடித்து விடுகிறார். இந்த மாதிரி கண்கள் இல்லையே என்ற ஏக்கம் நமக்கும் இருக்கலாம். சீன இளைஞருக்கு அந்த அதிர்ஷ்டம் இருக்கிறது. நமக்கில்லையே என்ன செய்ய?

"நீதான் சம்மதிக்க வைக்கணும் அத்தை."

"பார்க்கலாம்" என்றாள் அத்தை நம்பிக்கையின்றி.

"உன்னால் முடியும் அத்தை. எனக்காக அப்பாவுக்கு பிடிக்காத எத்தனையோ விஷயங்களை ஒத்துக்க வைக்கலியா."

"அது வேறு, இது வேறு ஆதவா. பழமையில் பிடிப்புள்ள எங்களை மாதிரி ஆட்களுக்கு வசிக்கிற வீடு கூட ஒரு குடும்ப உறுப்பினர் போலத்தான். இந்த சமையலறையிலும், நடையிலுமே எனக்கும் அண்ணிக்கும் வாழ்வின் பெரும்பகுதி கழிந்திருக்கிறது. அண்ணாவுக்கு டியூஷன் எடுப்பது, வருகிறவர்களை சந்திப்பது, தூங்குவது எல்லாமே கூடத்தில்தான். வீடு என்பது சிலருக்கு சுவரும் தரையும்தான். வேறு சிலருக்கு அது ஒரு உயிர். நம் துக்கத்திற்கும், சந்தோஷத்திற்கும், கண்ணீருக்கும் மவுனசாட்சி."

"ஓ காட். அத்தை இதே சென்னையில் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு போகப் போகிறோம். அதற்கு வேற்று கிரகத்திற்கு போகிற மாதிரி கற்பனை செய்து கொள்கிறாய். சொல்லப்போனால் அந்த வீடு இதைவிட பெரிதாக வசதியாக இருக்கும். கோவிலைப் பற்றி நீ கவலைப்படாதே. நம் ஊரில் கோவில் இல்லாத தெருவே இல்லை" என்றான் கேலியாக.

"உன் அப்பா சம்மதித்தால் யாரும் ஆட்சேபிக்கப் போவதில்லை" என்றாள் அத்தை முடிவாக.

## 11

**லா**னில் அமர்ந்து நியூஸ் பேப்பரை படித்துக் கொண்டிருந்த சுஷ்மாவிடம் "சுஷ்மா, அர்ஜுன் எங்கே போயிருக்கிறான் தெரியுமா?" என்றாள் சுனந்தா படேல்.

"எனக்குத் தெரியாது. என்னிடம் அவன் எதுவும் சொல்லவில்லை." என்றாள்.

"டாடி இன்று ஒரு புதுப்பட பூஜைக்கு அவனை வர சொல்லியிருந்தார். தகவல் தெரிவிக்காமல், வராமல் இருந்துவிட்டால் அவருக்கு ரொம்ப கோபம் வரும்."

"டோன்ட் ஒர்ரி மம்மி. சினிமா குடும்பத்தில் பிறந்து, அதையே பாடமாக படித்து விட்டு, அது சம்பந்தமான விஷயங்களுக்கு எப்படி வராமல் இருப்பான்? கட்டாயம் வந்துவிடுவான்."

"ம்..." சுனந்தா படேல் பெருமூச்சு விட்டாள். "இந்த சினிமா ரத்தம் உனக்குள் மட்டும் ஏன் ஓடவில்லை என்று தெரியவில்லை. நீலேஷ்வருடன் நீ செய்திருக்க வேண்டிய படம். அப்பா முன்பின் தெரியாத யாரோ ஒரு பெண்ணை அறிமுகப்படுத்தினார். இப்ப படம் ஹிட். சம்பளம் கூட வேண்டாம் என்று நடிக்க வந்தவள் இன்று கோடி கோடியாய் சம்பாதிக்கிறாள். இத்தனைக்கும் அழகில் உன்

அருகில் நிற்க முடியாது."

"ஐயோ மம்மி எனக்கு போரடிக்கிறது" என்றாள் சுஷ்மா.

"அப்படியா? இதோ உனக்கு போர் அடிக்காமல் பேச உன் ப்ரண்ட் வந்திருக்கிறான். நான் கிளம்புகிறேன். அர்ஜுன் வந்தால் கொஞ்சம் சீக்கிரம் வரச் சொல்" என சுனந்தா படேல் போர்டிகோவில் நின்றிருந்த காரை நோக்கி நடந்தாள்.

சுனந்தா காட்டிய திசையில் பார்த்த சுஷ்மாவுக்கு அம்மா கடைசியாக சொன்னது எதுவும் காதில் விழவில்லை. போர்டிகோவில் காரிலிருந்து இறங்கி சுனந்தா படேலிடம் வணக்கம் சொல்லி விட்டு தன்னை நோக்கி வந்த ஆதவனைத் தவிர எதுவும் கண்ணிலும் கருத்திலும் படவில்லை.

சுஷ்மா அசையாமல் பார்த்துக்கொண்டிருக்க, "ஹேய், தெரிந்தவர்களை சந்தித்தால் ஒரு ஹலோ சொல்ல மாட்டாயா?" என்றான் ஆதவன் சிரிப்புடன். அத்தனை சரளமும், உற்சாகமுமாய் அவனைப் பார்ப்பது அதுதான் முதல்முறை என்பதால் சுஷ்மா "ஹலோ" என்றாள் ஆச்சரியம் மாறாத குரலில்.

"உன் வீட்டிற்கு வருகிறவர்களுக்கு எதுவும் தரமாட்டாயா சுஷ்மா?" என்றான் ஆதவன் கண்ணில் சிரிப்புடன்.

"ஓ... தரலாமே, உனக்கு என்ன வேண்டும்? காபியா, கூல்ட்ரிங்கா?" என்றாள் திகைப்பு நீங்கியவளாக.

"நீ" என்றான் ஆதவன் சுட்டுவிரலை உயர்த்தி.

"என்னது?"

"நீயாக எது கொடுத்தாலும் சரி" என்றான் பதவிசாக.

சுஷ்மா வேலையாளை அழைத்து கூல்ட்ரிங்க் சொல்லவும், ஆதவன் சொன்னான். "அந்த ட்ரிங்க்கை இங்கே சாப்பிடுவதை விட ஏதாவது ரெஸ்டாரண்டில் சாப்பிட்டால் நன்றாக இருக்காது?"

சுஷ்மா வியப்புடன் பார்க்கவும், "ப்ளீஸ் என்னுடன் வா... சுஷ்மா. கொஞ்சம் வெளியே போய் பேசலாம்" என்றான் கெஞ்சலாக.

"ஒரே நிமிஷம். நான் போய் உடைமாற்றிக் கொண்டு வருகிறேன்" என்று சுஷ்மா வீட்டினுள் திரும்பவும், ஆதவன் அவசரமாக அவளைத் தடுத்தான். "இதை விட அழகாய் உனக்கு வேறு எந்த உடையும் இருக்க முடியும்னு தோணல. அதனால் இப்படியே வா"

"மை காட்... நீயா பேசற?" என்ற வியப்புடன் சுஷ்மா காமுபாட்டியிடம் தகவல் சொல்லிவிட்டு கிளம்பிப் போனாள்.

கோடம்பாக்கம் மேம்பாலத்திலிருந்து கார் நேராக செல்லவும் "ஸ்பென்ஸர் ப்ளாசா போகிறாயா?" என்றாள் சுஷ்மா ஆதவனிடம்.

கார் நேராக செல்லாமல் ஜெமினி ப்ளை ஓவர் இடதுபுறம் திரும்பி 'தி பார்க்' ஓட்டலுக்குள் சென்றது. சல்யூட் அடித்த சீருடை பணியாளரிடம் கார் சாவியை கொடுத்துவிட்டு சுஷ்மாவின் கைகளைப் பற்றியபடி ஆதவன் உள்ளே நுழைந்தான். 'தி பார்க்'கின் திறந்தவெளி ரெஸ்டாரண்டில் ஸ்விம்மிங் பூலை சுற்றி தீவானும், திண்டுகளும் போடப்பட்டிருந்தன. வெள்ளை மஸ்லின் துணியில் திரைகளும், ஹரிக்கேன் விளக்குமாய் ராஜஸ்தானின் குளக்கரை ஒன்றின் நவீன மாடலாய் இருந்தது. தீவானில் உல்லாசமாய் சாய்ந்தபடி "என்ன சாப்பிடுகிறாய் சுஷ்மா?" என்றான் ஆதவன்.

"கூல்ட்ரிங். அதற்காகத்தானே அழைத்து வந்தாய்?"

ஆதவன் சிரித்தான். "அத்துடன் கூட ஏதாவது சாப்பிடுவோமே!"

கரிய மீசைக்கு கீழே பற்கள் பளீரென்று தெரிய அவன் சிரிப்பு புதிய கவர்ச்சியுடன் மின்னுவதைப் பார்த்தபடி சுஷ்மா வெறுமனே அமர்ந்திருக்க, ஆதவன் அவள் காதருகே கிசுகிசுத்தான். "இன்றுதான் முதல்முறையாக இதுபோன்ற ஸ்டார் ஓட்டல்களுக்கு வந்திருக்கிறேன். வெயிட்டர் என்னை பற்றி ஏதாவது நினைப்பதற்குள் ஆர்டர் செய்துவிடு சுஷ்மா. ப்ளீஸ்."

சுஷ்மாவுக்கு தன்னையறியாமல் ஒரு கனிவு சுரந்தது. வெய்ட்டரிடம் ஸ்பிரிங் ரோலும், ப்ளாக் பாரஸ்ட்டும் ஆர்டர் செய்தாள். ஸ்பீக்கரில் மெலிதாக கசிந்த இசை சூழ்நிலையை ரம்யமாக்க, "சுஷ்மா" என்றான் ஆதவன் அவள் விரல்களைப் பற்றி.

தன் கைகளை மிக இயல்பாக பற்றியிருப்பவனைப் பார்த்த சுஷ்மா சொன்னாள். "நீ ரொம்பத்தான் மாறிட்ட ஆதி."

"நீயும்தான். இல்லை என்றால் இத்தனை நாட்களில் நீ என்னை தொடர்பு கொள்ளாமல் இருந்திருப்பாயா? நாம் சந்தித்து ஒரு வருடத்திற்கு மேல் ஆகிறது" என்றான் வேகத்துடன்.

"அதன் காரணம் உனக்குத் தெரியும் ஆதி. நீ டிரெய்னிங் கிளம்புகிற அன்று நான் சொன்னேன், உனக்காக காத்திருப்பேன் என்று. நீதான் என்னை எப்போதும் பொருட்படுத்தியதே இல்லை." சுஷ்மாவின் குரல் கரகரத்தது.

ஆதவன் மிருதுவாக அவள் முகத்தை நிமிர்த்தினான். "அப்போது என் மனதில் நிறைய குழப்பங்கள் இருந்தன சுஷ்மா. நம் பொருளாதார வித்தியாசம் நமக்குள் பெரிய தடையாய் இருந்தது. இப்போதும் இந்த ஓட்டலில் சாப்பிட வந்திருப்பதால் நான் உன் அளவு பணக்காரனாகி விட்டதாக அர்த்தம் இல்லை. இன்னும் நமக்குள் அந்த வித்தியாசம் அப்படியேத்தான் இருக்கிறது. ஆனால் சுஷ்மா உன் வீட்டு சவுகர்யங்கள் கிடைக்காவிட்டாலும்

இப்போது உன்னை கஷ்டப்படாமல் பார்த்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை வந்திருக்கிறது. வசதியான ஒரு வீடும், காரும், வேலையாட்களும், சமூகத்தில் கவுரவமாக சொல்லிக் கொள்ளும்படியான அந்தஸ்தும் இருக்கிறது. இந்நிலைக்காவது வந்த பிறகுதான் உன்னை சந்திக்க வேண்டும் என்று இத்தனை நாள் காத்திருந்தேன். இப்போது தைரியமாக சொல்வேன் சுஷ்மா. நான் உன்னை விரும்புகிறேன். எனக்கு... உன்னை... உன்னை மட்டும்தான் பிடித்திருக்கிறது. என் வாழ்க்கை முழுமையடைய வேண்டுமென்றால் நீ என்னோடு இருக்க வேண்டும் சுஷ்மா."

"இன்னும் சில விஷயத்தில் நீ மாறவே இல்லை ஆதி. பேசிப்பேசியே நேரத்தை வீணடிக்கிறாய் பார்த்தாயா?" சுஷ்மா கலகலவென சிரித்தாள்.

ஆதவன் புன்னகையுடன் அவளை பற்றியிருந்த விரல்களில் முத்தமிட்டான்.

இருவரும் வீட்டிற்கு கிளம்புகையில் சுஷ்மா சொன்னாள். "இனியும் தள்ளிப்போட வேண்டிய அவசியமில்லை ஆதி. என் அப்பாவும் ஊரில்தான் இருக்கிறார். அதனால் இப்போதே என் பெற்றோரிடம் பேசப் போகிறேன். நீயும் உன் வீட்டில் சொல்லிவிடு ஆதி."

ஆதவன் தயக்கத்துடன் தலையசைத்தான். "நான் படிப்பை முடித்ததை விட, வேலையில் அமர்ந்ததை விட சிரமமான விஷயம் இது. இந்த விஷயத்தை எப்படி சொல்வேன்?"

தனக்கு அரசு வீடு ஒதுக்கப்பட்டிருப்பதாகவும், எல்லோரும் அங்கே போய்விடலாம் என்றும் சொன்னபோது அப்பா நிர்தாட்சண்யமாக மறுத்தது நினைவுக்கு வந்தது. "இதுதான் என் வீடு. என் உழைப்பில் நான் கட்டியது. என் உயிர் இருக்கும் வரை இங்கிருந்து நகர மாட்டேன். உனக்கு பிரியமானால் எங்களுடன் இரு. இல்லையென்றால் உனக்கு வசதியான இடத்தில் வசிப்பதில் எனக்கு ஆட்சேபனை இல்லை" என்றார் கறாராக.

"ஆதவனுக்கு கல்யாணமானதும் இரண்டு மருமகபேரன், பேத்திகளுடன் வீடு கலகலன்னு இருக்கும்னு நினைச்சேன்" என்றாள் வாசுகி பெருமூச்சுடன்.

"ஆதவன் பெரிய பதவியில் இருக்கான். அவனைப் பார்க்க நாலுபேர் வரப் போக இருப்பாங்க. இந்த வீடு அதற்கு வசதிப்படுமா சொல்!" என்றான் சரவணன் அம்மாவுக்கு சமாதானமாக.

"அத்தை நீ என்னுடன் வந்துவிடு" என்றான் ஆதவன் அத்தையிடம். "அப்பா எதுவும் சொல்ல மாட்டார். அப்பாவை அம்மா பாத்துக்கறாங்க. சரவணனைப் பார்க்க அண்ணி இருக்காங்க. என்னைப் பாத்துக்க நீ வேண்டாமா?" என்றான் கொஞ்சலாக.

"சரவணனுக்கு உமா வந்தமாதிரி உனக்கும் ஒருத்தி வருவா. அப்ப அத்தைக்கு வேலையில்லாம போயிடும் ஆதவா."

"என்ன அத்தை இப்படி சொல்கிறாய்? நான் சம்பாதிக்கத் தொடங்கியதும் உன்னை என்னுடனேயே வைத்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணியிருந்தேன். எனக்கு வசதிவாய்ப்புகள் ஏற்படும் போது, அது ஏற்பட காரணமாய் இருந்தவர்கள் கூட இருக்க வேண்டாமா? ப்ளீஸ் என்னுடன் வந்துவிடு அத்தை."

"இங்கேயே நான் ரொம்ப வசதியாகத்தான் இருக்கிறேன் ஆதவா. எதிர்பார்ப்புகள் அதிகம் இருப்பவர்களுக்கு கடைசியில் திருப்தி ஏற்படாது. எனக்கு எந்த எதிர்பார்ப்பும் இல்லை. இந்த வீடே எனக்கு சவுகரியம். அதுவுமில்லாமல் தினமும் அண்ணாவைப் பார்க்காமல் இருக்க முடியாது எனக்கு. அவன் எனக்கு அண்ணா மட்டுமல்ல. அப்பாவும் கூடத்தான். அண்ணியும் இதுவரை ஒரு தாய் ஸ்தானத்திலிருந்துதான் என்னை கவனித்திருக்கிறாள். இவர்கள் இருவரையும் பிரிந்து வருவது எனக்கு சாத்தியம் இல்லை. அத்துடன் அண்ணாவும் என்னை போக அனுமதிக்க மாட்டான்."

அத்தை சொல்வது உண்மைதான் என்று தோன்றியது ஆதவனுக்கு.

"உன் அண்ணா மேல இருக்கற கரிசனம் என் மீது இல்லை. அப்படித்தானே அத்தை?" என்றான் ஆதவன் வருத்தத்துடன்.

அத்தை வாஞ்சையுடன் அவன் தலையை கோதினாள். "என் குழந்தை மீது எனக்கெப்படி கரிசனம் இல்லாமல் இருக்கும்? தாய்பறவை குஞ்சை கூட்டிலிருந்து கொத்தி வெளியே தள்ளுவது அது பறக்க பழக வேண்டும் என்பதற்காகத்தானே தவிர காயப்படுத்துவதற்கு அல்ல. நீ பறக்க ஆசைப்பட்டாய். வானம் உன் அருகில் வரும்போது கூட்டை நினைத்து கவலைப்படலாமா? நீ மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் ஆதவா. அதைத் தவிர வேறு பிரார்த்தனை இல்லை எங்களுக்கு" என்றாள் அத்தை உணர்ச்சியுடன்.


"ஆதி..." சுஷ்மா ஆதவனின் தோள்களை உலுக்கினாள். "கல்யாணம்னதும் கனவு காண ஆரம்பித்து விட்டாயா? வீடு வந்து விட்டது."

சுஷ்மா வீட்டின் முன் கார் நின்றிருக்க சுஷ்மா அவனிடமிருந்து விடைபெற்று உள்ளே போனாள்.

அன்று இரவே சுஷ்மா தான் ஆதவனை மணந்து கொள்ளவிருப்பதாக பெற்றோரிடம் தெரிவித்தாள். அவள் எதிர்பார்த்தபடி அவர்கள் இதை விரும்பவில்லை என்றுதான் சொன்னார்கள். அவனது படிப்பும், பதவியும் அவர்களை திருப்திப்படுத்தவில்லை. ஹோம் மினிஸ்டரியில் வேலை என்பதெல்லாம் சரிதான். அவனுக்கு சொந்தமாக குறைந்தபட்சம்

இந்த மாதிரி ஒரு வீடாவது இருக்கிறதா என்றார்கள். நீ சமூக சேவை என்று போனதால் உன் ஸ்டேட்டஸ், நீ யார் என்பதைக்கூட மறந்து போய்விட்டாய் என்றார்கள்.

"போதும் டாடி...." என்றாள் சுஷ்மா. "நீங்களும் உங்கள் படங்களில் வரும் பணக்கார அப்பா மாதிரியே பேசாதீர்கள். இத்தனை வருடங்களாய் நான் வளர்ந்த விதத்தில், நடந்து கொண்ட முறையில் என் செலக்‌ஷன் மீது நம்பிக்கை இருக்க வேண்டாமா உங்களுக்கு? வாழ்வதற்கு பணம் தேவைதான். ஆனால் பணம் மட்டுமே வாழ்க்கை இல்லை. பணத்தால் வாங்க முடிந்த எல்லாவற்றையும் வாங்கி வீட்டை நிறைத்த பிறகு, கிடைக்காத அன்புக்கு ஏங்குவதுதான் மனித இயல்பு. அந்த ஏக்கமும், துக்கமும் எனக்கு ஏற்படாமல் இருக்க வேண்டுமானால் எனக்கு பிடித்தவனை திருமணம் செய்து வையுங்கள். நான் அவசரப் பட்டு முடிவு எடுக்க வில்லை டாடி. ஆதவனிடம் என் விருப்பத்தை சொல்லி ஒரு வருடம் கழித்துதான் அதற்கு சம்மதம் சொல்லியிருக்கிறான். நீங்கள் சொல்கிற பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் பற்றி எல்லாம் நாங்கள் நிறைய பேசியாகிவிட்டது."



அரவிந்த் படேல் யோசனையில் ஆழ்ந்துபோக, சுனந்தாபடேல் திகைப்புடன் கணவனையும் மகளையும் பார்த்தாள். சிறுவயதிலிருந்தே குழந்தைகளுக்கு வேண்டிய சுதந்திரம் கொடுத்து அவர்களது விருப்பு, வெறுப்புகளை மதித்து வளர்த்திருந்ததால் இப்போதும் ஒரேயடியாக அவர்களால் மறுக்க முடியவில்லை. நீண்ட மவுனத்திற்கு பிறகு அரவிந்த் படேல் சொன்னார்.

"உன்னுடைய எதிர்காலம் பற்றி முடிவெடுக்க முழு உரிமையும் உனக்கிருக்கிறது. அதை யாராலும் மறுக்க முடியாது. உன் பெற்றோராக உன் திருமணத்தை நல்ல முறையில் நடத்தி வைக்க வேண்டிய கடமையும் எங்களுக்கு இருக்கிறது. அதில் எந்த குறையும் வைக்க மாட்டோம். அதே சமயம் அந்த குடும்பத்துடன் சமமான நிலையில் உறவு கொண்டாடுவது எங்களுக்கு முடியாத விஷயம். இந்த திருமணத்தில் நீங்கள் இருவர் மட்டும்தான் இணைய முடியும். இரு குடும்பங்களின் இணைப்பு சாத்தியமில்லை."

"அவர்களுக்கும் அப்படித்தான் டாடி. உங்களிடம் சொந்தம் பாராட்டுவது சிரமமாக இருக்கும். அதனால் சம்பந்தி மரியாதை எல்லாம் எதிர்பார்க்க மாட்டார்கள்."

"அப்பு சரி. அடுத்து என்ன, கல்யாணம் எப்போது என்பதை எல்லாம் ஆதவனும் நீயுமாக முடிவு செய்து விட்டு சொல்லுங்கள்" என்றார் அரவிந்த்படேல்.

"ஓ.கே. டாடி. தேங்க்யூ" என மகிழ்ச்சியுடன் சுஷ்மா ஆதவனுக்கு போன் செய்ய விரைந்தாள்.

## 12

ஆழ்ந்த தூக்கத்திலிருந்த சுஷ்மா

அலாரத்தின் ஓசை கேட்டு புரண்டு படுத்தாள். கண்களை திறக்காமலே கையை நீட்டி அலாரத்தை நிறுத்த டேபிளை தடவியவள் எதுவோ கீழே விழும் சத்தம் கேட்டு கண்களை திறந்தாள். ஒரு நிமிடம் எங்கே இருக்கிறோம் என்று புரியாமல்



மருட்டியது. இடுப்பில் அழுந்திய கனமான கைகளையும், அவளை அணைத்தபடி உறங்கும் ஆதவனையும் பார்த்ததும் தங்களுக்கு திருமணமாகிவிட்டது என்பது நினைவுக்கு வர முகத்தில் புன்னகை மலர்ந்தது.

ஆதவன் தன் அப்பாவிடம் சுஷ்மாவைப் பற்றி சொன்னதும் அவ்வளவு பெரிய இடமா என மலைத்ததும், சினிமாக்காரர் பெண்ணா என்று மறுத்ததும் ஆதவன் அவரை எப்படி சமாதானம் செய்வதென்று புரியாமல் விழித்தான். வழக்கமாய் அவனுக்கு பரிந்து கொண்டு வரும் அத்தைகூட "கல்யாணம்னு வருகிற வரை எங்கிட்ட ஒரு வார்த்தை சொல்லலை பாத்தியா?" என்றாள் குறையுடன்.

உமா மட்டும் "நான் அன்னிக்கே நினைச்சேன் தம்பி, உங்களுக்கு ஏத்த ஜோடின்னு" என்றாள் மகிழ்ச்சியுடன். அம்மாவும் சரவணனும் மவுனம் காக்க, ஆதவன் அடுத்து என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்தபோதுதான் சுஷ்மா காமுபாட்டியை துணைக்கு அழைத்துக் கொண்டு ஆத்வனின் வீட்டிற்கு வந்தாள்.

அப்பாவிடமும், குடும்பத்தினருடனும் இயல்பாக பேசினாள். "சினிமா குடும்பத்தில் பிறந்ததை தவிர சினிமாவுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இருந்ததில்லை. ஆதவனிடம் முதன் முதலில் பிரியத்தை சொன்னது நான்தான். அந்த பிரியம் ஆதவனை பார்த்ததால் மட்டும் ஏற்பட்டதல்ல. உங்கள் குடும்பத்துடன் பழகியதாலும் ஏற்பட்டது. இறுதிவரை சேர்ந்திருக்கப் போவது நாங்கள்தான். இதில் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளுக்கு இடமே இல்லை" என்றாள்.

சங்கரன் உடனே ஒத்துக் கொள்ளவில்லை. எனினும் சுஷ்மா அடுத்தடுத்து பேசிப் பேசி அவரை இளக வைத்தாள்.

தொடர்ந்து சுஷ்மாவின் பெற்றோரும் சம்பந்தம் பேச வரவும் சங்கரன் வேறு வழியின்றி சம்மதித்தார்.

சங்கரன் விருப்பப்படி வடபழனி முருகன் சந்நிதானத்தில் திருமணம் நடக்கையில், ஆதவனிடம் தான் முதன் முதலாய் காதலை சொன்ன இடம் இது என்ற நினைவில் சுஷ்மாவின் மனம் சிலிர்த்தது. அரவிந்தபடேலின் ஸ்டேட்டஸிற்கு ஏற்ப மாலை தாஜ் ஓட்டலில் ஆடம்பரமாய் வரவேற்பு நடந்தது. திருமண சம்பிரதாயங்கள் எல்லாம் முடிந்து ஆதவனின் புதுவீட்டிற்கு அவர்கள் குடியேறிய போது சுஷ்மா கேட்டாள். "நாம் உன் வீட்டில் தங்கப் போவதில்லையா ஆதி?"

"என் வீட்டிலா? அங்கே எனக்கே இடம் போதாது. நீ எப்படி தங்க முடியும்?"

"அப்ப, இத்தனை நாளாய் அங்கே எப்படி தங்கியிருந்தாய்?"

"அது வேறு சுஷ்மா. சொன்னால் உனக்குப் புரியாது."

"உனக்குத்தான் என்னை புரியவில்லை. உன் வீட்டை போன்ற ஒரு குடும்பத்தில் வாழத்தான் நான் ஆசைப்பட்டேன்."

"அக்கரைப் பச்சை" என்றான் ஆதவன் சிரிப்புடன்.

"இல்லை... நிஜம். சத்தியம்."

"ஓ.கே. வாழ்க்கையை ஆரம்பிக்கிற முதல் நாளே என்னுடன் சண்டையிடப் போகிறாயா?" என்றான் ஆதவன்.

சுஷ்மா அதற்கு மேல் எதுவும் பேசாமல் அமைதியானாள்.

புரண்டு படுத்த ஆதவன் சுஷ்மா விழித்திருப்பதை பார்த்ததும் தூக்கம் விலகாமல் புன்னகைத்தான். "என்னடா அதுக்குள்ள எழுந்துட்ட?"

"நீ ஆபீஸ் போக வேண்டாமா?"

"இன்று ஸண்டே. அதனால் பைல்களை விட்டுவிட்டு உன்னை கட்டிக்கிற வேலை எனக்கு" என்றவன், ஒரே இழுப்பில் அவளை தன் கை வளையத்திற்குள் கொண்டு வந்தான். தொடர்ந்து சிரிப்பும், சிணுங்கலுமாய் அந்த விடுமுறைநாளின் காலை பொழுது அவர்களுக்கு அழகாய் விடிந்தது.

தொடர்ந்து நாட்கள் வேகமாக விரைந்தன. உமாவுக்கு ஆண் குழந்தை பிறந்திருப்பதாக செய்தி வந்தது. சுஷ்மாவும், ஆதவனும் பார்க்கப் போனார்கள். சுஷ்மாவுக்கு குழந்தையை விட்டு நகரவே மனதில்லை. "கை கால் எல்லாம் பாரேன். குட்டி குட்டியாய் ரோஜா பூ மாதிரி மெத்துன்னு... சோ... ஸ்வீட்..." ஆர்வத்துடன் ரசித்த சுஷ்மாவை பார்த்த வாசுகியும், கண்ணம்மாவும் சிரித்தார்கள்.

"நீயும் சீக்கிரமா இதே மாதிரி ஒண்ணு பெத்துக்கோ. ஆசை தீர கொஞ்சலாம்" என்றாள் வாசுகி அவளிடம்.

சுஷ்மா ஆதவனைப் பார்த்து உதட்டை சுழித்தாள். "இப்ப வேண்டாம்னு சொல்றான். சொந்தமாய் வீடு வாங்கிய பிறகுதான் குழந்தையாம்."

அத்தை ஆதவனைப் பார்க்க, ஆதவன் ஜன்னல் வழியாய் வெளியே பார்த்தான். ஆச்சரியப்படும் விதமாய் சுஷ்மா அந்த வீட்டில் இயல்பாய் பொருந்திப் போக, ஆதவன் முன் எப்போதையும் விட அந்நியமாய் உணர்ந்தான்.

வாரம் ஒருமுறை ஞாயிற்றுக்கிழமைகளில் வீட்டிற்கு போகும் போதெல்லாம் அப்பா வெளியே எங்கும் செல்லாமல் அவர்களுக்காக காத்திருப்பதையும் சுஷ்மாவுடன் சகஜமாக உரையாடுவதையும் ஆதவன் வியப்புடன் கவனித்தான். "அத்தை குழிப்பணியாரம் சூப்பர்" என சுஷ்மா வாசுகியின் கழுத்தைக் கட்டிக் கொள்கையில், கண்ணம்மாவிடம் "எனக்கு அங்கே போர் அடிக்குதும்மா. எல்லோரும் அங்கே வந்து விடுங்களேன்" என மடியில் சாய்ந்து கொஞ்சுகையில், உமாவிடம் "இந்த மருதாணி எப்படி போடறது?" என கேட்டு சித்திரம் வரைய பழகுகையில் ஆதவன் வெறுமனே பார்த்துக் கொண்டிருந்தான்.

அத்தையிடம் அவள் செலவிற்கென்று ஒரு தொகையை ஆதவன் கொடுத்த போது "இத்தனை நாளாய் இல்லாமல் இப்போது புதிதாக என்ன செலவு வந்து விடப் போகிறது ஆதவா? உன்னிடமே இருக்கட்டும். தேவைப்படும் போது வாங்கிக் கொள்கிறேன்" என்றாள்.

"உனக்குத் தேவை இருக்கிறதோ இல்லையோ, செய்ய வேண்டிய கடமை எனக்கிருக்கிறது. மாதாமாதம் நான் பணம் தரத்தான் போகிறேன். அதை செலவழிப்பதும் இல்லாததும் உன் இஷ்டம்." என ஆதவன் அத்தையின் கைகளில் பணத்தை வைத்தான்.

"சரி உன் விருப்பம்" என்ற கண்ணம்மா சொன்னாள். "நீ பிரியப்பட்ட உத்யோகத்தில் அமர்ந்துவிட்டாய். ஆசைப்பட்ட பெண்ணையும் மணந்து கொண்டாய். நல்ல மனைவியும், குழந்தைகளும் தரும் சந்தோஷத்தை வாழ்க்கையில் வேறு எதுவும் தந்துவிட முடியாது. புதிதாக எதையும் பிடிக்க ஓடாதே ஆதவா. நிறைவு என்பது நம் எதிர்பார்ப்பில் அடங்கியிருக்கிறது. நீ நிறைய படித்தவன். உனக்குத் தெரியாததில்லை."

எப்போதும் அத்தை தன்னை துல்லியமாக கணித்து விடுவாள் என்ற எண்ணத்தில் அப்போது அங்கே வந்த சுஷ்மாவைப் பார்த்ததும் விளையாட்டாக பேச்சை மாற்றினான். "என்னைப் பற்றி கவலைப்படாதே அத்தை. உன் பெண்ணைப் பற்றி கவலைப்படு. அம்மா மாதிரி சமைக்கவோ, உன்னை மாதிரி வீட்டை பராமரிக்கவோ தெரியல அவளுக்கு. சரியான வாயாடி."

"சும்மா சொல்றான் அம்மா. நம்பாதீங்க. நான் இப்ப நல்லா சமைக்க கத்துக்கிட்டேன்" என்றாள் சுஷ்மா.

அத்தை புன்னகையுடன் சொன்னாள். "சுஷ்மாவுக்கு பொறுப்பும், எந்த சூழ்நிலையையும் எதிர்கொள்ளும் மனசும் அதிகம்."

"ஹேய் அப்படி சொல்லுங்கம்மா" என்றாள் சுஷ்மா உற்சாகத்துடன் குதித்து.

"ஓ.கே. சுஷ்மா. நேரமாகிறது போகலாம்" என ஆதவன் கிளம்பவும், "கொஞ்சம் இரேன். இன்னிக்கு உனக்கு பிடித்த அடையும், அவியலும் பண்ணியிருக்கேன்" என்றாள் வாசுகி.

"எனக்கு ஒரு மீட்டிங் இருக்கு" என்று கிளம்பினான் அவன்.

"அவன் அப்படித்தான். ரொம்ப பிகு பண்ணுவான். எனக்கு டிபன் பாக்ஸில் போட்டு கொடுங்க அத்தை. வீட்டிற்கு போனதும் முதலில் அவன்தான் சாப்பிடுவான்" என்றாள் சுஷ்மா.

இருவரும் வெளியே வருகையில் "உன் ப்ரண்ட் சுனில் உன்னைத் தேடி வந்தான். போன் நெம்பர் கூட கேட்டான்" என்றார் சங்கரன்.

திரும்பிப் போகையில் சுஷ்மா கேட்டாள். "பீச்சில் உன்னைப் பார்த்த போது உன்னுடன் இருந்தவன்தானே சுனில்!"

"ஆமாம்." ஆதவன் அலுப்புடன் சூள் கொட்டினான். "படிக்கும் போது பழகியவர்கள், நண்பர்கள், தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் எல்லோரும் நான் வேலையில் அமர்ந்த பிறகு தேடி வந்து நட்பு பாராட்டுகிறார்கள்."

"ஆனால் சுனில் உன்னுடைய ப்ரண்ட் ஆதி."

"ப்ரண்ட்தான். ஆனால் அந்த ப்ரண்ட் ஏதோ பிஸினெஸ் ஆரம்பிக்க நான் பைல் கிளியர் பண்ணனுமாம். எல்லாம் சுயநல உலகம்."

"ஆனால் அது உன்னுடைய வேலைகளில் ஒன்றுதானே ஆதி! நண்பன் என்பதால் விரைவாக செய்து கொடுப்பாய் என்று சுனில் நினைத்ததாலேயே அவன் சுயநலம் மிக்கவன் ஆகிவிடுவானா?"

"ப்ளீஸ் ஸ்டாப் இட் சுஷ்மா. எல்லாத்துக்கும் ஆர்க்யூ பண்ணாதே" என்றான் ஆதவன் எரிச்சலுடன்.

மூன்று வருடங்கள் வேகமாக ஓடி மறைந்தன. ஆதவன் கடுமையாக உழைத்தான். பதவி உயர்வும், பொறுப்பும் கூடியது. ஊரின் பெரும்புள்ளிகள் பலர் அவனுக்கு அறிமுகமாகியிருந்தனர். உயர் மட்ட பார்ட்டிகளிலும், விழாக்களிலும் பிரபலமாகியிருந்தான்.

சுஷ்மா மட்டும் துளியும் மாறாது அதே பேச்சும், சிரிப்பும், துடிப்புமாய் வளைய வந்தாள்.

"சுஷ்மா நாளை நீ ப்ரீயா?" என்றான் ஆதவன் தன் கழுத்து டையை முடிச்சிட்டபடி.

அவனுக்கு எதிரேயிருந்த டேபிள் மீது கால்களை ஆட்டியபடி அமர்ந்திருந்த சுஷ்மா "எதற்கு கேட்கிறாய்?" என்றாள் அவனிடம்.

"வெளியே போகலாம் என்று நினைத்தேன்."

"வாவ்! எங்கே போகலாம்? உள்ளூரா? வெளியூரா? எத்தனை நாள்?" என்றாள் சுஷ்மா உற்சாகத்துடன்.

"உள்ளூர்தான். மாலையில் போய்விட்டு இரவு திரும்பி விடலாம்."

"உன்னுடைய ஜால்ராக்களும், காவல்படையும், அதிகாரிகள் வட்டமும் இல்லாத இடம் எதுவானாலும் சரி. எனக்கு சந்தோஷம்தான்."

ஆதவன் சிரித்தபடி செல்லமாக அவள் தலையில் முட்டினான்.

"பெரிய பதவியில் இருப்பவனை மணந்து கொண்ட பிறகு இத்தனை சின்ன விஷயத்திற்கெல்லாம் ஆசைப்படலாமா? ஏதாவது பெரிதாக ஆசைப்படு."

"சமீப காலமாய் நான் ஆசைப்பட்டு எனக்குக் கிடைக்காத மிகப்பெரிய விஷயம் நம் இருவருக்குமான தனிமை. அதற்கு தடையாய் இருக்கும் எதையும் அது உன் வேலையாய் இருந்தாலும் கூட நான் விரும்பவில்லை."

ஆதவன் வாய்விட்டு சிரித்தான். "இந்த சொந்த வீடும், பெயரும் புகழும் கிடைத்திருப்பது இந்த வேலையினால்தான்."

சுஷ்மா தன் எதிரே நின்றிருந்தவனின் இடுப்பை அணைத்தபடி சொன்னாள். "நான் உன்னை விரும்பியது உன் படிப்பையும், பதவியையும் பார்த்து அல்ல. சங்கரன் வாத்தியார் பையன் ஆதியைத்தான் எனக்குப் பிடித்திருக்கிறது. தினமும் உன்னிடம் அவனைத்தான் தேடிக் கொண்டிருக்கிறேன்."

"எது இருந்தாலும், இல்லை என்றாலும் உன் மீது நான் வைத்திருக்கும் அன்பு சத்தியம் சுஷ்மா. என்னிக்கும் மாறாத விஷயம் அது" என்றான் உணர்ச்சியுடன்.

"அது எனக்குத் தெரியுமே!" என்றாள் சுஷ்மா அவன் கழுத்தை அணைத்து.

"சார்..." என்ற ஆதவனின் பி.ஏ.வின் குரலும், கதவு மெலிதாக விரல் நுனியால் தட்டப்படும் ஓசையும் கேட்கவே "கரடி" என்றாள் சுஷ்மா எரிச்சலுடன்.

ஆதவன் டக்இன் செய்யப்பட்ட சட்டையின் மீது கோட்டை அணிந்தபடியே சொன்னான். "மாலை ஆறு மணிக்கு வருவேன். இன்று தாஜ்ஜில் ஒரு பார்ட்டி."

ஆதவன் முடிக்கும் முன் சுஷ்மா சொன்னாள். "உன் ஆபீஸ் பார்ட்டிக்கெல்லாம் நான் வரல. வெளியே போகலாம் என்றதும் நீயும் நானும் மட்டும் போகப் போவதாக நினைத்தேன். உன் கூட்டத்திற்குள் என்னை இழுக்கப் பார்க்காதே. அது என்னால் முடியாது."

"என் குடும்பத்திற்கென்று தரப்படும் விருந்தில் என் மனைவி இல்லாமல் நான் எப்படி போக முடியும் சுஷ்மா? ப்ளீஸ் எனக்காக வா. நீ நல்லப் பெண் இல்லையா? ப்ளீஸ்டா..." ஆதவன் அவள் கன்னத்தைப் பற்றி கொஞ்ச

வும் சுஷ்மா முகத்தை திருப்பினாள்.

"எனக்கு சோப் போடாதே."

ஆதவன் சிரிப்பை அடக்கியபடி சொன்னான். "நான் எதுக்கு போடணும்? நீதான் குளிச்சிட்டியே."

"விடு என்னை. உன் செகரட்டரி இன்னும் இரண்டு நிமிடத்தில் உள்ளேயே வந்து விடுவான்."

"என் அனுமதியின்றி என் அறைக்குள் வரும் துணிச்சல் நிச்சயம் அவனுக்கு இல்லை. நீ நன்றாக தூங்கி ரெஸ்ட் எடுத்துக் கொண்டு மாலையில் தயாராய் இரு. ஓ.கே.?"

"நோ"

"யெஸ்"

"என்னால் வர முடியாது ஆதி."

"நீ வருகிறாய் டார்லிங்."

"ஆதி"

"பை.. பை"

ஆதவன் மேற்கொண்டு அவள் பேச இடம் தராமல் கையசைத்து விட்டு கிளம்பிப் போக, சுஷ்மா சலிப்புடன் சோபாவில் அமர்ந்தாள்.

தாஜ் ஓட்டலின் பார்ட்டி ஹாலுக்குள் நுழைந்ததும் "வெல்கம்... வெல்கம்..." என ராம்குமார் இருகைகளையும் விரித்து அவர்களை ஆரவாரமாக வரவேற்றார். அடர்நீலக் கரையிட்ட கறுப்பு புடவையிலும், நீல ரவிக்கையிலும் கழுத்திலிருந்த வைரங்களுடன் போட்டி போட்டு ஜொலித்த சுஷ்மாவை இமைக்காமல் பார்த்தவர் "உங்கள் வரவால் இன்று இந்த விருந்து கவுரவம் அடைகிறது" என்றார் தலைதாழ்த்தி.

"இத்தனை பெரிய முகஸ்துதி தேவையில்லை மிஸ்டர் ராம்குமார். நீங்கள் எத்தனை பெரிய ஆள் என்று ஆதி ஏற்கனவே சொல்லியிருக்கிறான்" என்றாள் சுஷ்மா.

ராம்குமார் பெரிதாக சப்தமிட்டு சிரித்தார். "மிஸ்டர் ஆதவன் தன் மனைவியை அதிகம் வெளியே அழைத்து வருவதில்லை என்ற கம்ளைன்ட் உண்டு. அது ஏன் என்று இப்போதுதான் தெரிகிறது. இவ்வளவு அழகான பெண்ணை யாராவது தூக்கிப் போய்விடுவார்கள் என்று பயமாய் இருக்கக் கூடும்."

சுஷ்மா முகத்தை சுருக்கினாள். "என்னை தூக்கிக் கொண்டு போக நான் பொம்மை அல்ல ராம்குமார். பொதுவாக பார்ட்டிகளில் எனக்கு விருப்பம் இல்லை. என் பெற்றோர் தரும் பார்ட்டிகளில் கூட நான் கலந்து கொள்வதில்லை."

சுஷ்மா மேலும் பேசும் முன் ஆதவன் அவள் கைகளைப் பற்றினான்.

"உங்கள் நேரத்தை நாங்களே எடுத்துக் கொள்வது சரியல்ல மிஸ்டர் ராம்குமார். நாங்கள் உள்ளே போகிறோம். நீங்கள் விருந்தினர்களை கவனியுங்கள்." என அங்கிருந்து நகர்ந்தான்.

பஃபேயில் உணவுகளை எடுத்துக் கொண்டு சாப்பிட ஆரம்பிக்கையில் ஆதவன் சொன்னான். "எல்லோரிடமும் வெளிப்படையாக பேச வேண்டிய அவசியமில்லை சுஷ்மா. உன் வருகையால் ராம்குமாருக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை ஏன் உடைக்கிறாய்?"

"நான் உண்மையை சொன்னேன் ஆதி. ராம்குமாரை மகிழ்வித்தாக வேண்டிய கட்டாயம் எனக்கில்லை."

"ஆனால் எனக்கிருக்கிறது சுஷ்மா. என்னுடைய வளர்ச்சிக்கு ராம்குமாரைப் போன்றவர்களை அனுசரித்துதான் போயாக வேண்டும்."

சுஷ்மா திகைப்புடன் அவனைப் பார்த்தாள். "உன்னுடைய அறிவும், புத்திசாலித்தனமும் எங்கே போனது ஆதி?"

"அது பரிட்சை பேப்பரில் மார்க் வாங்கத்தான் பயன்படும். வாழ்க்கையில் உயர சம்பாத்தியம்தான் முக்கியம் சுஷ்மா."

ஆதவனிடம் இதை எதிர்பார்க்காத சுஷ்மா மேற்கொண்டு எதுவும் பேசத் தோன்றாமல்

## குழந்தைகளால் நடத்தப்படும் வினோத உணவகம்!

நெதர்லாந்து தலைநகர் ஆம்ஸ்ரடாமில் கிண்டர் குக் கபே என்ற குடும்ப உணவகம் ஒன்று உள்ளது. இந்த உணவகத்தின் சிறப்பு என்னவென்றால், முழுக்க முழுக்க இது குழந்தைகளாலேயே நடத்தப்படுகிறது. உணவை சமைப்பது, பரிமாறுவது, துப்புரவு செய்வது, பில் போடுவது என எல்லா வேலைகளையும் குழந்தைகளே செய்கின்றன.

இங்கு தயாரிக்கப்படும் உணவு வகைகள் அடங்கிய பட்டியல் எளிதாக தயாரிக்கும் வகையில் உள்ளது. நல்ல ஆரோக்கியமான உணவுகள் மிக குறைந்த விலையில் வழங்கப்படுகின்றன. இந்த உணவகத்தை மேற்பார்வை செய்வதற்கு 2 பெரியவர்கள்



நியமிக்கப்பட்டுள்ளனர். குழந்தைகளுக்கு வழிகாட்டுவதோடு இவர்கள் பணி நின்று விடும்.

மற்ற பணிகள் அனைத்தையும் குழந்தைகள்தான் செய்கின்றன. பள்ளிக்கூடம் முடிந்ததும் குழந்தைகளை அவர்களுடைய பெற்றோர் இந்த உணவகத்தில் கொண்டு வந்து இறக்கி விட்டு சென்று விடுகின்றனர். பிறகு உணவகத்தில் உள்ள எல்லா வேலைகளையும் இந்த குழந்தைகள் செய்யத் தயாராகி விடுகின்றன. இந்த வயதிலேயே உணவு தயாரித்தல், பொறுமையாக பரிமாறுதல் போன்றவற்றை பழக வேண்டுமென பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

இன்னொரு விசேஷம் என்னவென்றால், குழந்தைகள் தாங்கள் சமைத்த உணவுகளை பெற்றோருடன் பகிர்ந்து உண்பதுதான். இப்படியாக உணவு தயாரிக்கும் முறை பழகுவதால் குழந்தைகளின் எதிர்காலம் சிறப்பாக இருக்கும் என்று அங்குள்ள பெற்றோர்கள் நினைக்கிறார்கள். ஆனால் இங்கோ திருமணம் ஆனபிறகும் சில பெண்களுக்கு சமைக்கவே தெரியவில்லை. கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வமும் இருப்பதில்லை. கேட்டால், படித்த குடும்பம் என்கிறார்கள். எங்கே போய் முட்டிக் கொள்வது?

அமர்ந்திருந்தாள். மிகவும் கட்டுப்பாடான குடும்ப அமைப்பிலிருந்து வந்த ஆதவன் ஏன் இப்படி மாறிப்போனான் என்று அவள் யோசிக்கத் தொடங்குகையில், ஆதவன் அவளை எல்லோருக்கும் அறிமுகம் செய்து வைத்தான். சொல்லி வைத்தாற்போல் எல்லோரும் அவள் அழகை புகழ்ந்தார்கள்.

சுஷ்மா ஆதவனின் கைகளைப் பற்றியபடியே, அவனை விட்டு நகராமல் நின்றிருக்க ராம்குமார் அவளிடம் சொன்னார். "ஆதவன் உங்கள் கண்களுக்கு ஏதோ மாயத்திரை போட்டிருக்கிறார் என்று நினைக்கிறேன் சுஷ்மா. ஆதவனைத் தவிர வேறு யாரும் உங்கள் கண்களில் படவில்லை போலும்."

சுஷ்மா கலகலவென சிரித்தாள். "ஆதவன் அத்தனை ரொமான்டிக் இல்ல ராம்குமார். இன்பேக்ட் என் காதலை சொன்னபோது கூட என்னை ரொம்ப கோபித்துக் கொண்டான்."

"இஸிட்?" என்றார் ராம்குமார் நம்பமுடியாமல்.

"நம் கதை எதற்கு? இன்று பார்ட்டி எத்தனை கிராண்டாக இருந்தது அதைப் பற்றி சொல். சாப்பாடு சிம்ப்ளி சூப்பர்ப். அந்த டி.ஜே. மியூஸிக் அருமை. இல்லையா சுஷ்மா?" என்றான் ஆதவன்.

"ஆமாம். நீதான் சொல்லி விட்டாயே" என்ற சுஷ்மா "போகலாமா?" என்றாள் வாட்ச்சைப் பார்த்தபடி.

"ஓ.கே. கிளம்பலாம்" என ஆதவன் கிளம்ப, ராம்குமார் சுஷ்மாவிடமும், ஆதவனிடமும் தோளை அணைத்து விடை கொடுத்தார்.

"எனக்கு மிகவும் மகிழ்ச்சி. இது நல்ல ஆரம்பம். நாம் அடிக்கடி சந்திக்கலாம்."

"ஓ ஷ்யூர்" என்றான் ஆதவன் தோள்களை குலுக்கி.

வீடு வந்ததும் டிரைவர் காரை ஷெட்டில் நிறுத்திவிட்டு கிளம்ப, ஆதவன் கதவைத் தாழிட்டு விட்டு உள்ளே வந்தான். சுஷ்மா நைட்டிக்கு மாறி அலுப்புடன் படுக்கையில் சாய்ந்தாள். அவளருகில் வந்து அமர்ந்த ஆதவன் சொன்னான். "எனக்கு இன்னிக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு சுஷ்மா. இன்று நமக்கு கிடைச்ச மரியாதையை பாத்தியா? நீ என் கூட இருந்தால் போதும். நான் எங்கியோ போய்டுவேன்."

"அதுதான் எனக்கும் பயம். நீ எங்காவது போய்விட்டால் என்னால் உன்னைப் பிடிக்க முடியாது பார்!"

"விளையாடாதே சுஷ்மா. நான் சீரியசாக பேசுகிறேன்."

"நானும் சீரியசாகத்தான் சொல்கிறேன் ஆதி."

சுஷ்மாவின் வார்த்தைகளில் அத்தையின் சாயல் தெரிவதாக தோன்றியது. அதை அவளிடம் சொன்னபோது "எல்லா பெண்ணுக்கும் சாயல் ஒண்ணுதான் ஆதி. உருவங்கள்தான் வேறு" என்றாள்.

"சுஷ்மா, பிறந்ததிலிருந்து பற்றாக்குறை பட்ஜெட்டில் குடும்பம் நடத்தி பழகியவன் நான். என் அளவுக்கு திறமையோ, படிப்போ இல்லாத சகமாணவர்கள் தங்கள் குடும்பப் பின்னணியால் உயர்ந்த நிலைக்கு செல்வதைப் பார்த்து மனம் குமைந்தவன். இன்று என் கடின உழைப்பால் கவுரவமான பதவியில் இருக்கிறேன். இந்த பதவி மூலமாய் இன்னும் வசதிகளை பெருக்கிக் கொள்ள வாய்ப்பு இருக்கும் போது அதை உபயோகப்படுத்திக் கொள்வதில் என்ன தவறு?"

சுஷ்மா மிருதுவாக அவன் தலையில் கை வைத்தாள். "உன் ஆதங்கமும், துடிப்பும் எனக்குப் புரிகிறது ஆதி. பட் நேர்மையான வழியில் கிடைக்காத எதுவும் நிலைக்காது."

"சும்மா டயலாக் பேசாதே சுஷ்மா. உன்னை சுத்தி என்ன நடக்குதுன்னு பார். இன்னிக்கு குடிக்கிற நீரில், சாப்பிடுகிற உணவில், உடுத்துகிற உடையில் எதிலும் நேர்மை இல்லை. நம்

பால்காரன் தண்ணீர் கலக்காமல் என்னிக்காவது பால் ஊத்தியிருக்கானா? வேலைக்காரி வாங்குகிற சம்பளத்துக்கு ஒழுங்கா வேலை செய்திருக்கிறாளா? ஆட்டோக்காரன் போகிற இடத்துக்கு நியாயமான பணம் கேட்கிறானா? காய்கறி விற்பவன்... ரேஷன் கடையில் இப்படி..."

"ஸ்டாப் இட் ஆதி. இதெல்லாம் எனக்குத் தெரியாது என்றா சொல்கிறாய்? நம்மை சுற்றியிருப்பவர்களுக்காக நாம் வாழவில்லை. நமக்காக வாழ்கிறோம். நேர்மையாக வாழ்ந்து பழகியவர்கள் சந்தர்ப்ப சூழ்நிலையால் தவறு செய்ய நேரிடும் போது அவர்களது மனமே அவர்களை நிம்மதியாக இருக்க விடாது. பின்னாளில் நீ நினைத்து வருந்தக் கூடிய எந்த தவறையும் அவசரப்பட்டு செய்து விடக் கூடாது."

"எனக்கு லெக்சர் கொடுக்காதே சுஷ்மா" என்றான் ஆதவன் அலுப்புடன்.

அவனை ஒரு நொடி உற்றுக் கவனித்த சுஷ்மா சொன்னாள். "லெக்சர் கொடுக்க எனக்கும் விருப்பமில்லை. ஏன்னா இன்னிக்கு ஈவ்னிங் முழுக்க உன் கூட இருந்திருக்கிறேன். அந்த சந்தோஷமான மனநிலையை கெடுத்துக்க விரும்பல."

"தட்ஸ் குட்" என்ற ஆதவன் அவள் கன்னத்தில் முத்தமிட்டான்.

"ஏய் உங்கிட்ட ஒரு வாசனை வருது?"

"பார்ட்டில ட்ரிங்க் சகஜம் டார்லிங். உனக்குத் தெரியாதா என்ன? அட்ஜஸ்ட் பண்ணிக்கோ" என்றான் ஆதவன் கொஞ்சலாக.

"அடிக்கடி இது தொடரக்கூடாது ஆதி" என்றாள் சுஷ்மா கண்டிப்புடன்.

"ம்...ம்..." என அவள் முகத்தோடு முகம் உரசியவன் சொன்னான். "இதுவரை எனக்குக் கிடைத்திருக்கும், கிடைக்கப் போகும் எந்த அதிர்ஷ்டமும் உனக்கு ஈடாகாது சுஷ்மா. நீ வந்த பிறகுதான் என் வாழ்க்கை அழகாய் மாறியது. அன்றாட செயல்களுக்கும் ஒரு அர்த்தம் ஏற்பட்டது. ஐ லவ் யூ செல்லம்."

"சும்மா சொல்லக்கூடாது. ஒரு பெக் உள்ளே போனதும் கவிதை பேசற!" சுஷ்மா கடகடவென சிரித்தாள்.

## 13

சுஷ்மாவின் கையிலிருந்த குழந்தை எகிறி குதித்தான். சுஷ்மாவின் கொஞ்சல் மொழிகளும், முகம் காட்டும் வேடிக்கையையும் பார்த்து குலுங்கி சிரித்தான்.

"சுஷ்மா டிபன் ஆறிப் போயிடும். சாப்பிடு முதலில்" என்றாள் உமா.

"ம்ஹூம். இவனை கீழே விடவே மனசில்லை எனக்கு. சோ க்யூட். உமா ஒரு உண்மையை சொல்லட்டுமா? இந்த உலகிலேயே லக்கி வுமன் என்றால் அது நீதான்."

"நானா?"

"ஆமாம். இந்த மாதிரி ஒரு குழந்தையைப் பெற்றவள் எப்படி அதிர்ஷ்டசாலியாய் இல்லாமல் இருக்க முடியும்?"

சுஷ்மாவின் குரலில் ஏக்கம் தெரிய, அத்தை கேட்டாள். "ஆதவன் ஆசைப்படி வீடுதான் வாங்கியாச்சே. இன்னும் ஏன் குழந்தையை தள்ளிப் போடுகிறீர்கள்?"

"ஆசைக்கு அளவு ஏதும்மா? ஒரு வீடு வாங்கியதும் அது அடங்கி விடுமா என்ன?"

கண்ணம்மா யோசனையில் ஆழ்ந்து போக, வாசுகி மருமகளை ஆதங்கத்துடன் கேட்டாள். "ஆதவன் இங்கு வந்து இரண்டு மாதம் ஆகிறது. இப்பவாவது உன்னுடன் அழைத்து வந்திருக்கக் கூடாதாம்மா?"

சுஷ்மா வாசுகியை திருப்திப்படுத்தும் விதமாய் என்ன சொல்வதென்று யோசிக்க, சரவணன் அம்மாவுக்கு பதில் சொன்னான். "அவனுக்கு வேலை நிறைய இருக்கும்மா. கவர்மென்ட்ல சும்மா சம்பளம் கொடுத்துடுவாங்களா என்ன?"

"ம்... அவனும் அப்பா பேச்சை கேட்டு டீச்சர் வேலைக்கு போயிருந்தா இப்ப உன்னை மாதிரி நிம்மதியா இருந்திருக்கலாம்" என்றாள் வாசுகி.

மாமியாரை பார்த்தபடியே அமர்ந்திருந்த சுஷ்மாவிடம் சரவணன் சொன்னான். "நீ எதுவும் தவறாக நினைக்க வேண்டாம் சுஷ்மா. அம்மாவுக்கு தெரிஞ்சதெல்லாம் அப்பாவும், அடுப்படியும், வாத்தியார் உத்தியோகமும்தான்."

"தவறாக நினைக்க இதில் எதுவுமில்லை. ஆச்சரியம் என்னவென்றால் அத்தை மாதிரி நானே சில முறை ஆதவன் டீச்சர் வேலைக்கு போயிருந்தால் நன்றாக இருக்கும் என்று நினைத்திருக்கிறேன். மற்றபடி குடும்பத்திற்காகவே தன்னை முழுதாய் அர்ப்பணித்துக் கொள்வது அத்தை மாதிரி சிலரால்தான் முடியும்" என்றாள் சுஷ்மா.

"சுஷ்மா, உன் அம்மா வீட்டிற்கு போயிருந்தாயா? அங்கே எல்லோரும் நலமா?" என்றாள் உமா.

"நான் போய் ரொம்ப நாட்கள் ஆகின்றன உமா. அம்மா, அப்பா, அண்ணா மூன்று பேருமே பிஸி. காமுபாட்டியை பார்க்கவாவது முன்பு போவேன். பாட்டி இறந்த பிறகு வீடு வெறிச்சோடி விட்டாற் போலிருக்கிறது. வெளியே எப்போதாவது அம்மாவையோ அப்பாவையோ பார்த்து பேசுவதுண்டு. ஆதவன் பார்ட்டிகளில் அவர்களை அடிக்கடி சந்திக்கிறான். யு நோ, இப்போது என்

பெற்றோருக்கு என்னை விட ஆதவனைத்தான் பிடிக்கிறது. என்னால் பொருந்திப் போக முடியாத அவர்கள் உலகத்தில் ஆதவன் எளிதாக கலந்து விட்ட பெருமிதம் அவர்களுக்கு."

மேலும் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு கிளம்புகையில் கண்ணம்மா சொன்னாள். "ஆதவனை பார்க்கணும் எனக்கு. அவனுக்கு வர முடியாட்டி அவன் எப்ப ப்ரீன்னு சொல். நான் வருகிறேன்."

"ஆதவனுக்கு ஓய்வு கிடைக்கும் வரை ஏன் காத்திருக்கணும்? இப்பவே என்னோட கிளம்பி வாங்க. அவனிடம் பிறகு பேசிக் கொள்ளலாம்."

அத்தை புன்னகைத்தாள். "நம்ம வீட்டுக்கு வர்றதுக்கென்னம்மா? இதோ இந்த குழந்தையை வெச்சிட்டு தனியா உமா என்ன செய்வா சொல். அண்ணிக்கு வீட்டு வேலையே சரியா இருக்கு. இவன் பின்னாடி ஓடறதுலயே நாள் ஓடிருது எங்களுக்கு."

சுஷ்மா வாஞ்சையுடன் அவளைப் பார்த்தாள். "ஒரு குழந்தை பின்னாடி ஓடினீங்க, இப்ப அவன் பணத்தின் பின்னாடி ஓடிட்டு இருக்கான். இப்ப அடுத்த ஓட்டம் ஆரம்பிச்சாச்சா? உங்களுக்காகவும் கொஞ்சம் வாழணும் அம்மா. என் கூட வாங்க. வாய்க்கு ருசியா கேட்டு வாங்கி சாப்பிடுங்க. இந்த சென்னையில நீங்க இதுவரை பார்க்காத இடங்கள் எத்தனையோ இருக்கு. அதை எல்லாம் பாருங்க. சாயங்காலம் தோட்டத்தில் நாற்காலியை போட்டு அமர்ந்து டீயை குடித்தபடி உங்களுக்கு பிடித்த பாட்டை கேளுங்க. நல்ல சினிமாவை பாருங்க."

கண்ணம்மா சிரித்தபடி சுஷ்மாவின் கரங்களைப் பற்றினாள். "நீ சொன்னதெல்லாம் ரிட்டையர்ட் ஆனவங்க ஓய்வு நேரத்தை செலவழிக்கும் முறைகள் மகளே. இப்ப எனக்கு ஓய்வெடுக்க நேரமே இல்லை. செய்ய வேண்டிய கடமைகள் காத்திருக்கின்றன. மரமும், செடியும்தான் ஒரே இடத்தில் நிற்கும். நாமெல்லாம் மனிதர்கள். ஓடத்தானே கடவுள் நமக்கு கால்களை கொடுத்திருக்கிறான். இந்த கால்களில் பலம் இருக்கும் வரை ஓடத்தான் வேண்டும்."

அத்தையின் குணத்திற்கு அவள் கணவர் உயிருடன் இருந்திருந்தால் எத்தனை சிறப்பான வாழ்க்கை வாழ்ந்திருப்பார்கள் என்ற நினைவில் சுஷ்மாவின் மனம் நெகிழ்ந்தது.

❦❦❦

சுஷ்மா ஸ்பென்ஸர் டிபார்ட்மெண்ட் ஸ்டோரில் வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கிக் கொண்டு வெளியே வந்தாள். "ஹலோ" என்ற குரல் கேட்டு திரும்பிப் பார்த்தாள். ராம்குமார் பெரிய சிரிப்புடன் அவள் எதிரே நின்றிருந்தார்.

"ஹலோ, எப்படியிருக்கிறீர்கள்?" என்றாள் சுஷ்மா சம்பிரதாயமாக.

"ஃபைன்" என்றார் ராம்குமார் தலையசைத்து. "இந்த பொருட்களை வாங்க நீங்கள்தான் வர வேண்டுமா? வீட்டில் ஆட்கள் இல்லையா?" என்றார் அவள் கையிலிருந்த பெரிய கவர்களை பார்த்தபடி.

"இருக்கிறார்கள். பட் நானே பார்த்து வாங்கக்கூடிய பொருட்கள் சிலவற்றை வாங்குவதற்காக வந்தேன்."

"உங்களை அரவிந்த் படேலின் பெண் என்றால் இப்போது யாருமே நம்ப மாட்டார்கள். ஒரு மிடில் கிளாஸ் குடும்பத் தலைவி போல் பேசுகிறீர்கள்" என்றார் ராம்குமார் வியப்புடன்.

"எந்த க்ளாசாக இருந்தாலும் என் குடும்பத் தேவைகளை கவனித்து பூர்த்தி செய்வது என் முக்கிய கடமை என்று நினைக்கிறேன்."

"வெரி நைஸ். ஆதவன் ரொம்ப லக்கி. எல்லா விஷயத்திலும் இந்த மாதிரி கவனித்துக் கொள்ளும் பெண் எங்கே கிடைப்பாள்?"

"நானும் லக்கிதான் மிஸ்டர் ராம்குமார். ஆதவனை விட சிறந்த கணவன் எனக்கு கிடைக்க மாட்டான்."

"வெல். இந்த இரண்டு அதிர்ஷ்டசாலிகளும் வசிக்கும் வீட்டிற்கு எப்படிப் போவீர்கள்?" என்றார் ராம்குமார் சிரித்தபடி.

"அடுத்த தெருதான். ஒரு வாக் போகிறமாதிரி, நடந்தே போய் விடுவேன்."

"நோ நோ... கையில் பைகளுடன் நடப்பதாவது? நான் உங்களை டிராப் பண்ணுகிறேன்."

"தேங்க்யூ, ஆனால் அவசியமில்லை. வீட்டில் டிரைவர் இருக்கிறான். தேவையானால் காருடன் வருவான்."

"அப்படியானால் உங்களுக்கு என்னுடன் வர விருப்பமில்லையா?" என்றார் ராம்குமார் நேரடியாக.

ஆமாம் என்று சொல்ல முடியாமல் நாகரீகம் தடுக்க, "அப்படி எல்லாம் இல்லை. உங்களுக்கு எதற்கு சிரமம் என்று நினைத்தேன்" என்றாள் சுஷ்மா.

"எந்த சிரமமும் இல்லை. இன்று என் கார் செய்திருக்கும் அதிர்ஷ்டத்தை நினைத்து சந்தோஷம்தான். வாருங்கள் போகலாம்."

ராம்குமாரின் பேச்சு எப்போதும் போல் மிகையாக பட சுஷ்மா அவரிடம் மறுக்க வழியின்றி காரில் ஏறினாள். ராம்குமார் உற்சாகத்துடன் ஏதோ பேச, சுஷ்மா தலையசைத்தபடி அமர்ந்திருக்க இரண்டு நிமிடங்களில் வீட்டு வாசலில் கார் நின்றது. விடுதலை பெற்ற உணர்வுடன் சுஷ்மா காரிலிருந்து இறங்கினாள். அவளைப் பார்த்ததும் ஓடி வந்த வேலையாளிடம் சாமான்களை கொடுத்து விட்டு திரும்புகையில் ஆதவனின்

கார் உள்ளே வந்து நின்றது. காரிலிருந்து இறங்கிய ஆதவன் ராம்குமாரைப் பார்த்ததும் "ஆச்சரியம், உங்களுக்கு இந்த வீடு எப்படி தெரிந்தது? அதுவும் முன்னறிவிப்பு இல்லாமல் வந்திருக்கிறீர்களே!" என்றான் பரபரப்புடன்.

"வழியில் உன் மனைவியைப் பார்த்தேன். டிராப் பண்ணிவிட்டு உன்னுடன் சண்டை போடலாம் என்று வந்தேன். இத்தனை அருமையான மனைவியை உள்ளங்கையில் வைத்து தாங்காமல் ஏன் வெளியே அலைய விடுகிறாய்?"

ராம்குமார் மேலும் பேசும்முன் சுஷ்மா குறுக்கிட்டாள். "எனக்கு பிடித்த வேலையை நான் செய்கிறேன். தேவையில்லாமல் ஆதியை குற்ற உணர்ச்சிக்கு ஆளாக்காதீர்கள்" என்ற சுஷ்மா "இப்போது என்ன சாப்பிடுகிறீர்கள்? காபியா? கோல்டா?" என்றாள் உபசரிக்கும் விதமாக.

"நீங்கள் எதைக் கொடுத்தாலும் சாப்பிடுவேன்" என்றார் ராம்குமார் பணிவாக.

சுஷ்மா உள்ளே போனதும் ராம்குமார் வீட்டை சுற்றிலும் ஒரு பார்வை பார்த்தார். "பழைய வீட்டை வாங்கி புதுப்பித்திருப்பீர்கள் போலிருக்கிறது" என்றார் ஆதவனிடம்.

"ஆமாம். சமீபத்தில்தான் வாங்கினோம். எங்களுக்கென்று என் சம்பாத்தியத்தில் சொந்தமாக ஒரு வீடு வாங்குவது என் லட்சியங்களில் ஒன்றாகவே இருந்தது. இந்த வீட்டை வாங்கிய அன்று எனக்கேற்பட்ட சந்தோஷத்தை விவரிக்க முடியாது."

"புவர் பாய்" என்றார் ராம்குமார் அவன் தோளைத் தட்டி. "உன் பவர் உனக்கே தெரியவில்லை ஆதவன். லட்சங்களும், கோடிகளும் நீ கையசைத்தால் உன்னைத் தேடி வரும். அப்படியிருக்க ஒரு வீடு வாங்குவதில் உன் லட்சியத்தை வீணடிக்கலாமா? அடுத்த ஆறு மாதம் நான் சொல்கிறபடி செய் ஆதவன். தமிழ்நாட்டின் பெரிய பணக்காரர்களில் ஒருவனாக உன்னை மாற்றுகிறேன். இதைவிட பெரிய பங்களாக்களும், விதவிதமான கார்களும் உனக்கு சொந்தமாக இருக்கும். அரவிந்த்டேவின் மருமகன் நீ. அந்தஸ்தில் அவரை விட கீழே இருக்கலாமா? உன் மாமனார், மாமியார் நிமிர்ந்து பார்க்கும் உயரத்துக்கு நீ போக வேண்டும்."

ராம்குமார் சொல்லிக் கொண்டே போக ஆதவன் வியப்பிலும், மகிழ்ச்சியிலும் திளைக்க ஆரம்பித்தான்.

சுஷ்மா கண்ணாடி டம்ளர் நிறைய ஆரஞ்சு ஜூஸையும், ஸ்வீட்டையும் டீப்பாய் மீது வைத்தாள். ரசகுல்லாவை ஸ்பூனால் ஒரு வாய் சாப்பிட்ட ராம்குமார் சொன்னார். "உங்கள் வீட்டில் முதன் முதலாய் நான் சாப்பிடும் இந்த ஸ்வீட் உங்கள் வாழ்க்கையையும் இதைப் போலவே இனிப்பாக்கட்டும்" என்றார் இருவரையும் பார்த்து.

சுஷ்மா அமைதியாய் புன்னகைக்க, ஆதவன் "நிச்சயமாய்" என்றான் சந்தோஷத்துடன்.

ராம்குமார் சென்ற பின், உள்ளே வந்த ஆதவனிடம் சுஷ்மா கேட்டாள். "அந்த ராம்குமாரின் மனைவி, குடும்பம் எல்லாம் எங்கே இருக்கிறார்கள்?"

"அப்படி யாருமே இல்லை. மனிதர் அதிர்ஷ்டசாலி. இதுவரை திருமணமே செய்து கொள்ளாமல் தினமும் திருமண வாழ்க்கையை அனுபவிக்கிறார்."

"கல்யாணமாகாத கட்டையா? அதனால்தான் சற்றும் இங்கிதமின்றி அடுத்தவர்கள் குடும்பத்தில் மூக்கை நுழைக்கிறார்" என்றாள் சுஷ்மா.

"கூல் சுஷ்மா" என்றான் ஆதவன் அவளிடம். "ராம்குமாரைப் பற்றி பேச்செடுத்தாலே நீ ஏன் படபடக்கிறாய்?"

"எனக்கென்னவோ முதல் சந்திப்பிலிருந்தே அந்த ஆளைப் பிடிக்கவில்லை."

"பாமரத்தனமாய் பேசாதே சுஷ்மா. காரணமின்றி ஒருவரை வெறுக்கலாமா?"

"காரணங்கள் நிறைய இருக்கிறது. அவர் பேச்சும், பார்வையும் சரியில்லை என்று என் உள்ளுணர்வு சொல்கிறது. இப்போது அந்தஸ்து மோகம் உன் பார்வையை மறைக்கிறது. அது விலகும் போது ராம்குமார் எப்படிப்பட்டவர் என்பது புரியும்."

## ஐக்கிய அரபு எமிரேட்டில் ஒட்டகத் திருவிழா!

ஐக்கிய அரபு எமிரேட் நாட்டில் ஆண்டுதோறும் ஒட்டகங்கள் திருவிழா மிக விமரிசையாக கொண்டாடப்படுகிறது. இத்திருவிழாவில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஒட்டகங்கள் கலந்து கொள்கின்றன. இவ்விழாவில் ஒட்டகங்களுக்காக பல்வேறு போட்டிகள் நடத்தப்படுகின்றன. இதில் வெற்றி பெறும் ஒட்டகங்களுக்கு பரிசுகளும் வழங்கப்படுகின்றன. ஆண்டுதோறும் ஒரு வாரம் கொண்டாடப்படும் இவ்விழாவில் 155 விதமான போட்டிகள் நடத்தப்படுகின்றன. தவிர பல்வேறு நிகழ்ச்சிகளும் இடம்பெறுகின்றன.

வெற்றி பெற்ற ஒட்டகங்களை ஊக்குவிக்கும் விதமாக ரூ.46 கோடி மதிப்புள்ள பரிசுப் பொருள்கள் வழங்கப்படுகின்றன. ஒட்டகங்களுக்கு அழகுப் போட்டியும் நடத்தப்படுகின்றன. அதுமட்டுமின்றி ஒட்டப்பந்தயம், அவற்றின்

தன் நலனில் பெரிதும் அக்கறை காண்பிக்கும் ராம்குமாரை மனைவி கடுமையாக விமர்சிப்பது ஆதவனை வருத்தப்படுத்தியது. ஆனால் அதைப் பற்றி விவாதித்து தங்கள் சுமூகமான நிலையை கெடுத்துக் கொள்ள விரும்பாத ஆதவன் சொன்னான். "ஓ.கே. இனி ராம்குமாரைப் பற்றி நாம் பேசவே வேண்டாம். சரியா?"

"ரொம்ப சரி" என்றாள் சுஷ்மா.

## 14

இட்லியை தக்காளி குருமாவில் தோய்த்து சாப்பிடுகையில் ஆதவன் சொன்னான். "எங்க அம்மா சமையல் மாதிரியே இருக்கு."

அவனுக்கு எதிரில் அமர்ந்திருந்த சுஷ்மா, "மாதிரி இல்ல. உங்கம்மாவே சமைச்சதுதான். மதியம் நான் போயிருந்த போது உனக்காக கொடுத்தனுப்பினார்கள்" என்றவள் எழுந்து போய் நெய் முறுக்கையும், ரவாலட்டுவையும் எடுத்து வந்து வைத்தாள்.

பள்ளி செல்லும் நாட்களில் பரிட்சைக்கு படிக்கும் போது முறுக்குடன் அல்ஜீப்ராவையும் சேர்த்து நொறுக்கியதையும், ஒரு பாடம் முடிந்ததும் ஒரு லட்டு என்ற கணக்கில் சயின்சையும் லட்டையும் ஒருசேர காலி செய்ததும் நினைவுக்கு வந்தது. நாக்கில் ருசி பட்டதும் மனம் பழைய நினைவுகளில் கரைந்து போனது. சுஷ்மா அவனை புரிந்து கொண்ட புன்னகையுடன் சொன்னாள்.

"இந்த பூமியை ஏன் தாய்க்கு சமமா சொல்றோம் தெரியுமா ஆதி? எவ்வளவு உயரம் தூக்கி வீசினாலும் புவியீர்ப்பு சக்தியினால் பொருட்கள் திரும்ப தரையிலேயே வந்து விழுவது மாதிரி பெற்ற தாய்க்கும் ஈர்ப்பு சக்தி உண்டு. பிள்ளைகள் அவர்களை பிரிந்து எங்கே இருந்தாலும் கடைசிவரை தாயின் நினைவுகள் அவர்களை ஈர்த்துக் கொண்டே தான் இருக்கும்."

சுஷ்மாவிடம் தன்னால் எந்த முகமூடியையும் அணிய முடியாது என்ற பலவீனத்தில் ஆதவன் பொதுவாக புன்னகைத்தான்.

"அங்கே எல்லோரும் எப்படியிருக்கிறார்கள்?"

"எப்போதும் போல் இருக்கிறார்கள். அம்மாதான் உன்னிடம் பேச வேண்டும் என்று சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். நேரம் கிடைக்கும் போது போன் செய்ய சொன்னார்கள்."

"வாட் நான்சென்ஸ். அத்தை என்னிடம் பேச அப்பாயின்ட்மெண்ட் வாங்க வேண்டுமா? உன்னுடன் அவர்களை அழைத்து வந்திருக்க வேண்டியதுதானே!" என்றான் வேகமாக.

"போன மாசமே கூப்பிட்டேன். ஒருவேளை நீ போனால் வருவாங்களோ என்னவோ?"

"நாளை நாம் போகலாம். வற்புறுத்தியாவது அத்தையை கொஞ்ச நாள் இங்கே அழைத்து வரலாம்" என்றான் ஆதவன்.

ஆனால் அதன்பின் பல நாளைகள் வந்து போன பிறகும் ஆதவனால் தன் வீட்டிற்கு போக முடியவில்லை. அலுவலகத்தில் செய்ய வேண்டிய வேலைகள் போக மீதி நேரத்தை ஆதவன் ராம்குமாருடனே செலவழித்தான்.

சுஷ்மா ஆதவனிடம் சண்டை போட்டாள். "ராம்குமாருக்கு உன்னுடைய வயதோ, தொழில் ரீதியான தொடர்போ கூட இல்லை. நீங்கள் இருவரும் சேர்ந்து படித்தவர்களும் இல்லை. இந்த திடீர் நட்பு எங்கிருந்து வந்தது? அதுவும் உன் விடுமுறை நாளையும், குடும்பத்தையும் மறந்து அவர் பின்னால் அலைகிற அளவிற்கு அப்படி என்ன காரணம் இருக்கிறது? என்னிடம் சொல்!"

"எதுக்கு சுஷ்மா கோபப்படற?" என்றான் ஆதவன் சமாதானமாக. "நான் காரணமில்லாமல் சுற்றவில்லை. அவரால் நம் குடும்பத்திற்கு என்ன நன்மை கிடைத்தாலும் அதனால் பயனடையப் போவது நீயும், வரப்போகும் நம் வாரிசுகளும்தான்."

"குறுக்கு வழியில் கிடைக்கிற நன்மைகள் எத்தனை பெரிதாய் இருந்தாலும் அது எனக்கு வேண்டாம் ஆதி. நியாயமாய் நமக்கு கிடைக்க வேண்டியது கிடைத்தால் போதும்."

ஆதவனின் முகம் தீவிரமானது. "உனக்கு போதுமானதாக இருக்கலாம். ஆனால் எனக்குப்



ஆரோக்கியம், பாலின் தரம், தளிர்நடை என பல்வேறு கட்டங்களாக போட்டிகள் நடத்தப்படுகின்றன. வெற்றி பெறும் ஒட்டகங்களுக்கு மட்டுமல்லாமல் அதன் உரிமையாளர்களுக்கும் சிறப்பு பரிசுகள் வழங்கப்படுகின்றன. கடைசி நாள் அன்று ஒட்டகங்கள் ஏலமும் விடப்படுகின்றன. இங்கே எப்படி காளையை அடக்கும் ஜல்லிக்கட்டுப் போட்டி நடைபெறுகிறதோ அதைபோல ஐக்கிய அரபு எமிரேட்டில் ஒட்டகங்கள் திருவிழா களைகட்டுகிறது.

போதாது சுஷ்மா. தயவு செய்து இந்த விஷயத்தில் நீ தலையிடாதே!"

சுஷ்மா பலமுறை சொன்ன போதும் ராம்குமாரின் வரவும், அதை தொடர்ந்து வீட்டிற்கு புதிது புதிதாய் பொருட்கள் வருவதும் நின்றபாடில்லை.

ஒரு ஞாயிற்றுக்கிழமை காலையில் போரடித்துப் போய் வார இதழ்களை புரட்டிக் கொண்டிருந்த சுஷ்மா, ஆதவன் காரிலிருந்து இறங்கி வரவும் ஆச்சரியமானாள்.

"என்ன அதிசயம்? இன்னிக்கு வீட்டு நினைவு வந்துவிட்டதா உனக்கு? சீக்கிரமா வந்துட்ட?" என்றாள் வியப்புடன்.

"வீட்டு நினைவு இல்லாமல் எங்கே போகும்? ஒரு நிமிடமேனும் உன்னை மறந்தால்தானே நினைப்பதற்கு!" என்றான்.

"சும்மா டயலாக் எல்லாம் பேசாதே. என்ன விஷயம் சொல்" என்றாள் அவள் கறாராக.

"மிரட்டாதே சுஷ்மா. நாம் இருவரும் சேர்ந்து வெளியே போய் எத்தனை நாட்களாகிறது தெரியுமா?"

ஆதவனை ஒரு பார்வை பார்த்த சுஷ்மா கேட்டாள். "இன்று பார்ட்டி எங்கே?"

ஒரு நிமிடம் மவுனமான ஆதவன் பிறகு சொன்னான். "உனக்கு பிடிக்காது என்று தெரியும். ஆனால் எப்போதுமே தவிர்க்க முடியாது சுஷ்மா. தம்பதிகளுக்கு விருந்து நடைபெறும் போது நான் மட்டும் தனியாக போக முடியாது. ப்ளீஸ் இந்த ஒரு முறை மட்டும் எனக்காக வா சுஷ்மா. ப்ளீஸ் டார்லிங்."

சுஷ்மா சோர்வுடன் புன்னகைத்தாள். "எனக்கு பிடிக்கிறதோ இல்லையோ உனக்காக நான் எதையும் செய்வேன். ஆனால் உனக்குதான் என்னிடம் நின்று பேசக் கூட நேரமில்லாமல் போய்விட்டது."

"வாழ்க்கையில் உன்னை விட முக்கியமானவர்கள் எனக்கு யாரும் இல்லை சுஷ்மா."

"உன்னிடம் நிதானமாய் ஒரு விஷயத்தை பற்றி பேச வேண்டும் என ஒரு வாரமாய் தவித்துக் கொண்டிருக்கிறேன். அதை காது கொடுத்து கேட்க நேரமில்லை உனக்கு."

"சரி இப்போது சொல் சுஷ்மா."

"இப்போது உனக்கு அவசரவேலை எதுவுமில்லையே!"

"இல்லை. சொல்லு."

சுஷ்மா புன்னகையுடன் அவன் தோளில் சாய்ந்தாள். "நாம் எத்தனையோ திட்டமிட்டோம். கற்பனைகள் செய்தோம். தினமும் பேசினோம். ஆனால் இப்போது..."

சுஷ்மா முடிப்பதற்குள் அவன் செல்போன் அலறியது. ஆதவன் போனை எடுத்ததும் மினிஸ்டர் லைனில் இருப்பதாக அவனது பி.ஏ. தெரிவித்தான்.

"செக்ரடேரியேட்டில் இன்று மினிஸ்டருடன் ஒரு அவசர மீட்டிங் இருக்கிறது சுஷ்மா. நான் இப்போதே போயாக வேண்டும். மாலையில் கிளம்பித் தயாராய் இரு. சாவகாசமாய் பேசலாம். இப்போது மினிஸ்டர் எனக்காக காத்திருக்கிறார். வரட்டுமா?" ஆதவன் வேகமாய் பேசிக் கொண்டே ஷூவை அணிந்து கொண்டு வெளியே சென்றான்.

மாலையில் ஆதவன் தான் அலுவலகத்திலிருந்து நேரடியாக வந்து விடுவதாக கூறி சுஷ்மாவுக்கு கார் அனுப்பியிருந்தான். சுஷ்மா தயாராகி வேலையாட்களுக்கு தகவல் சொல்லிவிட்டு பிஷர்மேன் கோவ் ரிசார்ட்டை நோக்கிச் செல்கையில், இன்று இங்கு வருவதற்கு ஆதவனிடம் ஒத்துக் கொண்டிருக்கக் கூடாது என்று தோன்றியது. இனி அலைய முடியாது என்று ஆதவனிடம் கண்டிப்பாக சொல்லிவிட வேண்டும் என்று நினைக்கையில் கார் ஈ.ஸி.ஆர். ரோட்டில் இடதுபுறம் திரும்பி, ரிசார்ட்டிற்குள் சென்றது.

கடலை பார்த்த விடுதிகளையும், வண்ண வண்ண குடில்களையும், விஸ்கி அருந்தியபடி ஸ்விம்மிங் பூலில் மிதப்பவர்களையும், பீச்சில் வாலிபால் விளையாடும் வெளிநாட்டு கும்பலையும் வேடிக்கை பார்த்தபடி சுஷ்மா நடக்கையில், "ஹலோ சுஷ்மா" என்ற அர்ஜுனின் குரல் அருகில் கேட்டது.

பெரிய குடைக்கு கீழே கேமராக்களும், கும்பலும் சற்று தொலைவில் நடிகர், நடிகைகளும் தெரிய, அந்த கும்பலுக்குள்ளிருந்து அர்ஜுன் எழுந்து வந்தான்.

"உன் ஷூட்டிங் இங்குதான் நடக்கிறதா?" என்றாள் சுஷ்மா அண்ணனை பார்த்த மகிழ்ச்சியுடன்.

"ஆமாம். நான் முதன் முதலாய் டைரக்ட் செய்யும் படம். முக்கால்வாசி முடிந்துவிட்டது. இன்னும் ஒரு ஷெட்யூல்தான் பாக்கி. படம் ஹிட் ஆகணும். இல்லாட்டி அப்பா என்னை பீல்டுக்குள்ளே விட மாட்டார்."

"டோன்ட் வொர்ரி அர்ஜுன். உன் திறமைக்கு நீ நிச்சயம் வெற்றி பெறுவாய்" என்றாள் நம்பிக்கையுடன்.

"ஆமாம் நீ யாருடன் இங்கே வந்தாய்? ஆதவன் எங்கே? உனக்கு உடல்நிலை சரியில்லையா என்ன? மெலிந்திருக்கிறாயே!" என்றான் அர்ஜுன்.

இதுவரை அர்ஜுன் அவளிடம் இத்தனை அக்கறையாய் பேசியதில்லை என்பதால் எதிர்பாராத அந்த கரிசனத்தில் சுஷ்மாவின் கண்கள் கலங்கின.

அதற்குள் அர்ஜுனுக்கு "ஷாட் ரெடி" என்ற குரல் வரவே, அர்ஜுன் சுஷ்மாவிடம் கையசைத்து விட்டு படப்பிடிப்பு கும்பலை

நோக்கி நடந்தான்.

சுஷ்மா ஆதவன் குறிப்பிட்டிருந்த ரிசார்ட்டை நெருங்குகையில் தூரத்திலேயே அவளை பார்த்து விட்ட ராம்குமார் தன் கைகளை விரித்தபடி சுஷ்மாவை நெருங்கினார்.

"வெல்கம்... வெல்கம்... உங்கள் வரவால் இந்த இடம் புனிதமடைந்தது."

ராம்குமார் அவளை அணைப்பதற்குள் சுஷ்மா நாசூக்காக விலகினாள்.

"உங்கள் வரவேற்புக்கு நன்றி. கெஸ்ட் எல்லோரும் வந்து விட்டார்களா?"

"வந்து கொண்டே இருக்கிறார்கள். நீங்கள் வந்து உட்காருங்கள்."

சுஷ்மா விடுதிக்கு வெளியே லானில் போடப்பட்டிருந்த சேர்களில் ஒன்றில் அமர்ந்தாள். அவள் நினைத்தது போல் பெரிய பார்ட்டியாக இல்லாமல் மொத்தமே நாலைந்து பேர்தான் வந்திருந்தனர். இந்த விருந்திற்காகவா ஆதவன் தன்னை அத்தனை வற்புறுத்தினான் என்று எண்ணினாள்.

"சுஷ்மா, கொஞ்சம் கூல்ட்ரிங்ஸ் குடிக்கிறீர்களா?" என்றார் ராம்குமார் அவளருகில் அமர்ந்துக் கொண்டு.

அவர் கையிலிருந்த விஸ்கியைப் பார்த்தபடியே, "வேண்டாம்... ஆதவன் வந்து விட்டும்" என்றாள்.

"ஹா... ஹா... உங்கள் கணவர் அருகில் இல்லாமல் தண்ணீர் கூட குடிக்க மாட்டீர்களா? உண்மையில் ஆதவனை நினைத்தால் எனக்கு பொறாமையாய் இருக்கிறது."

சுஷ்மா அவருக்கு பதில் சொல்லாமல் இருளில் அலையை வெறித்தாள்.

"சுஷ்மா அரவிந்த்படேல் உங்களை எப்படி மிஸ் பண்ணினார் என்று தெரியவில்லை. அவர் மட்டும் உங்களை ஒரு ஸ்டார் ஆக்கியிருந்தால் இன்று பல முன்னணி நடிகைகளின் மார்க்கெட் காலியாகி இருக்கும். ஐஸ்வர்யா ராய்க்கு சரியான போட்டியாக இருந்திருப்பீர்கள்."

"ரொம்ப அபத்தமாக பேசுகிறீர்கள்" என்றாள் சுஷ்மா அலட்சியமாக.

"ப்ராமிஸ்... சத்தியம்... உண்மையைத்தான் சொல்கிறேன் சுஷ்மா. நீ எங்கோ இருக்க வேண்டியவள். இங்கிருக்க வேண்டிய பெண்ணே அல்ல."

"நான் சரியான இடத்தில்தான் இருக்கிறேன் மிஸ்டர் ராம்குமார். ஆதவனின் வீட்டை தவிர எனக்கு பொருத்தமான இடம் வேறு எதுவுமில்லை. அவனைத் தவிர எனக்கு விருப்பமானவர்களும் வேறு யாரும் இல்லை."

"எப்போதும் ஆதவன்... ஆதவன் என்பதைத் தவிர வேறு பேச மாட்டாயா சுஷ்மா?"

"ஸாரி, மனசில் இருப்பது வார்த்தையில் வருகிறது. நாம் இனி வேறு பேசலாம். என்ன பேசலாம்?" சுஷ்மா வெகுவாக யோசித்தாள். "அரசியல் பேசலாமா? அல்லது ஆன்மிகம்..."

ராம்குமாருக்கு சிரிப்பில் விஸ்கி புரையேறியது. "முன் இரவு வேளையில் கடற்கரை ஓரத்தில் கையில் மதுவுடன் அப்சரஸைப் போல் இருக்கும் பெண்ணிடம் அரசியலும், ஆன்மிகமும் பேசுபவன் எதற்கும் உதவாதவன் என்று அர்த்தம்."

"யார் அந்த உதவாத மனிதன்?" குரல் கேட்டு திரும்பிய இருவரும் ஆதவனைப் பார்த்ததும் புன்னகையுடன் எழுந்து நின்றனர். ராம்குமார் தன் வழக்கமான ஆர்ப்பாட்டத்துடன் அணைத்துக் கொள்ள, "ஏன் இவ்வளவு லேட்?" என்றாள் சுஷ்மா அவன் காதருகில் முணுமுணுப்பாக.

ஆதவனை ராம்குமார் அங்கிருந்தவர்களுக்கு அறிமுகப்படுத்தினார். வந்திருந்தவர்கள் நகரின் முக்கியப்புள்ளிகள். எனவே ஆதவன் ஆர்வத்துடன் அவர்களிடம் உரையாடினான். பேரர் டம்ளர்கள் நிறைந்த ட்ரேயுடன் அவர்களை நெருங்க, கூல்ட்ரிங்கை எடுக்கப் போன ஆதவனை தடுத்து ராம்குமார் விஸ்கி டம்ளரை அவன் கையில் திணித்தார்.

"சியர்ஸ்" என ராம்குமார் கைகளை உயர்த்த எல்லோரும் "சியர்ஸ்" என்றனர் அதே உற்சாகத்தோடு. கண்ணாடி டம்ளர்கள் மோதி சிணுங்கின.

சுஷ்மா குழப்பமும், கவலையுமாய் பார்த்துக் கொண்டிருக்க, ராம்குமார் ஆதவனிடம் பேசியபடியே அவனை ஒவ்வொரு 'பெக்'காய் குடிக்க வைத்தார். ஒரு கட்டத்திற்கு மேல் பொறுக்க முடியாமல், "ஆதி வா போகலாம்" என சுஷ்மா அவன் கைகளைப் பற்றினாள்.

தன்நிலை மறந்திருந்த ஆதவன் அவள் பேச்சை கேட்கும் நிலையில் இல்லை. சுஷ்மா வெறுப்புடன் ராம்குமாரைப் பார்த்தாள். "நீங்கள் செய்வது கொஞ்சமும் சரியில்லை. தம்பதிகளாக விருந்துக்கு வரவேண்டும் என்று வற்புறுத்தியதால் வந்தேன். என் கண்முன்னே என் கணவனை நாசமாக்குவீர்கள் என்று தெரிந்திருந்தால் வந்திருக்க மாட்டேன்."

"பெரிய வார்த்தை சொல்லாதே சுஷ்மா. பார்ட்டில ட்ரிங்க் சகஜம். உன் வீட்டு பார்ட்டிகளில் பார்த்தில்லையா நீ?"

"பார்ட்டிகளில் கூட இருப்பவர்கள் வற்புறுத்தலால் மரியாதைக்கு ஒரு சிப் அல்லது ஒரு பெக் சாப்பிடுவார்கள். இப்படி நிலை மறக்கிற வரை ஊத்திக் கொடுக்க மாட்டார்கள். ஆதவன் முதன் முதலாக நீங்கள் அளித்த பார்ட்டியில்தான் ட்ரிங்க் பண்ணினான். அப்போதே அவனை தடுத்திருக்க வேண்டும்."

"எதற்கும் முதல் தடவை என்ற ஒன்று உண்டு பேபி. ஆதவனின் ஸ்டேட்டஸிற்கும்..."

"ஸ்டாப் இட்" என்றாள் சுஷ்மா அவர்

முடிக்கும் முன். "இந்த ஸ்டேட்டஸ்ஸையும், பணத்தையும் சொல்லிச் சொல்லியே அவனை உங்கள் வலையில் விழ வைத்து விட்டீர்கள். சம்பந்தமே இல்லாமல் எங்கள் குடும்பத்திற்குள் புகுந்து எதற்காக குழப்பம் செய்கிறீர்கள்?"

"கூல்... சுஷ்மா கூல். இத்தனை கோபப்படாதே. உன் பேச்சால் இந்த கடல்காற்றே சூடாகி விட்டது பார்." ராம்குமார் மிருதுவான குரலில் பேசியபடியே அவள் தோளைப் பற்றினார்.

சுஷ்மா அவர் கைகளை விலக்கினாள். குனிந்து ஆதவனை எழுப்ப முயற்சித்தாள். ஆதவன் துவண்டு சரியவும் ராம்குமார் சிரித்தார்.

"அவசரப்படாதே டார்லிங். இங்கேயே காட்டேஜ் புக் பண்ணப்பட்டிருக்கிறது. இப்போது யாரும் டிரைவ் பண்ணும் நிலையில் இல்லை. இரவு இங்கு தங்கிவிட்டு நாளை போகலாம்."

கார் டிரைவரை ஆதவன் திருப்பி அனுப்பி விட்டது சுஷ்மாவிற்கு நினைவுக்கு வந்தது. யோசனையில் அவள் ஆழ்ந்து போக, ராம்குமார் சொன்னார். "நான் சொல்வதை கேள் சுஷ்மா. உன்னால் ஆதவனுக்கு வளமான எதிர்காலம் அமையப் போகிறது. நீ என்னை கவனித்துக் கொண்டால், நான் அவனை மிகப் பெரிய இடத்திற்கு கொண்டு போவேன்."

ஆதவனை குனிந்து எழுப்ப முயற்சித்துக் கொண்டிருந்த சுஷ்மாவின் கரங்கள் தளர்ந்தன. முதலில் தான் இங்கிருந்து வெளியேற வேண்டும். பிறகு ஆதவனை அழைத்துப் போவது பற்றி யோசிக்கலாம். ஓட்டல் ரிசப்ஷனை அணுகி டாக்ஸி வரவழைத்து போகும் எண்ணத்துடன் சுஷ்மா எழுந்து நின்றாள். கூடவே ஆள் நடமாட்டம் அற்ற சாலையில் நடு இரவில் அறிமுகமற்ற டாக்ஸி டிரைவருடன் போவது பாதுகாப்பானதுதானா என்ற கேள்வியும் எழுந்தது. படித்த, பழக்கமான ராம்குமாரே இத்தனை கேவலமாக நடந்து கொள்ளும் போது யார் எப்படியிருப்பார்கள் என்று நம்ப முடியாமல் திகைத்தாள்.

இவர்களுடன் பார்ட்டியில் கலந்து கொண்ட ஜோடிகள் விடுதிக்குள் போய் இருந்தார்கள். லானில் பெரும்பான்மை விளக்குகள் அணைக்கப்பட்டிருந்ததால் அவர்கள் இருந்த இடம் இருட்டாக தெரிந்தது. சுஷ்மாவின் செல்போன் எங்கே என்று தெரியவில்லை. ரெஸ்டாரண்ட் மூடிவிட்டதால் ஓட்டல் பணியாளர்கள் யாரும் கண்ணில் படவில்லை. ஆதவனை ஒரு பார்வை பார்த்துவிட்டு திரும்பி நடக்க முற்பட்ட சுஷ்மாவின் கையை பற்றினார் ராம்குமார். "இந்த நேரத்தில் எங்கே போகிறாய்?"

சுஷ்மா கைகளை உதறினாள். "என் வீட்டிற்கு"

"உன் ஆதவன் இங்குதானே இருக்கிறான்."

"ஆதவனை நீங்கள் தூண்டிலாக பயன்படுத்தி இருக்கலாம். ஆனால் அதில் என்னை சிக்க வைக்க முடியாது. உங்கள் பேச்சைக் கேட்டு இங்கே வந்து மயங்கிக் கிடக்கும் இந்த முட்டாள் கண் விழித்ததும் இந்த தகவலை சொல்லுங்கள். என் தன்மானத்தை நான் யாருக்காகவும் இழக்க முடியாது. அது ஆதவனுக்காக கூட"

சுஷ்மா வேகமாக நடக்க முற்பட, ராம்குமார் அதே வேகத்துடன் அவள் தோளைப் பற்றினார். "நான் சொல்வதை கேள் சுஷ்மா."

சுஷ்மா தன் சக்தி அத்தனையும் திரட்டி ராம்குமாரை பளார் என அறைந்தாள். "இனி ஒரு முறை உன் கை என் மேல் பட்டால் அடுத்தவேளை சாப்பிடக் கை இருக்காது. ஜாக்கிரதை"

விரும்பியதை எல்லாம் பணத்தால் சாதித்துக் கொண்டு சொகுசாக வாழப் பழகிய ராம்குமார் இதுவரை யாரிடமும் கை நீட்டி அடிவாங்கியதில்லை என்பதால் சுஷ்மாவின் ஒரு அறையிலேயே சுருண்டு போனார்.

விரைவாக நடந்து ரிசப்ஷனை அடைந்த சுஷ்மாவுக்கு அர்ஜுன் நினைவு வந்தது. "இங்கே சினிமா ஷூட்டிங் நடந்ததே. அந்த குரூப் போய்விட்டார்களா?" என்று விசாரித்தாள்.

"கிளம்பிக் கொண்டே இருந்தார்கள். நான் பார்க்கிறேன் மேடம்" என ரிசப்ஷனிஸ்ட் யாருக்கோ போன் செய்ய சில நிமிடங்களில் அர்ஜுனின் கார் டிரைவர் வந்தான். ரொம்ப நாட்களாக அவர்கள் வீட்டில் வேலை பார்க்கும் அந்த டிரைவர் சுஷ்மாவைப் பார்த்ததும் "மேடம் நீங்களா? இந்த நேரத்தில் இங்கே எப்படி?" என்றான் தயக்கத்துடன்.

அவன் கேள்விக்கு பதிலளிக்காத சுஷ்மா

### அமெரிக்காவில் பலூன் ஊர்வலம்!

அமெரிக்காவில் உள்ள நியூயார்க் நகரில் ஆண்டுதோறும் கொண்டாடப்படும் விழாக்களில் 'தேங்க்ஸ் கிவிங் பரேட்' என்ற விழாவும் நடைபெறுகிறது. அமெரிக்கக் கலாசாரத்தை வெளிப்படுத்தும் விதமாக நடத்தப்படும் இந்த விழாவில் விதவிதமான ஆடை அலங்காரங்களுடன் ஊர்வலம் செல்வார்கள். இந்த ஊர்வலத்தில் இசை நிகழ்ச்சி இடம்பெறும்.

இந்த ஊர்வலத்தில் ஒரு பகுதியாக பலூன் ஊர்வலமும் நடத்தப்படும். பிரசித்திப் பெற்ற கேலிச் சித்திரங்களுடன் கூடிய ஹீலியம் பலூன்களை தயாரித்து மேலே பறக்க விட்டபடியே ஊர்வலமாகச் செல்வார்கள். கண்களைக் கவரும் வகையில் அமைந்துள்ள இக்காட்சி பலூன் ஊர்வலத்தை 'ஹை ஆர்ட்' என்று அழைக்கிறார்கள். ஜப்பான்

"அர்ஜுன் எங்கே?" என்றாள் அவனிடம்.

"அர்ஜுன் சார் ஷூட்டிங் முடிந்து அவருடைய நண்பர்களுடன் இவ்வளவு நேரம் இங்கேதான் இருந்தார். இப்போதுதான் அவர் காரை நம் வீட்டில் நிறுத்த சொல்லிவிட்டு ப்ரண்ட்டுடன் போகிறார்."

"சரி வா. நானும் நம் வீட்டிற்குத்தான் போகிறேன்" என்றாள் சுஷ்மா.

கார் சாவியுடன் பணிவாக சுஷ்மாவுக்கு முன்னால் நடந்த டிரைவர் "ஐயா, வரவில்லையா மேடம்?" என்றான் மறுபடி.

"ஐயாவும் நானும் ஒரு பார்ட்டிக்கு வந்தோம். நாளை இங்கு ஒரு பிஸினஸ் மீட் இருப்பதால் ஐயா காட்டேஜ்ஜிலேயே தங்கிக் கொண்டார்" என்ற சுஷ்மா, அதற்கு மேல் பேச்சை வளர்க்காமல் காரில் ஏறி அமர்ந்தாள்.

பெற்றோர் வீட்டிற்கு சுஷ்மா போய் சேர்ந்தபோது அவர்கள் உறங்கி இருந்தனர். கதவைத் திறந்துவிட்ட வேலையாளிடம் அவள் அறையைத் திறக்க சொல்லி படுக்கையில் விழுந்ததும் அடிவயிற்றில் இருந்து துக்கம் பந்தாய் எழுந்து தொண்டையை கவ்வியது. கண்களிலிருந்து நீர் சரமாய் இறங்கியது.

ஆதவன் தன்முன் நின்றிருந்த அத்தையை ஏறிட்டுப் பார்க்க முடியாமல் தலை குனிந்திருந்தான். கண்ணம்மா அதே கேள்வியை மறுபடி அழுத்தமான குரலில் கேட்டாள். "சொல்லு ஆதவா, சுஷ்மா எங்கே?" அந்த கேள்வி பிரமாண்டமாய் எழுந்து எதிரில் நிற்க, ஆதவன் தெரியாதென தலையசைத்தான்.

"வாயைத் திறந்து சொல்லு ஆதவா. இப்படி தலையாட்டினால் என்ன அர்த்தம்?"

இரண்டு நாட்களுக்கு முன்பு நடந்த பார்ட்டியில் ராம்குமாரும், அவருடன் இருந்தவர்களும் வற்புறுத்தவே மரியாதைக்காக குடிக்கத் தொடங்கினான் ஆதவன். பிறகு என்ன ஆனது என்றே தெரியவில்லை. மறுநாள் வெய்யில் சுள்ளென்று முகத்தில் அடித்த பிறகுதான் கண்விழித்தான். கடற்கரை மணலிலேயே உறங்கி விட்டதை உணர்ந்து அதிர்ச்சியுடன் எழுந்து அமர்ந்தான். ஓட்டலில் விசாரித்த போது ராம்குமாரும், பார்ட்டிக்கு வந்தவர்களும் விடியற்காலையிலேயே கிளம்பி போய்விட்டதாக சொன்னார்கள். சுஷ்மா எப்போது போனாள், யார் அவளை டிராப் பண்ணினார்கள் என்று அவன் விசாரித்த போது ரிசப்ஷனில் இருந்தவன் தெரியாது என்றான்.

ஆதவனின் காரை டிரைவர் ஓட்டலிலேயே நிறுத்தி விட்டு போயிருந்ததால் ஆதவன் தன் காரில் வீடு நோக்கி செல்கையில் வெட்கமும், அவமானமும் அவனை பிடுங்கித் தின்றன. ஒரே இரவில் எத்தனை கேவலமாகிப் போனேன்? எப்படி என் சுயஅறிவை இழந்தேன்? சுஷ்மா கூட ஏன் என்னை இந்நிலையில் விட்டுவிட்டுப் போனாள்? இப்போது போய் எப்படி அவள் முகத்தைப் பார்ப்பேன்?

ஆதவன் வீட்டிற்கு போகாமல் மாலை வரை மனம்போன போக்கில் சுற்றித் திரிந்தான். மாலை கபாலீஸ்வரர் கோவில் தெப்பக்குளத்தின் படிக்கரையில் அமர்ந்திருக்கையில் தானும் சுமைதாங்கியை தேடி வந்திருக்கிறோம் என்ற நினைவில் மனம் கரைந்தது. இருட்டும் வரை அங்கேயே அமர்ந்திருந்து விட்டு இரவில் வீட்டிற்கு செல்கையில் மனம் தெளிவடைந்திருந்தது.

சுஷ்மாவை எப்படியும் சமாளித்து விடலாம் என்ற தெம்புடன் ஆதவன் வீட்டிற்கு வந்தபோது சுஷ்மா வீட்டில் இல்லை. வேலையாளிடம் விசாரித்தபோது பார்ட்டிக்கு கிளம்பிப் போனவள் வீட்டிற்கு திரும்பி வரவில்லை என்று தெரிந்தது. அவள் பெற்றோர் வீட்டிற்கு போயிருப்பாளா என்ற எண்ணத்தில் ஆதவன் அரவிந்த்படேலின் வீட்டு எண்ணை டயல் செய்தான். போனை எடுத்த வேலையாள் சுஷ்மா வீட்டில் இல்லை என்றதும் ஆதவனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. ஒருவேளை தன் வீட்டிற்கு போயிருக்கக் கூடுமோ என்ற நப்பாசையில் சரவணனின் செல்லிற்கு போன் செய்தபோது "ஆதவா, எப்படியிருக்க? சுஷ்மாவுடன் வீட்டிற்கு வா ஆதவா. அம்மா உன்னைப் பார்த்து நாளாச்சுன்னு சொல்லிட்டே இருக்காங்க"



கலைஞர் டகாஷி முரகாமி என்பவர் வடிவமைத்தப் பலூன்கள் தான் இந்த ஊர்வலத்தில் பறக்க விடப்படுகின்றன.

குஜராத்தில் பொங்கல் திருநாளின் போது வீட்டின் மாடிகளில் இருந்து குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை வானில் வண்ண வண்ண காற்றாடிகளை விட்டு மகிழ்வார்கள். அதைபோல நியூயார்க்கில் இந்தப் பலூன் ஊர்வலம் மிகவும் பிரபலமானது.

என்றான்.

அவனுக்கு தகுந்த பதிலை சொல்லிவிட்டு போனை வைத்த போது கண்மங்கி இருட்டிக் கொண்டு வந்தது. சுஷ்மாவுக்கு பிடிக்காத இடத்திற்கு வற்புறுத்தி அழைத்துப் போனேன். அங்கே அவளை கண்டுகொள்ளாமல் எக்கச்சக்கமாக குடிக்க ஆரம்பித்துவிட்டான் என்பது பெரிய தவறுதான். ஆனால் அதற்காக சுஷ்மா சொல்லாமல் கொள்ளாமல் போய்விடுவாள் என்பதை அவனால் நம்ப முடியவில்லை.

சுஷ்மாவுக்கு நெருக்கமான தோழி, உடன் படித்தவர்கள் என்று யாருடனும் அவள் நெருக்கமாக பழகி அவன் பார்த்ததில்லை. எனவே சுஷ்மா சென்றிருக்கக் கூடிய இடம் என்று எதையும் ஊகிக்கக் கூட முடியாத சூழ்நிலையில் விபரீத கற்பனைகள் எழுந்து அலைக்கழித்தன. இரண்டு நாட்கள் ஆதவன் நரக வேதனையை அனுபவித்த பின்னர், இனி போலீசுக்கு போவதைத்தவிர வேறு வழியில்லை என்ற முடிவுடன் கிளம்பிய போதுதான் அத்தை அவன் எதிரில் வந்து நின்றாள், சுஷ்மா எங்கே என்கிற கேள்வியுடன்.

## 15

சுஷ்மா காணாமல் போன விஷயம் அத்தைக்கு எப்படித் தெரிந்தது என்ற வியப்புடன் ஆதவன் கேட்டான். "சுஷ்மா வீட்டில் இல்லை என்பது உனக்கு எப்படி அத்தை தெரியும்?"

"சுஷ்மா வீட்டில் இருந்திருந்தால் உனக்கு ஏன் கடிதம் அனுப்பியிருக்கப் போகிறாள்?"

"கடிதமா?"

"ஆமாம். சுஷ்மா வீட்டு டிரைவர் நம் வீட்டிற்கு வந்து சுஷ்மா கொடுக்க சொன்னதாக ஒரு கவரை கொடுத்து விட்டுப் போனான். கவரின் மீது உன் பெயர் இருந்ததால் யாரும் பிரிக்கவில்லை. ஆனால் சுஷ்மா உனக்கு ஏதாவது சொல்ல வேண்டும் என்றால் போன் செய்திருக்கலாம். அதை விட்டுவிட்டு நம் வீட்டிற்கு ஏன் கடிதம் அனுப்ப வேண்டும்? அப்படி என்றால் சுஷ்மா இப்போது எங்கேயிருக்கிறாள் என்று குழப்பமாக இருந்தது. நேரிலேயே வந்து கேட்டுவிடலாம் என்றுதான் சரவணன் காலேஜ் போகும்போது என்னை இங்கே இறக்கிவிட்டுப் போக சொன்னேன்."

அத்தையின் கையில் இருந்த கடிதத்தை வாங்கிய ஆதவன் அதிலிருந்த சுஷ்மாவின் கையெழுத்தைப் பார்த்ததும் புதிய தெம்புடன் படிக்க ஆரம்பித்தான்.

'ஆதி,

வாழ்க்கையில் முதன் முறையாக என் கணிப்பு தவறிவிட்டது என்ற வருத்தத்துடன் இந்த கடிதத்தை எழுதுகிறேன். உன்னை விரட்டிப்பிடித்து நான் காதலித்ததற்கு காரணம், உன் அமைதியான குடும்ப வாழ்வின் பிரதிபலிப்பு உன் முகத்தில் தெரிந்தது. உன்னை மணந்து கொண்டால் எனக்கும் அப்படி ஒரு வாழ்க்கை அமையும் என்று எண்ணினேன். இயற்கையும், கடவுளும் எளிமையைத்தான் விரும்புவார்கள் என்றார் அரிஸ்டாட்டில். வாழ்க்கையில் பிரச்சினைகளையும், மகிழ்ச்சியையும் பரபரப்பின்றி எதிர்கொள்ளும் உன் குடும்பத்தினரின் எளிமை எனக்கு கடவுள் தரிசனம் கிடைத்தாற்போல் இருந்தது. அதுவும் அத்தையின் வளர்ப்பில் வந்த, அத்தையிடம் பிரியம் வைத்திருக்கும் நீ ஒருபோதும் தவறான வழியில் செல்லமாட்டாய் என்று எண்ணினேன். ஆனால் நேற்று என் நம்பிக்கை முழுக்க பொய்யாகி விட்டது ஆதவன்.

ராம்குமார் உன்னை தவறான பாதையில் அழைத்துச் செல்கிறான் என்று நான் எச்சரித்துக் கொண்டே இருந்தேன். நீ என் பேச்சை அலட்சியம் செய்தாய். ஆனால் நேற்றைய இரவில் என் பாதுகாப்பையும் கூட அலட்சியம் செய்வாய் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. குடித்துவிட்டு நீ மயங்கி விழுந்ததும் ராம்குமார் என்னிடம் மிக கேவலமாக நடந்து கொண்டான். நண்பனாக உன்னிடம் உறவாடிக் கொண்டே அவன் என்னிடம் அப்படி நடந்து கொண்டதற்கு காரணம் நீதான். யாரை எங்கே நிறுத்த வேண்டும் என்பதை உணர மறுத்த உன் முட்டாள்தனம்தான். நடந்த சம்பவத்திற்கு முழு காரணமும் நீதான். இத்தனைநாள் எனக்கு கிடைத்த நல்ல விஷயங்களுக்கு எல்லாம் நீதான் காரணமாய் இருந்தது போல இந்த தீமைக்கும் நீயே காரணமாகிப் போனது என் துரதிஷ்டம் ஆதி.

என் பெற்றோரின் பணத்தையும், அந்தஸ்தையும் துறந்து உன்னை மட்டுமே விரும்பி மணந்தவள் நான். உன் மீது எனக்கு கோபத்தை விட வருத்தம்தான் அதிகமாக இருக்கிறது. என் பழைய ஆதியை என்றாவது திரும்ப பார்க்க முடியுமா என்ற ஏக்கம்தான் அதிகமாக இருக்கிறது.

ஆதி உன்னிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டும் என நான் சிலநாட்களாக சொல்லிக் கொண்டிருந்தேன். நினைவிருக்கிறதா? அதை இப்படி கடிதத்தில்தான் சொல்ல வேண்டியிருக்கும் என்று நான் நினைக்கவே இல்லை. ஆதி, நீ அப்பாவாகப் போகிறாய். என் வயிற்றில் வளரும் நம் உயிருக்கு இப்போது இரண்டு மாதம். இதை நேரில் சொல்லி உன் மகிழ்ச்சியை ரசிக்க வேண்டும். நாம் இருவரும் நம் இருவர் வீடுகளுக்கும் இனிப்புடன் போய் செய்தி சொல்ல வேண்டும் என நிறைய கற்பனைகள் வைத்திருந்தேன். அது கடைசியில்

இப்படி முடிந்து போகும் என்று நான் நினைக்கவில்லை. நல்லவேளையாக அன்று பார்ட்டியில் இருந்து திடீரென்று கிளம்பி வீட்டிற்கு போனதற்கு அம்மாவிடம் சொல்வதற்கு இந்த காரணம் இருந்தது.

ஒரு ஆச்சரியம் தெரியுமா? என் அம்மா கூட இப்போது மாறிவிட்டார்கள். தன் வேலைகளை எல்லாம் ஒதுக்கி விட்டு என்னை நன்றாக கவனித்துக் கொள்கிறார்கள். என்னிடம் காட்டத் தெரியாத பிரியம் என் வயிற்றிலிருக்கும் குழந்தை மீது ஏற்பட்டது அதிசயமாகத்தான் இருக்கிறது.

நேற்று என் அப்பா ஏதோ வேலையாக டெல்லி கிளம்பினார். அவருடன் நானும் அம்மாவும் கிளம்பி வந்திருக்கிறோம். இங்கு ஜந்தர்மந்தரிலுள்ள எங்கள் வீட்டில் நானும் அம்மாவும் கொஞ்சநாள் தங்கியிருக்கலாம் என்று நினைத்திருக்கிறேன்.

–சுஷ்மா.'

ஆதவன் கண்களில் இருந்து வழிந்த நீர் கடிதத்தை நனைக்க, அத்தை அவனை உலுக்கினாள். "என்ன விஷயம் ஆதவா? யாருக்கேனும் உடம்பு சுகமில்லையா என்ன?"

ஆதவன் தலையசைத்தான். "சுஷ்மாவுக்குத்தான்..."

"என்ன உடம்புக்கு?" என்றாள் அத்தை பதற்றத்துடன்.

"கர்ப்பமாக இருக்கிறாள் அத்தை"

அத்தையின் முகம் மலர்ந்தது உடனடியாக. "நல்ல விஷயத்தை சொல்றப்ப இப்படி அழுகையோட பயமுறுத்தற மாதிரியா சொல்லுவே! என்ன பிள்ளையோ போ!"

ஆதவன் பதில் சொல்லாமல் அத்தையின் மடியில் சாய்ந்து கண்களை மூடினான். அத்தையின் தளர்ந்த விரல்கள் அவன் தலையை வருடுகையில் மனதின் நுட்பமான பகுதியை தொட்டு விட்ட உணர்வில் மீண்டும் கண்களில் நீர் கோர்த்து நின்றது. மடியில் ஈரம் உணர்ந்த அத்தை, "என்ன விஷயம் ஆதவா?" என்றாள் கனிவாக.

"உன்னிடம் என்னால் பொய் பேச முடியாது அத்தை. அதனால் எதையும் கேட்காதே" என்றான் குரல் கரகரக்க.

தன் மடியில் படுத்து அழும் ஆதவன் அத்தைக்கு சிறுவயதில் கிரிக்கெட் பேட்டிற்கு அடம்பிடித்து அழுதவனாக தெரிந்தான். அப்பா மருத்துவப்படிப்பு வேண்டாம் என்றதும் குப்புறப்படுத்து அழுத பள்ளி மாணவனாக தெரிய அத்தை கருணையுடன் ஆதவன் முதுகை வருடினாள்.

"இத்தனை பெரிய உத்தியோகம் பார்க்கிற பிள்ளை இன்னும் சிறு பையன் போல நடந்துக்கலாமா? எழுந்திரு ஆதவா" என்றாள் அத்தை செல்லக் கண்டிப்புடன்.

"சிறுவயதை இடையில் மறந்து போனதால் வந்த குழப்பம்தான் அத்தை. இனி சரியாகி விடும்" என்றான் அவன்.

"இன்னும் நான் கேட்ட கேள்விக்கு நீ பதில் சொல்லலையே! சுஷ்மா எங்கே ஆதவா?"

"அவளுடைய அம்மா, அப்பாவுடன் டெல்லி போயிருக்கிறாள் அத்தை" என்றான் ஆதவன் பதில் கூற முடிந்த திருப்தியுடன்,

"ஓ டெல்லி போறதை தெரிவிக்கத்தான் லெட்டர் கொடுத்தனுப்பி இருந்தாளா?"

"ஆமாம் அத்தை. என் செல்போன் தொலைந்து போய்விட்டது. அதனால்தான்" என்றான் ஆதவன் சமாளிப்பாக.

"பிள்ளைத்தாய்ச்சிப் பெண் எதுக்கு டெல்லிக்கும், சென்னைக்கும் அலையணும்?" என்றாள் அத்தை கவலையுடன்.

"இனி அலைய மாட்டாள் அத்தை. மாலை ப்ளைட்டில் நான் டெல்லி போகிறேன். சுஷ்மா ஒரு வேளை டெல்லியிலேயே தங்க நினைத்தால் நான் டிரான்ஸ்பர் வாங்கிக் கொள்வேன். அல்லது அவள் சென்னைக்கு வரலாம் என்றால் வந்துவிடுவோம். அத்தை சுஷ்மாவுக்கு திருமணமானதிலிருந்தே நம் வீட்டுடன் சேர்ந்திருக்கத்தான் ஆசை. அத்தை, இப்படி செய்தால் என்ன? நம் வீட்டை கொஞ்சம் விரிவுபடுத்திக் கட்டினால்? பின்பக்கமும் மேலேயும் இடம் இருக்கே!"

"செய்ப்பா... தாராளமாய் செய். நீங்கள் எல்லாம் கூடவே இருந்தால் அண்ணாவும், அண்ணியும் ரொம்ப சந்தோஷப்படுவார்கள்" என்றாள் மகிழ்ச்சியுடன்.

"அப்ப உனக்கு சந்தோஷம் இல்லையா?" ஆதவன் சீண்டினான்.

"போடா அரட்டை" அத்தை மனம் விட்டு சிரிக்க, ஆதவன் அத்தையை விரட்டினான். "சீக்கிரம் உன் மகளுக்கு மாங்காய் தொக்கு, இஞ்சிபுளின்னு எதையாவது செய்து கொடு அத்தை. ப்ளைட்டுக்கு நேரமாச்சு."

"இதோ..." அத்தை சமையலறைக்கு விரைந்தாள்.

ஆதவன் வெகுநாட்களுக்கு பிறகு மனம் லேசான உணர்வில் துணிகளை 'பேக்' செய்யத் தொடங்கினான்.

அவன் பதவியில் அமர்ந்த பிறகு சந்தித்த முக்கிய புள்ளிகள், அவன் வேலை ஏற்படுத்திய கர்வம் எல்லாம் மறைந்து போக சுஷ்மாவை முதன்முதலில் பைக்கில் செல்லும் போது சந்தித்த ஆதவனாய் மனம் உல்லாசத்தில் மிதந்தது.

**(முற்றும்)**